මධ්‍යම සංස්කෘතික අරමුදල
மத்திய கலாசார நிதியம்
CENTRAL CULTURAL FUND

වාර්ෂික වාර්තාව
ஆண்ட றிக்கை
ANNUAL REPORT

2016

ශ්‍රී ලංකාවේ ශ්‍රී විභූතිය රැකගැනීමට අත දෙන්න
இலங்கையின் மேன்மையைப் பாதுகாப்பதற்கு உதவுங்கள்
Help save the Glory that is Sri Lanka

මධ්‍යම සංස්කෘතික අරමුදල
மத்திய கலாசார நிதியம்
CENTRAL CULTURAL FUND

ශ්‍රී ලංකාවේ ශ්‍රී විභූතිය රැකගැනීමට අත දෙන්න
இலங்கையின் மேன்மையைப் பாதுகாப்பதற்கு உதவுங்கள்
Give A Hand To Protect Sri Lanka Glory

වාර්ෂික වාර්තාව
ஆண்ட றிக்கை
ANNUAL REPORT

2016

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

පටුන

		පිටුව
01	ආයතනික පැතිකඩ/ ක්‍රියාවට නැංවීමේ සාරාංශය	01-06
02	ප්‍රගතිය හා ඉදිරි දැක්ම	07-41
03	වසරේ සමස්ථ මූල්‍ය කාර්ය සාධනය	42-81
04	කාර්ය සාධන දර්ශකය	82
05	තිරසර සංවර්ධනය (SDG) අරමුණු සපුරා ගැනීමේ කාර්ය සාධනය	83-84
06	මානව සම්පත් පැතිකඩ	85
07	අනුකූලතා වාර්තාව	86-92

பொருளடக்கம்

		பக்கம்
01.	நிறுவன விபரம்/நிறைவேற்றுச் சுருக்கம	93-97
02.	முன்னேற்றம் மற்றும் முன்னோக்கு	98-134
03.	வருடத்தின் மொத்த நிதிச் செயலாற்றுகை	135-179
04.	செயற்றிறன் குறிகாட்டிகள	180
05.	நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைப் (SDG) பூர்த்தி செய்வதற்கான செயற்றிறன	181-182
06.	மனித வள விவரம	183-184
07.	இணக்கப்பாட்டு அறிக்கை	185-191

Contents

		Page
01.	Corporate Profile/ Execution Summary	192-196
02.	Progress and the Future Outlook	197-235
03.	Total Financial Performance in the year	236-273
04.	Performance Indicators	274
05.	Performance in Achieving the Sustainable Development Goals (SDG)	275-276
06.	Human Resource Profile	277-278
07.	Compliance Report	279-286

01. நிறுவன விபரம்/நிறைவேற்றுச் சுருக்கம்

1.1 அறிமுகம்

இலங்கையில் கலாசார மற்றும் மத நினைவுச்சின்னங்களை ஊக்குவிப்பதற்கும் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உள்ள கலாசார நினைவுச்சின்னங்களின் மத மற்றும் கலாசார நடவடிக்கைகளின் அபிவிருத்தி, மறுசீரமைப்பு, பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றில் ஏற்படும் செலவினங்களைப் பூர்த்தி செய்வதற்கும் கலைஞர்கள், கைவினைஞர்கள், எழுத்தாளர்கள், ஓவியர்கள், இசைக்கலைஞர்கள் மற்றும் கலாசார நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் ஈடுபட்டுள்ள பிற நபர்களுக்கு நிதி உதவி வழங்கவும், கலாசார மற்றும் மதத் துறைகளில் நாட்டிற்கு சேவை செய்தவர்களுக்கு மானியங்களை வழங்கவும் 1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதியச் சட்டத்தின் மூலம் மத்திய கலாசார நிதியம் நிறுவப்பட்டது.

அப்போதைய கலாசார மற்றும் கலை அமைச்சின் கீழ் இருந்த மத்திய கலாசார நிதியமானது 2015.09.21 ஆம் திகதிய 1933/13 ஆம் இலக்க வர்த்தமானியின் படி, கல்வி அமைச்சிற்கு மாற்றப்பட்டது. விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் மத்திய கலாசார நிதியத்தின் பிரதான நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றுவதோடு 2016 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சின் கீழ் நிர்வாகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மத்திய கலாசார நிதியத்தின் நிர்வாகக் கட்டமைப்பின் படி, அபிவிருத்தி, கட்டுப்பாடு மற்றும் நிதி ஆகிய 03 பிரதான பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன், மூன்று பணிப்பாளர்கள் அந்தத் துறைகளின் தலைவர்களாகப் பணியாற்றி வருகின்றனர். பணிப்பாளர் நாயகம் மத்திய கலாச்சார நிதியத்தின் தலைவராக இருப்பதோடு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது பணிப்பாளர் நாயகத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, சட்டப் பிரிவு ஒன்றும் உள்ளதோடு அது நிர்வாகப் பிரிவின் கீழ் செயற்படுகின்றது.

திரட்டு நிதியால் தொழிற்படாத மத்திய கலாசார நிதியமானது, வரலாற்றுப் பாரம்பரியமிக்க இடங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா நுழைவுச்சீட்டுக்களை வழங்குவதன் மூலம் வருமானம் ஈட்டுவதோடு அதன் மூலம் ஊழியர்களின் சம்பளம் மற்றும் பிற செலவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்படி, 2016 ஆம் ஆண்டில், ரூபா 3,758,060,292.00 நிதி வருமானமாகப் (நுழைவுச்சீட்டுகள் மற்றும் பிற வருமானம்) பெறப்பட்டுள்ளதோடு, மேலும் ரூபா 2,215,396,896.70 செலவுத் தொகையாகச் செலவிடப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில் மத்திய கலாசார நிதியத்தின் கீழ் 21 கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், 2016 ஆம் ஆண்டு இரத்தினபுரி, யாழ்ப்பாணம், திருகோணமலை, பதுளை ஆகிய கருத்திட்டங்கள் புதிய கருத்திட்டங்களாக ஆரம்பிக்கப்பட்டன.

அதன்படி, 2016 ஆம் ஆண்டுக்கு, 99 அகழ்வாராய்ச்சி மற்றும் தொல்பொருளியல் ஆய்வுப் பணிகள் மற்றும் 211 பாதுகாப்பு அமைவிடங்கள் என 310 அமைவிடங்கள் முன்மொழியப்பட்டன. இவற்றில், 272 அமைவிடங்களில் பணிகளைத் தொடங்க முடிந்ததோடு, ஆண்டு இறுதியில், 11 அகழ்வாராய்ச்சித் தளங்கள் மற்றும் 22 பாதுகாப்பு அமைவிடங்கள் என 33 அமைவிடங்களில் பணிகள் முடிக்கப்பட்டன.

இவ் ஆண்டில், எதிர்பார்க்கப்பட்ட 165,168.60 வேலை அலகுகளில் 140,816.48 வேலை அலகுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. அதன்படி, பௌதீக முன்னேற்றம் 67.8% ஆகும். இப்பணிகளை நிறைவேற்றும் வகையில் ரூபா 537,440,191.77 செலவிடப்பட்டதோடு மொத்த செலவினத்தின் நிதி முன்னேற்றம் 48.6% ஆகும்.

1.2 நிறுவனத்தின் நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்

- **நோக்கு**

  இலங்கையின் கலாசார மரபுரிமைகளை உலகளாவிய அதிசயமாக மாற்றுதல்

- **செயற்பணி**

  இலங்கையின் கலாசார மரபுரிமைகளின் ஆராய்ச்சி, பராமரிப்பு, பாதுகாப்பு, அபிவிருத்தி, மேம்பாடு மற்றும் நிலையான கலாசார பொருளாதார செயற்றிறன் ஆகியவற்றின் மூலம் கீழைத்தேய கலாசார மரபுரிமைகளின் முகாமைத்துவத்தில் முதன்மையான நிறுவனமாக விளங்குதல்.

- **நோக்கங்கள்**

1. தொல்பொருளியல் ஆய்வு, ஆராய்ச்சி, அகழ்வாராய்ச்சி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை மேற்கொள்ளல்.
2. தொட்டுணரக்கூடிய மற்றும் அருவமான கலாசார மரபுரிமைகளின் ஆராய்ச்சி, பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் மேம்பாடு.
3. நிறுவனத்தின் மனித வள அறிவை மனப்பாங்குகள் மற்றும் திறன்கள் கொண்ட குழுவாக மாற்றுதல்.
4. நிறுவனத்திற்குச் சொந்தமான தகவல்களைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், பகிர்தல் மற்றும் காட்சிப்படுத்துதல் ஆகியவற்றுக்கான நிலையங்களை உருவாக்குதல், மேம்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
5. கலாசார விழுமியங்களைப் பாதுகாத்து, கீழைத்தேய மற்றும் மேலைத்தேய சுற்றுலா ஈர்ப்பின் ஊடாக இலங்கையின் கலாசார மரபுரிமைகளை மேம்படுத்துதல்.
6. நிறுவனத்தின் வருமான இலக்குகளை அடுத்து வரும் நான்கு ஆண்டுகளில் 30% அதிகரித்து அதன் மூலம் நிறுவனத்தின் சேவைகளை மிகவும் திறமையாகவும் அதிக வாடிக்கையாளர் திருப்தியுடன் பேணல்.
7. அடையாளங் காணப்பட்ட கலாசார விழுமியங்கள் மற்றும் உரிய முறைமைகளை சமூகமயப்படுத்தல்.
8. பல மத மற்றும் பல இன நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமையை மேம்படுத்துதல்.
9. தேசிய கொள்கைகளின்படி சர்வதேச நிறுவனங்கள் மற்றும் நிறுவன ஒத்துழைப்பை உருவாக்குதல்.
10. நவீன சமுதாயத்திற்கு ஏற்ற வகையில் நிறுவனத்தின் சேவைகளை நவீனமயமாக்குதல் மற்றும் பல்வகைப்படுத்துதல்.

1.3 செயற்பாடுகள் மற்றும் குறிக்கோள்கள்

- கலாசார முக்கோணத்திற்குள் உள்ள கலாசார நினைவுச்சின்னங்கள் மற்றும் கலாசார முக்கோணம் தவிர வேறு ஒரு பகுதியில் உள்ள பொது நலனுக்காக விருத்தி செய்ய அவசியம் என சபையினால் கருதப்படும் பிற கலாசார நினைவுச்சின்னங்களின் அபிவிருத்தியின் போது ஏற்படும் செலவுகளைப் பொறுப்பேற்றல்.

- ஜேதவனா தூபி கருத்திட்டம் மற்றும் அதனை ஒத்த பிற கருத்திட்டங்கள் அனைத்தினதும் செலவுகளைப் பொறுப்பேற்றல்.
- இலங்கைக்குள் அல்லது வெளிநாட்டில் சமய நடவடிக்கைகளை ஊக்குவிக்க நடவடிக்கைகளை எடுத்தல்.
- மதத்தை மேம்படுத்தல், மதத் தலங்கள் அல்லது மத பழக்கவழக்கங்களை பராமரிப்பதற்கு நிதிஉதவி வழங்குதல்.
- கலாசாரம் மற்றும் மதம் சார்ந்த துறைகளில் தேசத்திற்கு சேவையாற்றியவர்களுக்கு விருதுகள் வழங்குதல்
- கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஓவியர்கள், இசைக்கலைஞர்கள், சிற்பிகள் மற்றும் கலாசார நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் ஈடுபட்டுள்ள பிறருக்கு நிதிஉதவிகளை வழங்குதல்.
- சபையின் அபிப்ராயத்தின்படி பொதுமக்களுக்கு நன்மை அல்லது நன்மை பயக்கும் மற்ற மத அல்லது கலாசார நடவடிக்கைகளுக்கு நிதிஉதவி வழங்குதல்

1.4 நிறுவன வரைபடம்



1.5 மத்திய கலாசார நிதியத்தின் கீழ் செயற்படும் முக்கிய பிரிவுகள்/கருத்திட்டங்கள்

➢ **நிதியத்தின் கீழ் உள்ள முக்கிய பிரிவுகள்**

- அபிவிருத்திப் பிரிவு
- நிர்வாகப் பிரிவு

I. சட்டப் பிரிவு
II. போக்குவரத்துப் பிரிவு

நிதி பிரிவு

I. வழங்கல் பிரிவு
II. களஞ்சியப் பிரிவு

- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு (பணிப்பாளர் நாயகத்தினால் நிர்வகிக்கப்படுகிறது.)

➢ நிதியத்தின் கீழ் செயற்படும் முக்கிய கருத்திட்டங்கள்

- அபயகிரிய கருத்திட்டம்
- ஜேதவனா கருத்திட்டம்
- மகாவிஹாரைக் கருத்திட்டம்
- சீகிரியா கருத்திட்டம்
- பொலன்னறுவை அலாஹான பிரிவெனா கருத்திட்டம்
- கண்டி கருத்திட்டம்
- தம்புள்ளை கருத்திட்டம்
- யாப்பஹுவ கருத்திட்டம்
- தம்பதெனிய கருத்திட்டம்
- பண்டுவஸ்நுவர கருத்திட்டம்
- குருநாகல் கருத்திட்டம்

(யாப்பஹுவ, தம்பதெனிய, பண்டுவஸ்நுவர: வடமேல் மாகாண கலாசார சதுக்க கருத்திட்டங்கள்)

- திஸ்ஸமஹாராம கருத்திட்டம்
- மாத்தறை கருத்திட்டம்
- ரம்பா விஹாரை கருத்திட்டம்
- காலி கருத்திட்டம்

(திஸ்ஸமஹாராம, மாத்தறை, ரம்பா விஹாரை, காலி: ருஹுனு கலாசார வலயம்)

- கம்பஹா கருத்திட்டம்
- கேகாலை கருத்திட்டம்
- கொழும்பு கருத்திட்டம்
- இரத்தினபுரி கருத்திட்டம்
- மொனராகலை கருத்திட்டம்
- யாழ்ப்பாணக் கருத்திட்டம்
- அதபத்து அலுவலகம்(வெளியீட்டுப் பிரிவு)
- தேசிய மாதிரி உருவமைப்பு மத்திய நிலையம்
- திருகோணமலை கருத்திட்டம்
- பதுளை கருத்திட்டம்

1.6 மத்திய கலாசார நிதியத்தின் கீழ் காணப்படும் நிதி

2016 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் முன்னேற்றம் (2016.12.31)

தொட.இ	விபரம்	எதிர்பார்க்கப்பட்ட வருமானம்(ரூ)	உண்மையான வருமானம்(ரூ)
01	நுழைவுச்சீட்டு விற்பனை வருமானம்	3,000,000,000.00	3,445,925,208.00
02	மாதிரி விற்பனை வருமானம்	30,000,000.00	2,608,009.00
03	வெளியீட்டு விற்பனை வருமானம்	15,000,000.00	8,846,068.00
04	அச்சு விற்பனை வருமானம்	15,000,000.00	13,155,989.00
05	முதலீட்டு வருமானம்	115,000,000.00	233,863,909.00
06	ஏனைய வருமானம்	25,000,000.00	53,661,110.00

தொட.இ	விபரம்	முன்னேற்றம் (%)
01	மீண்டெழும் செலவினம்	72.65
02	மூலதன செலவினம்	23.17
03	வருமானம்	117.44

வருமானம் (%)



முன்னேற்றம் மற்றும் முன்னோக்கு

2.1 நிதி முன்னேற்றம்

2015 - 2016 ஆம் ஆண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் முன்னேற்றம்

தொட.இ	விபரம்	2015 ஆம் ஆண்டு		2016 ஆம் ஆண்டு	
		எதிர்பார்க்கப்பட்ட வருமானம்(ரூ)	உண்மையான வருமானம்(ரூ)	எதிர்பார்க்கப்பட்ட வருமானம்(ரூ)	உண்மையான வருமானம்(ரூ)
01	ஆளணியினர்களின் சம்பளம்	1,237,000,000.00	1,451,793,061.99	1,500,000,000.00	1,426,124,047.56
02	பயண செலவுகள்	27,000,000.00	15,001,925.72	50,000,000.00	19,973,852.19
03	வழங்கல் செலவுகள்	235,000,000.00	158,770,101.00	300,000,000.00	166,301,492.69
04	பராமரிப்புச் செலவுகள்	343,000,000.00	75,951,004.09	100,000,000.00	62,628,968.10
05	ஒப்பந்த சேவை செலவுகள்	133,500,000.00	62,516,440.99	148,000,000.00	75,191,242.94
06	இதர செலவுகள்	354,500,000.00	173,037,431.00	572,000,000.00	189,568,606.34
07	நிலையான சொத்து கையகப்படுத்தல் செலவுகள்	490,000,000.00	47,161,767.00	480,000,000.00	111,231,002.00

2016 ஆம் ஆண்டில் மத்திய கலாசார நிதியத்தின் அகழ்வு, ஆய்வு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தவிர்ந்த ஏனைய அன்றாட அலுவலக நடவடிக்கைகள் வழமை போன்று பேணப்பட்டன. அந் நடவடிக்கைகளுக்குத் தேவையான ஒதுக்கீடுகள் வருடாந்த மதிப்பீடுகளின்படி மேற்கொள்ளப்பட்டன.

நிதியத்தின் ஆளணியினர்களுக்கான சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் பிற நலன்புரி நடவடிக்கைகளுக்காக, ரூபா 1,500,000,000.00 ஒதுக்கப்பட்டதோடு அதில் ரூபா 1,426,124,047.56 செலவிடப்பட்டுள்ளது. 2015 இல் செலவினம் 117.36% ஆகவும் 2016 இல் 95.07% ஆகவும் இருந்தது. இது 2015 உடன் ஒப்பிடும்போது குறைந்துள்ளது. மேலும், 2016 ஆம் ஆண்டின் போதான போக்குவரத்துச் செலவு ரூபா 19,973,852.19 ஆகவும் 2015 ஆம் ஆண்டில் ரூ. 15,001,925.72 ஆகவும் இருந்தது.

நிறுவனத்தின் வழங்கல் நடவடிக்கைகளுக்காக ரூபா 300,000,000.00 ஒதுக்கப்பட்டுள்ளதோடு, அதில் ரூபா 166,301,492.69 தொகை செலவிடப்பட்டுள்ளது. 2015-ம் ஆண்டில் ஆது ரூ. 158,770,101.00 ஆகும். மேலும், பராமரிப்புக்காக ரூபா 62,628,968.10 செலவிடப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டில், பராமரிப்புச் செலவானது 22.14% ஆக இருந்ததோடு 2016 இல் இது 62.62% ஆக இருந்தது.

ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்பாடுகளுக்காக 2016 இல் ரூபா 75,191,242.94 (50.80%) செலவிடப்பட்டுள்ளதோடு, 2015 இல் அது ரூபா 62,516,440.99 (22.14%) ஆகும்.
மேலும் 2016 ஆம் ஆண்டில் கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் எழுத்தாசிரியர்களுக்கு இதர செலவுகளின் கீழ் ரூபா 4,125,000.00 மற்றும் தொல்பொருளியல் மரபுரிமைக்கான பங்களிப்புக்காக ரூபா 104,490,691.16 வும், நன்கொடையாக ரூபா 1,550,122.59 வும் வழங்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில், நிலையான சொத்துக்களை கையகப்படுத்துவதற்கான செலவினமாக ரூபா 111,231,002.00 (23.17%) செலவிடப்பட்டதோடு, 2015 ஆம் ஆண்டில் இது 47,161,767.00 (9.62%)ரூபாவாகும்.

இரத்தினபுரி, யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் பதுளை ஆகிய கருத்திட்டங்கள் 2016 இல் புதிதாக ஆரம்பிக்கப்பட்டதனால் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவுகள் அதிகரிக்கக் காரணமாகியுள்ளன.



தொ.இ	விபரம்	முன்னேற்றம் (%) (ரூ.மி)	
		2015	2016
01	மீண்டெழும் செலவினம்	83.16	72.65
02	மூலதன செலவினம்	9.62	23.17
03	வருமானம்	99.26	117.44

மீண்டெழும் செலவினமானது 2015 இல் 83.16% ஆகவும் 2016 இல் 72.65% ஆகவும் இருந்தது. மூலதனச் செலவானது 2015 இல் 9.62% ஆகவும் 2016 இல் 23.17% ஆகவும் அதிகரித்துள்ளது. மத்திய கலாசார நிதியத்தினால் 04 புதிய கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டமையே இதற்குக் காரணமாகும்.

2015 இல் வருமானத்தின் முன்னேற்றம் 99.26% ஆகவும், 2016 இல் 117.44% ஆகவும் இருந்தது, சுற்றுலாப் பயணிகளின் வருகையின் வளர்ச்சி மற்றும் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது பிற வருவாய் ஈட்டும் வழிகளின் வருவாய் அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்தது.



தொ ட.இ	விபரம்	2015 ஆம் ஆண்டு		2016 ஆம் ஆண்டு	
		எதிர்பார்க்கப்பட்ட வருமானம்(ரூ)	உண்மையான வருமானம்(ரூ)	எதிர்பார்க்கப்ப ட்ட வருமானம்(ரூ)	உண்மையான வருமானம்(ரூ)
01	ஆளணியினர்களின் சம்பளம்	2,750,000,000.00	2,751,061,677.00	3,000,000,000.00	3,445,925,208.00
02	பயண செலவுகள்	40,000,000.00	2,923,806.00	30,000,000.00	2,608,009.00
03	வழங்கல் செலவுகள்	15,000,000.00	1,931,050.00	15,000,000.00	8,846,068.00
04	பராமரிப்புச் செலவுகள்	15,000,000.00	11,299,313.00	15,000,000.00	13,155,989.00
05	ஒப்பந்தச் சேவை செலவுகள்	55,000,000.00	95,006,954.00	115,000,000.00	233,863,909.00
06	இதர செலவுகள்	25,000,000.00	16,459,409.00	25,000,000.00	53,661,110.00

2016 ஆம் ஆண்டின் போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான சுற்றுலா அனுமதிச்சீட்டு விற்பனை மூலம் ரூபா 3,115,925,208.00 பெறப்பட்டுள்ளதோடு 2015 ஆம் ஆண்டில் இது ரூபா 2.751,061,677.00 ஆக இருந்தது. சுற்றுலாத் துறை ஊக்குவிப்பு நடவடிக்கைகளின் அதிகரிப்பு மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு ஆகியவை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அனுமதிச்சீட்டு வருவாயின் வளர்ச்சியை வலுவாகப் பாதித்துள்ளன. சதவீதத்தின் அடிப்படையில் 2015 இல் 100.03% ஆகவும், 2016 இல் 114.86% ஆகவும் உள்ளது.

2016 ஆம் ஆண்டில் மாதிரி, வெளியீடு மற்றும் அச்சிடுதல் விற்பனை மூலம் வருமானமாக ரூபா 24,610,066.00 (41.01%) மற்றும் 2015 இல் ரூபா 16,154,169.00 (23.07%) ஈட்டப்பட்டுள்ளது. மேலும், 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2016 ஆம் ஆண்டில் வெளியீடு மற்றும் அச்சிடுதல் விற்பனை வருவாய் வளர்ச்சியடைந்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் ரூபா 13,230,363.00 (44.10%) இருந்த அவ் வருமானம் 2016 இல் 22,002,057.00 (73.34%) ரூபாவாக இருந்தது.

அதே போன்று முதலீட்டு வருமானமானது 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 138,856,955.00 ஆக அதிகரித்துள்ளதோடு 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இதர வருமானமானது ரூபா 37,201,701.00 ஆக அதிகரித்துள்ளது.



2.2 பௌதீக முன்னேற்றம்

அதன்படி, 2016 இல், 21 முக்கிய கருத்திட்டங்களில் தொல்பொருள் ஆராய்ச்சி, அகழ்வாராய்ச்சி, பாதுகாப்பு மற்றும் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன. கடந்த ஆண்டு மேற்கண்ட அனைத்து கருத்திட்டங்களுக்கும் 310 பணிகள் முன்மொழியப்பட்டாலும், பல்வேறு நடைமுறைச் சிக்கல்களால் 272 பணிகள் தொடங்கப்பட்டு, அதில் 33 பணிகளைப் பூர்த்தி செய்ய முடிந்தது. டிசம்பர் மாத இறுதியின் போது ஆண்டுக்கான உத்தேச 165,168.60 அலகு வேலைகளில், 140,816.48 அலகுகள் அதாவது 67.8% பௌதீக முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. செலவுகளாக ரூபா 537,440,191.77 (48.6%) செலவிடப்பட்டுள்ளது. 2016 ஜனவரி முதல் டிசம்பர் இறுதி வரை, 275,281 மனித நாட்கள் பயன்படுத்தப்பட்டன, மேலும் வினைத்திறனை 85% ஆகப் பேணமுடிந்தது.

மத்திய கலாசார நிதியத்தின் மேற்கூறிய அனைத்துப் பணிகளும் திறம்பட மற்றும் வெற்றிகரமாகச் செய்வதற்குத் தேவையான போக்குவரத்து வசதிகளின் நிர்வாகப் பிரிவின் கீழ் உள்ள போக்குவரத்துப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

➢ அபயகிரிய கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி

அபயகிரிய தூபியின் வடபுறத்தில் குளம் தோண்டுதல், விஜயராம புனித சதுக்கச் சுவர் மற்றும் போதிகரய அகழ்வாராய்ச்சி, விஜயராம அகழ்வாராய்ச்சி, கபாராமுல ஆராய்ச்சி போன்ற அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதே போன்று, மட்பாண்ட பகுப்பாய்வு மற்றும் பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்படுத்தப்பட்டன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
32,036,351.35	20,000,528.75	66%	58%

விஜயராம புனித சதுக்கம் அகழ்வாராய்ச்சிக்கு முன்னர்

விஜயராம புனித சதுக்கம் அகழ்வாராய்ச்சிக்குப் பின்னர்

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு

மேலும் விஜயராம தூபிப் பாதுகாப்பு, 36 ஆம் இலக்க கோவில் பாதுகாப்பு, 03 ஆம் இலகக்க குட்டம் குளம் கட்டிடப் பாதுகாப்பு, சுற்றுலாப் பாதை அமைத்தல், உத்தரமூல நிலத்தைப் பன்படுத்துதல், களஞ்சிய அலுவலகத்தைப் புதுப்பித்தல், ஒலிப்பதிவு அறையைப் புதுப்பித்தல், அபயகிரி தலைமை அலுவலகத்தைப் புதுப்பித்தல், அறிவியல் பராமரிப்புச் செயற்பாடுகள் மற்றும் பொதுப் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
114,958,789.40	80,794,900.20	76%	80%

36 ஆம் இலக்க கோவில்
பராமரிப்புக்கு முன்னர்

36 ஆம் இலக்க கோவில்
பராமரிப்புக்குப் பின்னர்

அருங்காட்சியகம்

அருங்காட்சியகத்திற்கு வருகை தரும் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் தகவல் தேடுபவர்களுக்கு கல்வித் தகவல்களும் மாதாந்த விரிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

அபயகிரிய கருத்திட்ட இரசாயன பரிசோதனைகூடத்தின் மூலம், புராதனப் பொருட்களைப் பாதுகாத்தல், ருவன்வெலிசாய விஹாரை மன்றத்தில் உள்ள புத்தர் சிலைப் பாதுகாப்பு, அபயகிரி மட வளாகத்தில் உள்ள காவற்கல்லின் மறுசீரமைப்பு மற்றும் 21 ஆம் இலக்க மடப் பள்ளித் தொகுதியில் உள்ள சந்திரவட்டக்கல் மற்றும் சிங்க உருவம் மற்றும் புராதனப் பொருட்கள் ஆகியவற்றின் பாதுகாப்பு ஆகியவற்றை மேற்கொண்டுள்ளது.

- **ஜேதவனா கருத்திட்டம்**

அகழ்வாராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி

ஜேதவானா மடாலய வளாகத்தில் அமைந்துள்ள மடாலய கட்டிடமான இக் கட்டிடம் தோண்டப்பட்டு அறிவியல் அம்சங்கள் கண்டறியப்பட்டு பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இங்கே, இக் கட்டிடத்தின் மேற்பரப்பில் சில கற்களும், நுழைவாயில் என்று கருதப்படும் இடத்தில் வேறு சில கல் அடுக்குகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ் அகழ்வாராய்ச்சியின் மூலம், நுழைவாயிலுக்கு அருகிலுள்ள படிகளில 03 படிகள் மற்றும் செதுக்கப்படாத சந்திரவட்டக்கல் மற்றும் நாணயங்கள், களிமண் பலகைகள், மணிகள், இரும்பு ஆணிகள், மட்பாண்டங்கள் மற்றும் பாறை எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது JMMC 2016 சுரங்கம் என்று அழைக்கப்படுகிறது.

அதேபோன்று, அநுராதபுர காலத்தில் பண்டைய மன்னர்களின் அனுசரணையின் கீழ் இருந்த நிலமான உச்சாவலிக ரஜமஹா விஹாரைத் தளத்தில் முதற்கட்ட ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு எச்சங்களை அடையாளங்கண்டு அரிப்புக்கு உட்பட்ட மணல் தூபி மற்றும் சுவரை அகழ்வதன மூலம் படிக்கட்டுக்களை அடையாளங்காணல்.

புராதன காலத்தில் சமண விஹாரை என்று அழைக்கப்பட்ட 20 ஏக்கர் பரப்பளவில் காணப்பட்ட வெஸ்ஸகிரியின் தொல்லியல் தளமானது, கள வரைபடத்தின்படி A, B, C என பெயரிடப்பட்ட 03 பாறைகள் அடையாளம் காணப்பட்டு அதற்கேற்ப அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அங்கு B பாறைக்கு கிழக்கே ஒரு இடத்தை மையமாக கொண்டு கட்டம் உருவாக்கப்பட்டு, அதில் அகழாய்வு பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இக் குகை அகழ்வாராய்ச்சி தளம் V.G. Cava No 02 2015 எனப் பெயரிடப்பட்டுள்ளதோடு இது, வரலாற்றுக்கு முந்தைய காலங்களில் குகையின் பயன்பாடுகள், கட்டங்கள் மற்றும் தொழில்நுட்பத்தை அடையாளம் காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ் அகழ்வாராய்ச்சியில் மண்பாண்டங்கள், கற்பாறைகள் , உலோகம் மற்றும் கரி எச்சங்கள் கிடைத்துள்ளன.

இது தவிர, 1998 ஆம் ஆண்டு ஜேதவன தூபி மேற்கு ஆயக்கா ආයක தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில் இருந்து பெறப்பட்ட மணிகள் பற்றிய ஆய்வு மற்றும் 1982-2015 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில் கிடைத்த முழுமையான மற்றும் பாதுகாக்கப்பட்ட மட்பாண்டங்கள் வெவ்வேறு கருப்பொருள்களின் கீழ் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

பிரசித்தி பெற்ற கற்றோர் குழாமினை வரவழைத்து மாதந்தோறும் தொடர் சொற்பொழிவுகளை நடத்துதல், ஆராய்ச்சி மாநாடு நடத்துதல், தேவைக்கேற்ப நடமாடும் கண்காட்சிகள் நடத்துதல் போன்ற ஊக்குவிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
16,835,180.00	12,026,540.00	74%	86%

JMMC 2016 அகழ்வாராய்ச்சியின் முன்னர

JMMC 2016 அகழ்வாராய்ச்சியின் பின்னர்

வெஸ்ஸகிரி குகை அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்ட பாறைகள் மற்றும் மட்பாண்டங்களின் எச்சங்கள்

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு

பல சந்தரப்பங்களில் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டதுடன், தொல்பொருள் நிபுணர்கள் குழுவொன்றின் தீர்மானத்தின்படி தொழில்நுட்பக் கோளாறுகளால் நிறுத்தப்பட்ட போதிகரவைப் பாதுகாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் பாதுகாப்புப் பணிகளைச் செய்தபின், கட்டிடத்தின் இடத்தைத் தெளிவாகக் கண்டறியும் வகையில், கட்டிடத்தின் இடத்தைச் சுத்தப்படுத்தி உயர்த்தி, கல் வேலியின் தாழ்வான பகுதிகளைச் செங்கற்களால் நிரப்பி, அதிக நீர் வடியும்படி பொருத்தமான மழைக் கூரையைத் தயாரித்து, படிக்கட்டுக்களை செங்கற்களினால் உருவாக்குதல் முதலியன மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மல்வத்து ஓயா குறுக்குத் தெரு கட்டிடத்தின் பாதுகாப்பு, 2009 மே மாதம் ஜேதவனா தூபியின் பரபமரிப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு பொது மக்களுக்கு ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் மின்னல் தாக்கியதால் சேதமடைந்த நாற்கரத்தை சுற்றியுள்ள பகுதி மற்றும் கொத்கரெல்ல ஆகியவற்றை மீண்டும் பாதுகாத்தல், அருங்காட்சியகத்தில் உள்ள காட்சிப் பொருட்களைப் பாதுகாத்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
55,290,191.40	28,107,257.23	55%	61%

போதிகர கட்டிடம் பராமரிப்பின் போது

போதிகர கட்டிடம் பராமரிப்பின் பின்னர்

அருங்காட்சியகம்

அருங்காட்சியகத்திற்கு வருகை தரும் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொல்பொருளியல் ஆய்வாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தகவல் தேடுபவர்களுக்கு கல்வித் தகவல் மற்றும் மாதாந்த விரிவுரைகள்/ கருத்தரங்குகள் நடத்தப்பட்டு பார்வையாளர்களுக்கு ஓவியம் வரைதல் நிகழ்ச்சியும் நடத்தப்பட்டுள்ளது.

➢ மகாவிஹாரைக் கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி

பணித்தள இலக்கம் 17 குளத்தை அகழும் பணி நிறைவடைந்துள்ளது.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
2,914,510.00	888,000.00	30%	22%

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு

ஶ்ரீ மஹா போதியின் கிழக்குப் பக்கத்தில் உள்ள வெளிப்புற சுவரைப் பாதுகாத்தல், தூபாராமவின் 60 மற்றும் 61 ஆம் இலக்க கட்டிடங்களைப் பாதுகாத்தல், மகாவிஹாரை கிழக்கு எல்லைச் சுவரைப் பாதுகாத்தல், தூபாராம சிலைகளைப் பாதுகாத்தல், ருவன்வெலிசாய மற்றும் ஶ்ரீ மஹா போதிக்கு இடையில் உள்ள கல்வெட்டை அகற்றுதல் மற்றும் புனரமைத்தல், நுழைவாயிலில் இருந்து ருவன்வெலிசாயவின் திசையில் காணப்படும் சுவரைப் பாதுகாத்தல், ருவன்வெலி சாய முற்றத்தை அமைத்தல், ருவன்வெலிசாயவின் அன்னதான மண்டபத்தின் விஞ்ஞானப் பராமரிப்புப் பணிகள் மற்றும் தினசரி பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
54,119,725.20	31,361,208.27	66%	74%

தூபாராம 60 ஆம் இலக்க கட்டிடம் பராமரிப்புக்கு முன்னர்

தூபாராம 60 ஆம் இலக்க கட்டிடம் பராமரிப்புக்குப் பின்னர்

தூபாராம 61 ஆம் இலக்க கட்டிடம் பராமரிப்புக்கு முன்னர்

தூபாராம 61 ஆம் இலக்க கட்டிடம் பராமரிப்புக்கு பின்னர்

➢ சீகிரியா கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி

2012 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நடைபெற்று வரும் வடக்கு நுழைவாயிலின் உள் அகழி தோண்டுதல் மற்றும் 62 மீ நீளம், 36 மீ அகலம் மற்றும் 02 மீ ஆழம் ஆகியவற்றிலிருந்து மண் அகற்றுதல், வலதுபுறம் உள்ள குளிர் அரண்மனையைச் சுற்றியுள்ள அகழியில் இருந்து மண்ணை அகற்றும் அகழ்வுப் பணி, மட்பாண்டங்கள் மற்றும் பானை ஓடுகள் பகுப்பாய்வு மற்றும் வடக்கு பகுதியில் நீர் அல்லிகளை நிலைப்படுத்தல் ஆகிய அகழ்வாராய்ச்சி மற்றும் ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
29,588,730.00	20,710,731.00	77%	73%

வடக்கு நுழைவாயிலின் உள் அகழி தோண்டும் போது

வலதுபுறம் உள்ள குளிர் அரண்மனையைச் சுற்றியுள்ள அகழியில் இருந்து மண்ணை அகற்றும் அகழ்வுப் பணி வடக்கு நுழைவாயிலின் உள் அகழி தோண்டும் போது

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு

5 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக நம்பப்படும் நீர் பூங்காவில் எஞ்சியிருக்கும் சுண்ணாம்புப் பூச்சான நீரப் பூங்கா சுண்ணாம்பு பூச்சு சிதைவதைத் தடுக்கவும் அதன் ஆயுட்காலம் அதிகபட்சமாக பராமரிக்கவும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,
சிங்கபாத சுவரின் மேற்கு முனையின் செங்குத்தான சரிவு காரணமாக சேதமடைவதைத் தடுக்கும் வகையில், அதன் பாதுகாப்பிற்காக கரைகளைப் பாதுகாத்தல், கண்ணாடிச் சுவரைப் பாதுகாத்தல், கல்லின் உச்சியைப் பாதுகாத்தல், சிங்கபாத முற்றத்தைப் பாதுகாத்தல், படிக்கட்டுகளைப் பாதுகாத்தல், இருக்கைக் குகை தொடர்பான அனைத்து அணைகளையும் பாதுகாத்தல், வடக்கு அகழி அகழ்வாராய்ச்சியுடன், அடிப்படைப் பகுதிகளின் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
250,894,996.79	93,060,047.25	77%	73%

வடக்கு நுழைவாயிலின் உள் அகழி தோண்டும் போது

வலதுபுறம் உள்ள குளிர் அரண்மனையைச் சுற்றியுள்ள அகழியில் இருந்து மண்ணை அகற்றும் அகழ்வுப் பணி வடக்கு நுழைவாயிலின் உள் அகழி தோண்டும் போது

அருங்காட்சியகம்

அருங்காட்சியகத்திற்கு வருகை தரும் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொல்பொருளியல் ஆய்வாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தகவல் தேடுபவர்களுக்கு கல்வித் தகவல் மற்றும் மாதாந்த விரிவுரைகள்/ கருத்தரங்குகள் நடத்தப்பட்டு கலாசார நிகழ்ச்சிகள் நடத்துதல் மற்றும் கல்வி இதழ்களை(அப்சரா) வெளியிடுதல் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **பொலன்னறுவைக் கருத்திட்டம்**

அகழ்வாராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி

தமிழ்மகாசயவைப் பாதுகாப்பதற்குத் தேவையான அடிப்படைக் கட்டுமானம் தொடர்பான சான்றுகளைக் கண்டறியும் முதன்மை நோக்கத்துடன் தமிழ்மகாசய அகழ்வாராய்ச்சி, கனமழையின் போது அதிகளவு தண்ணீர் தேங்கி மூழ்கும் அபாயத்துக்கு உட்பட்டுள்ள சிவன் கோயில் 02 ஆம் இலக்க கட்டிடத்தின் கிழக்கு வாசல் வழியாக நீர் வடிந்தோடுவதற்காக நுழைவாயிலுக்கு அருகில் அகழ்வு, கிழக்கு, மேற்கு பழைய தெருவை தோண்டி சிவன் கோவில் கட்டிடத்தின் கிழக்கு நுழைவு வாயில் வழியாக உட்செல்லக்கூடிய வகையில் பாதை ஒன்றை அமைக்கும் பணி, சிவன் கோயில் வளாகத்தை முறையாக சுற்றுலாப் பயணிகளுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் சிவன் கோயில் 02 ஆம் இலக்கத்துடன் தொடர்பான அடிப்படை பாதை முறைமை மற்றும் சுற்றியுள்ள நீர் முகாமைத்துவ முறைமைகள் பற்றி அகழ்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
35,262,271.00	22,826,531.35	71%	79%

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு

நுழைவாயிலின் கிழக்கு மற்றும் வடக்குச் சுவர் மற்றும் தெற்குச் சுவரின் எஞ்சிய பகுதிகளைப் பாதுகாத்தல், சிதைந்த செங்கல் அடுக்குகளை அகற்றி, பழைய சாந்தைப் போன்ற சாந்தைச் சேர்த்து லங்காதிலக்க சிலைக்கு முன் செங்கற்கள் பதித்து மீதமுள்ள பாதுகாப்புப் பணிகள் மற்றும் மூலஸ்தானம் மற்றும் இடைக்கூடம் ஆகியவற்றைப் பிரிக்கும் நுழைவாயிலின் இருபுறமும் சிக்கலான 13 விளிம்புகள் அடையாளங் கண்டு அவற்றை உரிய முறையில் பாதுகாப்பதற்கான பணிகள் மேற்கொள்ளல், பராக்கிரமபாகு அரண்மனை, பத்த சீமா பிரசாதய மற்றும் ரன்கொத் விஹாரை மூலஸ்தானம் ஆகியவற்றின் பழைய பூச்சுகளை பாதுகாத்தல், 02 ஆம் இலக்க சிவன் கோவில் அருகில் இருக்கும் கட்டிடம் மற்றும் வடக்கு மதில் தடுப்பு மற்றும் வடிகால் முறைமை ஆகியவற்றின் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், பொத்குல் விஹாரை வளாகத்தில் தொழில்நுட்ப பராமரிப்பு பணிகள், நுழைவு நினைவுச்சின்னத்தின் பராமரிப்பு, தலதா சுவர் மற்றும் பபலு வெஹெர நினைவுச்சின்னங்களின் பராமரிப்பு, மெனிக் வெஹெர நினைவுச்சின்னத்தின் பராமரிப்பு, லங்காதிலகயாவைச் சுற்றியுள்ள நினைவுச்சின்னங்களின் பராமரிப்பு போன்றவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
183,491,522.45	51,355,373.21	33%	56%

பொத்குல் விஹாரை கட்டடத் தொகுதியின் தூண்கள் பராமரிப்புக்கு முன்னர்

பொத்குல் விஹாரை கட்டடத் தொகுதியின் தூண்கள் பராமரிப்புக்கு பின்னர்

அருங்காட்சியகம்

அருங்காட்சியகத்திற்கு வருகை தரும் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொல்பொருளியல் ஆய்வாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தகவல் தேடுபவர்களுக்கு கல்வித் தகவல் மற்றும் மாதாந்த விரிவுரைகள்/ கருத்தரங்குகள் என்பன நடத்தப்பட்டுள்ளன.

➢ கண்டி கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி

2014 ஆம் ஆண்டு திறந்தவெளி குடியிருப்பாக இருந்த விக்டோரியா நீர்த்தேக்கத்தின் மத்தியில் உள்ள பம்பரகல அகழ்வில் கிடைத்த 460 கற்கால கருவிகளின் தொகுப்பு, உடுநுவர கல்லங்கொல்ல பொத்குல் விஹாரை மற்றும் யட்டிநுவர சூரியகொட விஹாரை ஆகிய இடங்களில் உள்ள 02 ஓலைச் சுவடிகளின் தொகுப்புகள் ஆய்வு செய்யப்பட்டு அவற்றின் உள்ளடக்கங்கள் தெரிவிக்கப்பட்டன.

அகழ்வாராய்ச்சி, பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளைத் தயாரித்தல், கல்வி மற்றும் விளம்பர நடவடிக்கைகள், சுற்றுலா ஊக்குவிப்பு நடவடிக்கைகள் (பம்பரகல), மட்பாண்ட பகுப்பாய்வு நடவடிக்கைகள் மற்றும் மெதவாசல அருங்காட்சியக மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	**செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)**	**செலவு (%)**	**பௌதீக முன்னேற்றம் (%)**
7,422,345.00	4,225,286.45	60%	74%

அகழ்வாராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி

மெணிக்ஹின்ன பொத்குல் விஹாரை நூலகக் கட்டிடத்தினை மேற்கூரை ஒன்றின் மூலம் பாதுகாப்பது அடிப்படைப் பாதுகாப்பு நடவடிக்கையாக ஆரம்பிக்கப்பட்டதுடன், அழிந்துபோன மரக்கூரை, மேல் மாடி, மங்கிப்போன சுவர்கள் என்பன பாதுகாக்கப்பட்டு கட்டிடத்தின் தரைத்தளம் பாதுகாக்கப்பட்டு காலத்தின் தேவையின் அடிப்படையில் கட்டி முடிக்கப்பட்டது.

அஸ்கிரிய மத்திய ஆலயக் கட்டிடத்தின் பழுதடைந்த மேற்கூரை பழையபடி சீர்செய்யப்பட்டு, பழைய சிற்ப வேலைப்பாடுகளுடன் மேல் மாடி மற்றும் மரக் கற்றைகள் பாதுகாக்கப்பட்டு, கட்டடக்கலைக்கு தீங்கு விளைவிக்காமல் முகப்பு, பழைய ஜன்னல் மாதிரிகள் போன்றவை சேர்க்கப்பட்டுள்ளன.

தித்த பஜ்ஜல கற்கோயில் சிலையின் சிதைவுற்ற கூரையை பாதுகாத்தல் மற்றும் சுவரோவியங்களின் பாதுகாப்பிற்குத் தேவையான பாதுகாப்புப் பணிகளை முன்னெடுத்தல், கண்டி புனித பூமி பிரதேசத்தில் 1843 ஆம் ஆண்டு முதல் அமைந்துள்ள புனித அந்தோனியார் தேவாலயத்தின் கூரையைப் பாதுகாத்தல், அஸ்கிரி தகனக் களஞ்சியமான கெடிகே விஹாரையின் கலசம் மற்றும் அதற்கான நுழைவு வீதி, அஸ்கிரி முல்லேகம ஆலயத்தின் கூரை, ஜன்னல்கள் மற்றும் கதவுகள் மரத்தினால் ஆனவற்றைப் பாதுகாத்தல் மற்றும் ஆலய வளாகத்திற்குச் சொந்தமான பொதுவான கட்டிடக்கலை மதிப்புகளை முன்னிலைப்படுத்தவும் பாதுகாத்தல், கடலதெனிய விஹாரை வளாகத்தில் அமைந்துள்ள விஹார பொஹோயாவின் கூரை மற்றும் சார்லியத்த வெலிவிட்ட சங்கராஜபுர அருங்காட்சியகத்தின் கூரை மற்றும் வட்டுபொல புராண விஹாரை மடப்பள்ளியின் இடிந்து விழுந்த சுவர்கள் புனரமைக்கப்பட்டு கூரை பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சூரியகொட ரஜமஹா விஹாரையின் கண்டி காலச் சிலைகள், கட்டிடக்கலை மற்றும் சித்திரக்கலை சித்தரிக்கப்பட்டுள்ள மண் சுவரின் அடிப்படை சாந்து சிதைந்து விழுதல் மற்றும் வெடித்தல், வண்ண அடுக்குகள் உரிதல் மற்றும் பூச்சித் தொல்லை காரணமாக பாதுகாக்கப்பட்டன.

கல்கமுவ ரஜமஹா விஹாரை மற்றும் கடிகமுவ நாகவனராம ரஜமஹா விஹாரை ஆகியவற்றின் ஓவியங்கள் பூச்சு உரிக்கப்படுவதற்கும், வண்ண அடுக்குகள் உரிக்கப்படுவதற்கும், தூள்களை அகற்றுவதற்கும் மற்றும் கரையான் நடவடிக்கையால் ஏற்படும் சேதங்களுக்கும் பாதுகாக்கப்பட்டன.

தெகல்தொருவ ரஜமஹா விஹாரையில் உள்ள ஓவியங்களுக்கு கடும் மழையினால் நீர் கசிவதால் ஏற்படும் சேதங்களை தடுக்கும் வகையில், வடிகால் அமைப்புகளை சுத்தம் செய்து, மோட்டார் பொருத்தி, உள் துவாரங்களுக்குள் வௌவால்கள் நுழைவதைத் தடுத்ததன் மூலம் முறையான காற்று பாதுகாப்பு முறைகளை ஏற்படுத்தி பாதுகாப்பு பணிகள் நிறைவு பெற்றன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
74,635,812.00	28,741,514.39	45%	77%

- **தம்புள்ளை கருத்திட்டம்**

அகழ்வாராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி

இப்பன்கட்டுவ பெருங்கற் கல்லறையின் அகழ்வாராய்ச்சியில் இருந்து மீட்கப்பட்ட அனைத்துப் பீப்பாய் மற்றும் மட்பாண்டங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
6,236,300.00	2,381,284.50	38%	95%

அகழ்வாராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி

தம்புள்ளை கலை அருங்காட்சியகத்தின் ஓவியக் களஞ்சியம் பல்வேறு ஓவியங்களின் தொகுப்பைக் கொண்டுள்ளது, மேலும் இவ் ஓவியங்கள் ஆய்வு செய்யப்பட்டு பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கெரடியாகல ரஜமஹா விஹாரையில் அநுராதபுர காலத்தின் ஆரம்ப கால குகை ஓவியங்களைப் பாதுகாத்தல், சில்வத்தகல ரஜமஹா விஹாரை மற்றும் தல்கஹகொட விஹாரையில் ஓவியங்களைப் பாதுகாத்தல், கொஸ்வத்த ரஜமஹா விஹாரையின் வண்ண அடுக்கு சேதம், வண்ண அடுக்கு நிறமாற்றம், தூள் வடிவில் வர்ண அடுக்கு உரிதல் மற்றும் தோலுரிதல் ஆகியவை நிவர்த்தி செய்யப்பட்டு மற்றும் சீகிரியா குகை ஓவியத் தரவு பதிவு செய்யப்பட்டது.

வெரகம போதிமாலகராமய கட்டடக்கலைப் பாதுகாப்பு, வராகம்ப பிரிவெனா அன்னதான மண்டபத்தின் கூரை புனரமைப்பு, உக்குவெல வெலிகல புராண ரஜமஹா விஹாரையின் கட்டடக்கலைப் பாதுகாப்பு மற்றும் தம்புள்ளை கருத்திட்ட அலுவலகம், வெளியீட்டுக் களஞ்சியம் மற்றும் வாகனம் பழுதுபார்க்குமிடம் ஆகியவற்றைப் புனரமைத்தல். மேலும், சுவரோவியம் பாதுகாப்பு மற்றும் பயிற்சி நிலையம் கட்டப்பட்டது மற்றும் சுவரோவிய பாதுகாப்பு சான்றிதழ் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
85,540,509.00	19,677,279.39	25%	76%

கெரடியாகல ரஜமஹா விஹாரையின் சுவரோவியங்கள் பராமரிப்புக்கு முன்னர்

கெரடியாகல ரஜமஹா விஹாரையின் சுவரோவியங்கள் பராமரிப்புக்குப் பின்னர்

அருங்காட்சியகம்

அருங்காட்சியகத்திற்கு வருகை தரும் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொல்பொருளியல் ஆய்வாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தகவல் தேடுபவர்களுக்கு கல்வித் தகவல் மற்றும் மாதாந்த விரிவுரைகள்/ கருத்தரங்குகள் என்பன நடத்தப்பட்டுள்ளன.

- **யாப்பஹுவ கருத்திட்டம்**

அகழ்வாராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி

யாப்பஹுவ தலதா மாளிகை என அழைக்கப்படும் அதிசயப் படிக்கட்டுக்களுடன் கூடிய கட்டிடத்திற்கு வடக்கு திசையில் அமைந்துள்ள பழைய கட்டுமானச் சான்றுகள் பலவற்றின் பயன்பாடு, கட்டிடக்கலைத் தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்ப முறைமை தொடர்பாக கற்கும் நோக்கத்துடன் தலதா மாளிகையை அண்மித்து அடையாளம் காணப்படாத கட்டிடம் ஒன்றை அகழும்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, இவ் அகழ்வாராய்ச்சியின் ஊடாக கட்டிடம் ஒன்றின் அடிப்படை, கற்றூண் ஒன்று எனக் கருதப்படக்கூடிய மற்றும் ஏனைய அனுமானிக்க முடியாத புதைபொருள்ப் படிவ எச்சங்கள் பலவற்றின் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சுவர் வடிவமைப்புத் தொழில்நுட்பத்தை ஆராய்தல், கட்டுமான காலப் பகுதியை ஆய்வு செய்தல், ஏனைய சுவர்களுடன் ஒப்பிடுதல், பாதுகாக்கும் பணிக்காக தெற்கு வாசலில் இருந்து மேற்கு வாசல் வரையான வெளிப்புற சுவரை அகழ்வதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு அதன் மூலம் சுவரின் கட்டுமான காலப் பகுதியை அடையாளங் காண்பதற்காக செங்குத்து மற்றும் கிடைமட்ட முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கருங்கல் மற்றும் செங்கற்களால் கட்டப்பட்ட இந்த சுவர் மிகவும் சேதமடைந்துள்ளது.

செனரத் பரணவிதான எனப்படும் வெளிப்புற நீர் அகழிக்கு வெளியே அமைந்துள்ள மண் அகழிக் கோட்டை இராஜ்சியம் ஒன்றில் பாதுகாப்பு முறை ஒன்றாகப் பயன்படுத்தப்படுவதை தொல்லியல் ரீதியாகவும் கட்டடக்கலை ரீதியாகவும் சரியாக அடையாளம் காணும் நோக்கில் மண் அகழி அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் அகழ்வாராய்ச்சியின் மூலம், மண் அடுக்குகள் தனித்தனியாக அடையாளம் காணப்பட்டதுடன் அகழி எண் எ.ஃப் அகழ்வாராய்ச்சியில் இருந்து பெறப்பட்ட காரணிகளின் படி, ஒரு அகழியின் பண்புகளை தெளிவாக அடையாளம் காண முடிந்தது.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
22,068,447.50	5,471,478.18	27%	19%

தலதா மாளிகை அருகில் அடையாளம் காணப்படாத கட்டிடம் பராமரிப்புக்கு முன்னர்

தலதா மாளிகை அருகில் அடையாளம் காணப்படாத கட்டிடம் பராமரிப்புக்குப் பின்னர்

பிரகார எல்லையைத் தோண்டுவதற்கு முன்னர்

பிரகார எல்லையைத் தோண்டியதன் பின்னர்

B அகழியை அகழ்வுக்கு முன்னர் **B அகழியை அகழ்வுக்கு முன்னர்**

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு

நாகொல்ல சந்தாகர பாதுகாப்புப் பணியில், சுவர்களை வலுப்படுத்துவதற்காக சுவர்கள் மணல், கூழாங்கற்கள், புற்றுக் களிமண் ஆகியவற்றின் கலவையால் நிரப்பப்பட்டன. மேலும் கட்டிடத்தின் உட்பகுதியில் உள்ள இரண்டு பகுதிகளைக் கொண்ட தூண்கள் நொறுக்கப்பட்ட கற்கள் மற்றும் செங்கற்களால் மட்டுமே பாதுகாக்கப்பட்டன. சுவர்களை நிரப்பவும், சுவர்களை வலுப்படுத்தவும் சிமெந்து, சுண்ணாம்பு, மென்மையான மணல், புற்றுக் களிமண் ஆகியவை 1: 2: 8: 1 என்ற விகிதத்தில் கலக்கப்பட்டு சாந்துக் கலவை செய்யப்படுகிறது.

1020 மீற்றர் நீளமும் 18 மீற்றர் அகலமும் கொண்ட குதிரை இலாட வடிவ அகழியின் தொடக்கப் புள்ளியிலிருந்து கிழக்கு நுழைவாயில் வரை பாதுகாக்கப்பட்டது. அகழியின் பாறைப் பக்கச் சுவர் ஒரே சீராக உயர்த்தப்பட்டுள்ளதால், அது இடிந்து விழும் நிலையில் இருப்பதால், சுவர் கட்டும் போது, சுவர் மேலே செல்லும்போது கருங்கல் ஒரு அங்குலம் பின்னோக்கி அமைக்கப்பட்டுள்ளது. மதிலைக் கட்டிய பின்னர், 1:1:1:1 என்ற விகிதத்தில் மணல், சிமெண்ட், கூழாங்கற்கள் மற்றும் புற்றுக் களிமண் ஆகியவற்றின் கலவையால் மதில் சுவர் நிரப்பப்பட்டுள்ளது.

கடந்த 2016.08.01 அன்று பல கட்டங்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட குருகொட தூபி பாதுகாப்பின் முதற்கட்டமாக, தூபியின் நான்கு முனை சுவரின் மேற்குக் சுவரின் பாதுகாப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக நான்கு முனை சுவரின் வடக்கு மதில் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
23,975,107.02	20,296,456.50	109%	88%

வெளிப்புற அகழி பராமரிப்பின் போது

குருகொட தூபி பராமரிப்பின் போது

- **தம்பதெனிய கருத்திட்டம்**

அகழ்வாராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி

தம்பதெனிய விஜயசுந்தராராம விஹாரையின் புதிய அருங்காட்சியக கட்டிடத்திற்கு இடைப்பட்ட பகுதியில் தொல்பொருள் அகழ்வாராய்ச்சியை நடாத்துதல் மற்றும் உள்ளக நிலப்பரப்பை தயார் செய்தல், வெஸ்ஸகிரி மலைக்காடுகளின் தொல்பொருள் ஆய்வு மற்றும் தம்பதெனிய மாளிகாகல சுரங்கப்பாதையின் ஆரம்ப ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாரம்மல மற்றும் வீரம்புகெதர பிரதேச செயலகங்களில் உள்ள கல்வெட்டுக்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இங்கு, தம்பதெனிய விஜயசுந்தராம ரஜமஹா விஹாரையின் கல்வெட்டுகள், மெட்டியகனே மயூரவதி விஹாரைக்குச் சொந்தமான கிரி கல்வெட்டு, ருவன்கிரி கந்த, விஹாரேகம ரஜமஹா விஹாரை, ஸ்ரீ பபிலவனாராம விஹாரை, மெட்டியகனே மயூரவதி, விஹாரகம, ருக்மலே ஆகிய கல்வெட்டுகளும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

விஜயசுந்தரமாவில் உள்ள புதிய அருங்காட்சியகம், ருவன்கிரி மலையின் முன் அகழ்வாராய்ச்சியில் கிடைத்த தொல்பொருட்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
3,770,077.00	2,327,775.24	66%	71%

புதிய அருங்காட்சியக கட்டிடத்தின் முன்புறம் அகழ்வாராய்ச்சிக்கு முன்

புதிய அருங்காட்சியக கட்டிடத்தின் முன்புறம் அகழ்வாராய்ச்சிக்குப் பின்

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு

தம்பதெனிய விஜயசுந்தராராம ஆலயத்தின் மேற்குச் சுவர் அகழ்வின்படி, மதில் அமைப்பதற்குத் தேவையான பாதுகாப்புப் பணிகயை மேற்கொள்ளல், விஹாரை முற்றத்தின் தென் திசையில் பழைய இடிபாடுகளைக்க காணக்கூடியதாக இருப்பதோடு, உபாசத காட்சியகம் அகழ்வாராய்ச்சியின் பின்னர் நினைவுச்சின்னங்களை பாதுகாப்பாகவும், சுற்றுலா பயணிகளை கவரும் வகையில், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாரம்மல புலபிட்டிய ஸ்ரீ சுகதாராம விஹாரையின் சேதமடைந்திருந்த ஓவியங்களைப் பாதுகாத்தல், நுழைவாயிலின் இருபுறமும் உள்ள நாக தேவதைகள் மற்றும் காவலர் உருவங்கள், கூரையில் உள்ள சமாதி சிலையின் ஒழுங்கற்ற நிரப்புதல்கள் மற்றும் உள் சுவர்களில் உள்ள ஓவியங்கள் உறுதிப்படுத்தப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளன.

தம்பதெனிய சிறிகல புராதன விஹாரையின் செதுக்கப்பட்ட மரத் தூண்கள் பூச்சிகளின் தாக்கத்தினால் மரப் பாகங்கள் சேதமடைந்ததால் சீர்செய்யப்பட்டுள்ளதுடன், பெருமளவு வெடித்துள்ள செதுக்கப்பட்ட பாகங்கள் நிரப்பப்பட்டு திருத்தப்பட்டுள்ளன. மரப் பரப்பில் உள்ள பழைய பாதுகாப்பு பூச்சு மற்றும் பூஞ்சை அடுக்குகள் அகற்றப்பட்டு மீண்டும் பாதுகாப்பான நிறப்பூச்சு படலம் பூசப்பட்டு செப்பு உலோக நாணயங்கள், பாகங்கள், இரும்புக் களிமண், ஈயக் கலைப்பொருட்கள் பாதுகாக்கப்பட்டன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
5,775,424.50	2,139,208.24	38%	44%

ஸ்ரீ சுகதாராம விஹாரையின் சிலை பராமரிப்புக்கு முன்

ஸ்ரீ சுகதாராம விஹாரையின் சிலை பராமரிப்புக்குப் பின்

➢ **பண்டுவஸ்நுவர கருத்திட்டம்**

அகழ்வாராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி

புராதன திஸ்ஸவ ரஜமஹா ஆலயத்தைச் சுற்றியுள்ள பகுதி 04 பிரதான பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு 02 முக்கிய ஆய்வு மற்றும் கள ஆய்வு முறைகளைப் பின்பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அந்த 04 முக்கிய பாகங்கள் பின்வருமாறு அமைவதோடு இப்பணி நிறைவு பெற்றுள்ளது.

- திஸ்ஸவ பாறையைச் சுற்றியுள்ள நினைவுச்சின்னங்கள் (புனிதப் பாதம், வான தூபி, கல்பியசி, துளையுடனான குகை)
- திஸ்ஸவ விஹாரை வளாகம் (புத்தர் சிலை, பொஹொயகே வத்த, தாகொடெல்ல)
- உயன்வத்த விஹாரை வளாகம் (புத்தர் சிலை, குகைக் கோயில்)
- திஸ்ஸவ புறநகரில் உள்ள நினைவுச்சின்னங்கள் (வலானே பத்தினி தேவாலம், பட்ட பொலேகல - தூபி இலக்கம் 01, 02 நாகுல்முன்ன ரம்பகல நினைவுச்சின்னம், பழங்காலப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன - மட்பாண்டங்கள், ஊரா கெட கிணறுப் பாகம்)

குருநாகல் மாவட்டம் முழுவதிலும் பிராமண காலத்திற்கு முற்பட்ட கல்வெட்டுகள் உள்ள இடங்களுக்குச் செல்ல இயலாது என்பதால் கல்வெட்டுகள் பற்றி வெளியிடப்பட்ட நூல்களின் அடிப்படையில் கல்வெட்டு ஆய்வுகளும் அறிக்கைகளும் முதன்மையாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும், தொல்பொருட்களின் ஆவணப்படுத்தல் மற்றும் வகைப்பாடு குறித்த நிலை அறிக்கையும் தயாரிக்கப்பட்டுள்ளது.

பண்டுவஸ்நுவர நீர் அகழி மற்றும் பண்டாரநாயக்க கல்லூரிக்கு மேற்கே அமைந்துள்ள தொல்பொருள் திணைக்களத்தின் வடமேல் மாகாண அலுவலகத்தின் பின்புறம் உள்ள பாடசாலைக்கும் செங்கல் சுவருக்கும் இடையிலான தொடர்பை ஆராயும் நோக்கில் இந்த அகழ்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அகழ்வாய்வு முறையில் தொல்லியல் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் சோதனை அகழ்வாராய்ச்சியாக இது மேற்கொள்ளப்பட்டது, ஆனால் தொல்பொருள் சான்றுகள் கண்டுபிடிக்க முடியாததால் அகழாய்வு நிறுத்தப்பட்டது.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
911,590.00	278,160.00	32%	30%



ஆய்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்ட குகைகள்

திஸ்ஸவ ஆய்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்கள் சில

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு

தண்டகமுவ ஸ்ரீ சுதர்ஷனாராம விஹாரையின் பிரசங்க மேடைக் கூரையில் பயன்படுத்தப்பட்ட மரங்கள் மற்றும் சுவர்களில் கரையான்கள் அதிகமாகத் தொற்றியதாலும், மழை நீரால் ஓடுகளில் ஏற்பட்ட ஓட்டைகள் மற்றும் மழைக்காலத்தில் ஓட்டைகளினூடாக நீர் பாய்ந்து கூரைகள் அழுகுவதாலும் ஏற்பட்ட பாதிப்புகள் பாதுகாக்கப்பட்டன.

நாதகனே தூபியின் 03 பேசா வளையங்கள் முழுமையாகக் கட்டப்பட்டு, மேற்குப் பகுதியானது 07 செங்கல் சுற்றுக்களால் பழங்கால சாந்துக் கலவை கொண்டு பாதுகாக்கப்பட்டு, தூபியின் கர்ப்பகிரத்தில் எஞ்சியிருந்த புராதன பூச்சு பாதுகாக்கப்பட்டு, தூபியைச் சுற்றி நிலப்பரப்பு வேலைகள் மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

புராதன காலங்களில் வஹந்தரே ரஜமஹா விஹாரை என்றும், சமீபத்தில் நாவின்ன தம்பித விஹாரை என்றும் அழைக்கப்பட்ட இவ் விஹாரையில் டெம்பரா பாணியில் உருவாக்கப்பட்ட ஓவியங்களைக் காணலாம். பூச்சிகள் மற்றும் சுற்றுச்சூழல் காரணங்களால் இந்த சுவரோவியங்கள் அழிக்கப்பட்டுள்ளன. மேலும், ஓவியத்தின் மேற்பரப்பில் சீமெந்துக் கலவை ஊடாக குழாய்த் துவாரங்கள் உருவாக்கப்பட்டு அதில் வெற்று இடங்கள் உருவாக்கப்பட்டன, மேலும் சுவர்கள் மொத்தமாக வெடித்ததன் காரணமாக ஓவியம் பூச்சு மோசமான நிலையில் காணப்பட்டது. அதன்படி, ஓவியங்கள் பாதுகாக்கப்பட்டு, தினசரி பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
28,992,639.00	17,020,130.76	64%	63%

நாதகனே தூபி
பராமரிப்புக்கு முன்

நாதகனே தூபி
பாாமரிப்பக்கு (மன்

➢ குருநாகல் கருத்திட்டம்(ரிதீகம)

அகழ்வாராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி

குருநாகல் பழைய அரண்களும் கிரிந்திகல்ல ஹத்தாம்பொத்தவும் அகழ்வாராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
793,539.30	389,562.74	54%	43%

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு

ஜயகடுவ ரஜமஹா விஹாரையின் பிரசங்க மேடையைப் பாதுகாத்தல் (சேதமடைந்த கூரையைச் சரிசெய்தல்), ரிதீ விஹாரையின் பழைய பிரசங்க மேடையின் கூரையைப் பாதுகாத்தல், மொரபாய ரஜமஹா விஹாரையின் தூபியை சீர் செய்தல், இப்பகல ரஜமஹா விகாரையின் பாதுகாப்புக் கரையை நிர்மாணித்து முடித்தல், கட்டுமானம் ரிதி விகாரை முதியோர் மண்டப நிர்மாணம், வரக வலலு விஹாரை சுவரோவியப் பாதுகாப்பு, மாஸ்பொத ரஜமஹா விஹாரையின் ˙ பிரசங்க மேடைப் பாதுகாப்பு (2017 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் மீண்டும் தயாரிக்கப்பட்டன) மற்றும் பண்டுவஸ்நுவர கருத்திட்டத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட தொல்பொருட்கள் பாதுகாக்கப்பட்டன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
43,276,143.22	14,415,815.13	35%	58%

➢ திஸ்ஸமஹாராம கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சி மற்றும் ஆய்வு

யதாலய ரஜமஹா விஹாரைத் தலத்தில் உள்ள ஆசனகரப் பகுதியில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, அகழ்வாராய்ச்சி நடைபெறும் இடத்தை மூடுவதற்காக நான்கு திசைகளிலும் 04 அகழிகள் வெட்டப்பட்டு, தலா ஒரு மீற்றர் தொகுதிகளாகப் பிரித்து அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. செங்கல் சுவர்கள், கல் தூண்கள், தொல்பொருள் காரணிகள் இங்கு கண்டறியப்பட்டுள்ளது, மேலும் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அகழ்வாராய்ச்சியின் மூலம், பதோவன கல், மணிகள், நாணயங்கள், களிமண் ஓடுகள், மட்பாண்டங்களின் பாகங்கள், களிமண் துண்டுகள், ஓடுகள், தொப்பை ஓடுகள், எலும்புகள் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சந்தகிரிய சிலைக்கு அருகில் உள்ள திறந்தவெளியில் அகழி தோண்டியதில் காசுகள், நாணய வார்ப்புகள், மணிகள், பானை ஓடுகள், மட்பாண்டத் துண்டுகள், கண்ணாடித் துண்டுகள், தொப்பை ஓடுகள், எலும்புத் துண்டுகள், ஓடுகள், செங்கற்கள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
10,755,123.12	6,226,291.93	61%	74%

யதாலய ரஜமஹா விஹாரைத் தலத்தில் உள்ள ஆசனகரப் பகுதியில் அகழ்வாராய்ச்சியின் போது

யதாலய ரஜமஹா விஹாரைத் தலத்தில் உள்ள ஆசனகரப் பகுதியில் அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருள்கள்



**சந்தகிரிய அகழ்வாராய்ச்சி
தளத்தில் அடுக்குகளை
அடையாளம் கண்ட பிறகு**

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு

நைகல ரஜமஹா விஹாரையின் நினைவுச் சின்னங்கள் நீண்டகாலமாக சீரழிந்து வருவதால் ஏற்பட்ட சேதங்கள் உரிய முறையில் பாதுகாக்கப்பட்டு, பொது மக்கள் பார்க்கும் வகையில் வெளிப்புற காட்சியறை உருவாக்கப்பட்டது. கற் தூண்களை புனரமைத்தல், பாழடைந்த கதிர்காமம் ராமகிருஷ்ண மடம் திருத்தம், திஸ்ஸமஹாராம விஹாரையின் அவசேய் புனரமைப்பு மற்றும் கதிர்காமம் அருங்காட்சியகத்தின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
25,392,946.50	8,513,581.18	36%	66%

➢ மாத்தறைக் கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சி மற்றும் ஆய்வு

மாத்தறைக் கோட்டைக்குள் பரந்து விரிந்து காணப்படுகின்ற பழைய கட்டிடங்கள் ஆராயப்பட்டு கட்டிடங்கள் வகைப்படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டது, மாத்தறை பழைய கல்லுப்பாறையில் பாதுகாப்பாக காணக்கூடிய பழைய கட்டிடங்கள் ஆராயப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டது, மாத்தறை மாவட்டத்தின் 09 பிரதேச செயலகப் பிரிவுகளில் பரவியிருந்த குடைவரைக் கோயில்கள் பற்றிய தகவல்கள் முதலியன சேகரிக்கப்பட்டன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
2,367,800.00	633,580.00	30%	42%

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு

பிரித்தானிய கால கட்டிடக்கலை அம்சங்களுடன் கூடிய 130 ஆண்டுகள் பழமை வாய்ந்த மிகதாய சங்கவாச கட்டிடத்தில் விளிம்பு மர ஓடுகள் போன்றவை அகற்றப்பட்டு பலப்படுத்தப்பட்டு, மழைநீர் கால்வாய்கள் அமைக்கப்பட்டு, மேல்மாடித் திண்ணைகள் மண் கற்களால் நிரப்பப்பட்டு கதவுகள் பாதுகாக்கப்பட்டு மர கைப்பிடிகள் அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டன.

கி.பி 1755 ஆம் ஆண்டு பாடசாலையாக நிறுவப்பட்ட யோனகபுரா பள்ளிவாசலில், பூச்சிகள் மற்றும் மழைநீரால் சிதைவடைந்த கூரையைப் பாதுகாத்தல், எலும்பு எச்சங்கள், நாணயங்கள், பீங்கான் பானைகளின் பாகங்கள் போன்றவை பல்வேறு சுற்றுச்சூழல் நடவடிக்கைகள் காரணமாக விரிசல் ஏற்பட்ட வீட்டுத் தளத்தின் டெரகோட்டா அடித்தளக் கல் கட்டுமானத்தின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இயற்கை மற்றும் மனித நடவடிக்கைகளால் சேதமடைந்த உமங்கல ஒவாகிரி விஹாரைக்கு கீழே உள்ள தடுப்பு அணை, பாதையில் செல்லும் படிகள் மற்றும் வடிகால், சிலை கூரையின் பலகையின் பாதுகாப்பு, மணி கோபுரங்கள் மற்றும் தூபிகள் பாதுகாக்கப்பட்டன. இயற்கை மற்றும் மனித நடவடிக்கைகளால் சேதமடைந்த கந்தர புராதன விஹாரையைப் புனரமைத்தல் மற்றும் பாதுகாத்தல், எல்லைச் சுவர் மற்றும் தூபிப் பாதுகாப்பு, வெலிகம கொவியாபான தர்ம சுமணராம தர்ம மண்டபத்தின் பாதுகாப்பு, மிரிஸ்ஸ வெஹெரகல சமுத்திரகிரி விஹாரையின் பழைய சிலையைப் பாதுகாத்தல், ஊராபொல தேனஜோதி வித்யாதன் பிரிவெனாவின் பாதுகாப்பு கல் சுவர் கட்டுமானம், கட்டபருவ ரஜமஹாவில் உள்ள ஆலயத்தின் முதியோர் மண்டபம் நிர்மாணம், கலகம ஷைலராம காவறக்கல் நிர்மாணம், மிரிஸ்ஸ சமுத்திரகிரி ஆலய சுவரோவியங்களைப் பாதுகாத்தல், கந்தர சிலையின் சுவரோவியங்களைப் பாதுகாத்தல் மற்றும் விஜயபான விஜய சுமணராம ஆலயத்தின் தர்மசாலா கட்டிடம் பாதுகாக்கப்பட்டது.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
26,763,611.00	6,657,599.09	26%	46%

யோனகபுர முஸ்லிம் பள்ளிவாசல் பராமரிப்புக்கு முன்னர்

யோனகபுர முஸ்லிம் பள்ளிவாசல் பராமரிப்புக்கு பின்னர்

மிரிஸ்ஸ சமுத்திரகிரி விஹாரையில் சுவரோவியங்கள் பராமரிக்கப்படுவதற்கு முன்னர்

மிரிஸ்ஸ சமுத்திரகிரி விஹாரையில் சுவரோவியங்கள் பராமரிக்கப்படுவதற்குப் பின்னர்

- **ரம்பா விஹாரைக் கருத்திட்டம்**

அகழ்வாராய்ச்சி மற்றும் ஆய்வு

பாறைகளுடன் கூடிய 03 ஆம் இலக்க வெளிப்புறச் சுவர் அகழ்வாராய்ச்சியானது, சுவரின் தெற்கு முனைக்கு அருகில் சுவருக்கு வெளியே ஒரு தனித்துவமான ஓட்டுத் தளம் மற்றும் விளக்குக் குவியலின் வைப்புத்தொகை ஒன்றைக் கண்டறிய வழிவகுத்தது. பழைய ஓடுகளின் குவியல் மற்றும் கடந்த காலத்தில் தூக்கி எறியப்பட்ட விளக்குகள் இருந்த இடமாக இருக்கலாம். மேற்குச் சுவரின் வடக்கு முனையில் ஒரு தனித்துவமான கட்டிடத்தின் கூறுகளை வெளிக்கொணர முடிந்தது. கட்டிடத்தின் கட்டிடக்கலை வடிவத்திலிருந்து கழிப்பிடத் தொகுதியாக இருக்கலாம் என்று ஊகிக்க முடியும். சுண்ணாம்புக் கல்லாகக் கருதப்படும் செப்புக் கலைப்பொருளின் தனிமங்களும், 03 பராக்கிரமபாகு நாணயங்களும் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் வடக்குத் திசையில் கட்டிடக் கூறுகளைக் கொண்ட கரையின் பகுதியில் சோதனை மட்டத்தில் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவை தவிர, அகழ்வாராய்ச்சியில் ஒரு சில களிமண் பானைகள், ஒரு ஜாடியின் சான்றுகள், ஒரு கிண்ணத்தின் ஒரு பகுதி என்று கருதப்படும் ஒரு பகுதி, களிமண் விளக்குகள், பீங்கான் துண்டுகள், இரும்பு ஆணிகள், வளையல் துண்டுகள், விளக்குக் கம்பங்கள், அரை-உயர்ந்த களிமண்

அடுக்குகளின் சான்றுகள், அதே போல் கெஜ்ஜியின் துண்டுகள், தியத்தலிப்பு என்று அழைக்கப்படும் திருவானை வகை என்பன கண்டுபிடிக்கப்பட்டன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
6,059,907.50	4,048,391.00	73%	90%

03 ஆம் இலக்கம் மதில் கரை அகழ்வின் போது

அகழ்வாராய்ச்சியில் கிடைத்த ஓடுகளின் தொகுதி

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு

கட்டிடக்கலை பாதுகாப்புப் பணிகளின் கீழ் 02 ஆம் இலக்க கட்டிடத்தின் பாதுகாப்பு, கட்டிடம் 23/11 பாதுகாக்கப்பட்டுள்ளது. மேலும், புதிய களஞ்சியக் கட்டிடம் கட்டுதல், அலுவலகக் கட்டிடத்தை புதுப்பித்தல், அனுமதிச்சீட்டு வழங்கும் அலுவலகத்தைக் கட்டுதல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
17,772,779.55	9,651,705.46	59%	59%

02 ஆம் இலக்க கட்டிடப் பராமரிப்பின் போது



புதிய கட்டிடத்தை நிர்மாணிக்கும் செயற்பாட்டின் போது

- **காலி கருத்திட்டம்**

அகழ்வாராய்ச்சி மற்றும் ஆய்வு

அரிப்பு கடற்கரையிலிருந்து சுமார் 09 கி.மீ. தூரத்திலிந்து 8.5 ஆழம் மற்றும் 18 மீ அகலம் கொண்ட அரிப்பு மரக் கப்பலின் ஆய்வு, 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அல்லது 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நீராவி மூலம் இயங்கும், 05 மீ பரப்பு முதல் 19.2 மீ ஆழமுள்ள நீராவி கப்பலின் அண்ணளவான வடிவமைப்பை உருவாக்க அளவீடுகளை எடுப்பது, இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானியர்களின் தாக்குதல்களால் பெரிதும் சேதமடைந்த ஒலுவில் கலங்கரை விளக்கத்திற்கு முன்னால் ஆழ்கடலில் உள்ள 40 மீ

ஆழமுள்ள HMS Athelstan (1942) கப்பலை ஆராய்ந்து, 1942 ஏப்ரல் 9 இல் ஜப்பானின் தாக்குதலில் மூழ்கிய HMS Hillyhgwle (1942) கப்பலின் அமைப்பு மற்றும் நிலையைப் பதிவு செய்தல் மற்றும் புகைப்படங்களை பதிவு செய்ய மட்டுமே முக்குளித்தல், வாகரைப் பகுதியில் 25 மீ ஆழத்தில் மூழ்கி 02 பகுதிகளாக உடைந்த British surgeɦ கப்பலின் ஜி.பி.எஸ் தரவைப் பெற்று அண்ணளவான திட்டம் ஒன்றை உருவாக்குதல், பாசிகுடா புதிய நீராவி கப்பலை ஆய்வு செய்தல், நியூ காசல் நெதபர்லான்ட் நிறுவனத்தினால் கட்டப்பட்ட Sri john Jackson கப்பலின் ஜி.பி.எஸ் இருப்பிடத்தின் புகைப்படங்கள் மற்றும் வீடியோ பதிவுகளைப் பெறல், மட்டக்களப்பு புதிய நீராவி கப்பலின் ஒரு பகுதியை அளத்தல், காயங்கேணி கல் பாலத்தை ஆராய்தல், வடமாகாணத்தில் முல்லைத்தீவு கடலில் பெருமளவிலான இந்திய கற்சிற்பங்கள் மற்றும் ஏனைய பொருட்களுடன் மூழ்கியுள்ள எஸ்.எஸ். சிந்து கப்பல் (முல்லைத்தீவுக் கப்பல்) பற்றிய தகவல்களைக் கண்டறிந்து ஜி.பி.எஸ் காரணிகள் கண்டுபிடிக்கப்பட்டு அதன் மூலம் சூரிய அடையாளம் மற்றும் P&O நிறுவனத்தின் இலட்சினையுடன் கூடிய சிறிய உலோக பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டது.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
22,043,680.58	6,052,955.36	30%	47%

அரிப்பு லீ கப்பல் ஆய்வின் போது

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு

கடல்சார் தொல்பொருள் அருங்காட்சியகத்தைப் பாதுகாத்தல், தொடந்துவ ஸ்ரீ ஷைல பிம்பராம மஹாவிஹாரையின் சிதைவடைந்த கூரையை ஓடுகள் போன்றவற்றை அகற்றி புனரமைத்தல், இரண்டு மாடிக் கட்டிடமாக நிர்மாணிக்கப்பட்டு சிதைவடைந்து ஒற்றைத் தளமாக அடையாளங் காணக்கூடியதாக மிகவும் பாழடைந்து நிலையில் இருந்த ஹபரகட ஸ்ரீ விஜயானந்த புராதன ரஜமஹா விஹாரையை இடித்துவிட்டு புனித தந்த மாளிகையுடன் கூடிய இரண்டு மாடிக் கட்டிடத்தை புதிதாக நிர்மாணித்தல், கதலுவ பூர்வாரம விஹாரை

மேற்கூரை சேதமடைந்து மழைநீர் உட்புகுந்ததால் கூரை மற்றும் சுவரில் இருந்த ஓவியங்கள் அழிந்துபோகும் அபாயத்தில் இருந்ததால் சேதமடைந்த மரக்கூரைக்குப் பதிலாக ஓவியங்கள் சேதமடையாத வகையில் புதிய பலகைகையப் பயன்படுத்தி கூரை ஒன்றை அமைத்தல், புராதன கட்டிடக்கலை அம்சங்களைக் கொண்ட ஸ்ரீ சுபத்ராராம புராதன விஹாரையின் மேற்கூரை மற்றும் அடித்தளம் பலத்த சேதமடைந்திருந்ததோடு, பிரதான கூரை மற்றும் திண்ணையில் மரச்சட்டம் நிறுவப்பட்டு ஓடு வேயப்பட்ட மேற்கூரை, சுவர்கள் பூசி பாதுகாக்காத்தல் மற்றும் பழைய பழுதடைந்த மின் அமைப்பை அகற்றி மறுசீரமைத்து, தரையில் கொங்ரீட் சாந்து போடப்பட்டு கதவுகள் பாதுகாக்கப்பட்டன.

பழங்காலப் பொருட்களைப் பாதுகாத்தல் (செப்பு உலோகக் கலவை, இரும்பு, மரம், பியூட்டர், செங்கல், கல்), பழைய பிரித்தானிய இலடசினைகளைப் பாதுகாத்தல், அருங்காட்சியக ஓவியங்கள் மற்றும் பிற கலைப் பொருட்களைப் பாதுகாத்தல், ரிச்மண்ட் கல்லூரியின் கலைப் பொருட்களைப் பாதுகாத்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
34,164,936.50	13,164,598.47	57%	76%

சமுத்திர தொல்பொருளியல் அருங்காட்சியகப் பராமரிப்பின் போது

கதலுவ பூர்வாரம விஹாரையின் இருப்பிடம் பராமரிப்புக்கு முன்னர்

கதலுவ பூர்வாரம விஹாரையின் இருப்பிடம் பராமரிப்புக்குப் பின்னர்

➢ கம்பஹா கருத்திட்டம்

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு

நீர்கொழும்பு தூவ சிந்திராணி தேவாலயத்தில் உப்புக்களால் சேதமடைந்த சுவர்களில் பூச்சு அகற்றப்பட்டு, திரவப் பூச்சுகள் பயன்படுத்தப்பட்டு, கருங்கற்கள் பதித்து பூச்சுத் தூண் தயாரிக்கப்பட்டு, முன் கதவுக்கு வண்ணம் பூசப்பட்டு மீண்டும் மரவேலைகளுக்கு நீர்ப்புகாப்பு பயன்படுத்துவதன் மூலம் சரி செய்யப்பட்டது.

கண்டி பாரம்பரியத்தைச் சேர்ந்த சுவரோவியங்கள் மற்றும் சிலைகள் காணப்படும் ஹெய்யந்துடுவ ராஜமஹா விஹாரையின் ஓவியங்கள் மற்றும் சிலைகள் பாதுகாக்கப்பட்டன.

நீர்கொழும்பு தூவ சிந்திராணி தேவாலயத்தில் உப்புக்களால் சேதமடைந்த சுவர்கள் பராமரிப்புக்கு முன்னர்

நீர்கொழும்பு தூவ சிந்திராணி தேவாலயத்தில் உப்புக்களால் சேதமடைந்த சுவர்கள் பராமரிப்புக்குப் பின்னர்

➢ கேகாலை கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சி மற்றும் ஆய்வு

கேகாலை மாவட்டத்தில் உள்ள தொல்பொருள் இடங்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள் பற்றிய தகவல்கள் ஆய்வு செய்யப்பட்டு, தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், நினைவுச்சின்னங்கள், பழைய சாலை அமைப்புகள் மற்றும் தனித்தனியாக அகழ்வாராய்ச்சி செய்யப்பட வேண்டிய இடங்களை அடையாளம் கண்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

➢ கொழும்பு கருத்திட்டம்

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு

களுத்துறை மாவட்டத்தில் தொல்பொருள் மற்றும் வரலாற்றுப் பெறுமதி மிக்க சில தெரிவு செய்யப்பட்ட இடங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அது தொடர்பான கண்காணிப்பு அறிக்கைகள் மேலதிக பணிகளுக்காக தயாரிக்கப்பட்டன.

➢ இரத்தினபுரி கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சி மற்றும் ஆய்வு

இரத்தினபுரி மாவட்டத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள நூலகங்கள் ஆய்வு செய்யப்பட்டு தொல்லியல் மற்றும் வரலாற்று மதிப்புமிக்க இடங்கள் பற்றிய அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு மொலமுரே முதல் கல்தோட்டை வரையிலான மேல் சரிவில் தொல்பொருள் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

➢ மொனராகலை கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சி மற்றும் ஆய்வு

பறவைகளின் ஓவியங்கள் கொண்ட குருல்லன்கலை திறந்தவெளியில் உள்ள பாறையை ஆராய்தல், புத்ருவாகலை மற்றும் மாளிகாவில தொல்பொருள் இடங்களை ஆய்வு செய்தல், பதுளை மாவட்டத்தில் உள்ள சுற்றுலா, யாத்திரை, அழகியல் சார்ந்த இடங்கள் மற்றும் கல்வெட்டுகள் பற்றிய அறிக்கைகளத் தயாரித்தல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன.

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு

ரக்கிதாகந்த புராதன விஹாரையின் பாதுகாப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன், முதலிந்தாராம டம்பிட்ட விஹாரையின் பாதுகாப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, பாதுகாப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
10,868,505.00	203,415.00	02%	30%

➢ யாழ்ப்பாணக் கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சி மற்றும் ஆய்வு

300 ஆண்டுகள் பழமை வாய்ந்த யாழ்ப்பாணக் கோட்டை அகழப்பட்டதோடு அங்கு இரும்புத் துண்டுகள், மட்பாண்டத் துண்டுகள், கரித் துண்டுகள், ஓட்டுத் துண்டுகள், பளிங்குத் துண்டுகள், மடக்குத் துண்டுகள் கிடைத்தன.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
3,937,600.00	3,134,380.00	79%	41%

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு

ஐரோப்பியர்களால் வடிவமைக்கப்பட்ட நெடுந்தீவில் உள்ள மருத்துவமனை பழைய வடிவத்திற்கு சேதம் விளைவிக்காமல் பழுதுபார்க்கப்பட்டு பாதுகாக்கப்பட்டது.

மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (ரூபா)(பொருட்கள் மற்றும் உழைப்பு)	செலவு (%)	பௌதீக முன்னேற்றம் (%)
3,708,799.95	295,000.00	08%	30%

- **வெளியீட்டுப் பிரிவு**

மத்திய கலாசார நிதியத்தினால் வெளியிடப்படும் அனைத்து அகழ்வாராய்ச்சி மற்றும் பாதுகாப்பு அறிக்கைகள், துண்டுப் பிரசுரங்கள், வழிகாட்டி நூல்கள், கல்விப் புத்தகங்கள், சுவரொட்டிகள், அஞ்சல் அட்டைகள், சிற்ப புத்தகங்கள் போன்ற வெளியீடுகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அனுமதிச்சீட்டுகள் மற்றும் வெளி நிறுவனங்களின் வெளியீடுகள் ஆகியவையும் வெளியீட்டு பிரிவினால் அச்சிடப்படுகின்றன.

புகைப்படம் மற்றும் ஆவணப்படுத்தல் பிரிவு ஒன்றும் உள்ளது. அங்கு மத்திய கலாசார நிதியத்தால் மேற்கொள்ளப்படும் பல்வேறு நடவடிக்கைகளை புகைப்படம் மற்றும் வீடியோவாகப் பதிவு செய்யப்படுகின்றன.

இது புவியியல் மற்றும் நுண்ணுயிரியல் ஆராய்ச்சிப் பிரிவுகளையும் கொண்டுள்ளது, மேலும் இந்த பிரிவுகள் பல்வேறு ஆராய்ச்சி மற்றும் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அகழ்வாராய்ச்சி மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஒத்துழைப்பை வழங்குகின்றன.

இலங்கை முழுவதும் பரந்து விரிந்து கிடக்கும் விஹாரைகளில் உள்ள ஓலைச்சுவடிகளைப் பாதுகாக்கும் பணியில் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மற்றும் அட்டவணைப்படுத்தல் பிரிவு செயற்பட்டு வருகிறது.

- **தேசிய மாதிரி உருவமைப்பு மத்திய நிலையம்(பட்டலீய)**

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட தேசிய மாதிரி உருவமைப்பு மத்திய நிலையமானது கல்வி, உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவுகளைக் கொண்டுள்ளதோடு செய்தித்தாள் விளம்பரங்களை வெளியிடுவதன் மூலம் இரண்டு வருட கால கற்கைநெறிக்கு மாதிரி உருவமைப்பு மத்திய நிலையத்திற்கு மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்து தத்துவார்த்த மற்றும் நடைமுறை அறிவை வழங்குகின்றார்கள்.

சிமெண்ட், நார், மரம், கல் மற்றும் பித்தளை போன்ற பொருட்களைப் பயன்படுத்தி மத்திய கலாசார நிதியத்தின் வெளியீடுகள் மற்றும் மாதிரி விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு மாதிரிகள தயாரிக்கப்படுகின்றன.

இது தவிர, மத்திய கலாசார நிதியம் மற்றும் வெளி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின்படி, பல்வேறு தோரணங்கள், அலங்காரங்கள், நினைவுப் பரிசுகள், மேடை அலங்காரங்கள் தயாரிக்கப்பட்டு, மாதிரிகளுடன் கூடிய கண்காட்சி அரங்குகள் நடத்தப்படுகின்றன

கருத்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்

பௌதீக முன்னேற்றம்





(ரூ.மி.) / %
பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு
120
100
80
60
40
20
0
ஆபயகிரிய
ஜேதவனா
மகாவிஹாரை
சீகிரியா
பொலன்னறுவை
கண்டி
தம்புள்ளை
யாப்பஹுவ
தம்பதெனிய
பண்டுவஸ்நுவர
குருநாகல
திஸ்ஸமஹாராம
மாத்தறை
ரம்பா விஹாரை
காலி
மொனராகலை
யாழ்ப்பாணம்
பௌதீக முன்னேற்றம்
நிதி முன்னேற்றம்

2.3 சவால்கள் மற்றும் முன்னோக்கு

சவால்கள்

எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவதற்காக இலங்கையின் கலாச்சார மற்றும் மத நினைவுச்சின்னங்களை மேம்படுத்துதல், மறுசீரமைத்தல் மற்றும் பாதுகாத்தல். இலங்கை முழுவதும் தாபிக்கப்பட்ட மத்திய கலாசார நிதியத்தின் கருத்திட்டங்கள் ஊடாக அந்தந்தப் பிரதேசங்களில் பரவியுள்ள தொல்பொருள் இடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பது தொடர்பான பணிகளில் பல சவால்களையும் சிக்கல்களையும் எதிர்கொண்டுள்ள வேண்டியிருந்தது. அச் சவால்கள் மற்றும் சிக்கல்கள் பின்வருமாறு.

- தற்காலத்தில் தொல்பொருள் இடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களின் அருகாமையில் குடியிருப்புகள் உருவாகி வருவதால், பல மனித நடவடிக்கைகளால் அழிக்கப்பட்டு சீரழியும் போக்கு அதிகரித்து வருகிறது.
- பாதுகாப்பு முறைகளில் உள்ள பலவீனங்கள்
- ஒவ்வொரு பகுதியிலும் வாழும் சமூகத்தால் நம்பப்படும் வெவ்வேறு சமய முறைகள் மற்றும் கலாசார பிரச்சினைகள்
- மக்களின் மாயை மற்றும் அறியாமை
- நிபுணத்துவம் ஒப்பீட்டளவில் குறைவாக இருத்தல்
- அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் வெற்றிடங்கள் இருப்பது
- அவசர அபிவிருத்தி சூழ்நிலைகளுக்கான பரிந்துரைகளைப் பெறுவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள்
- இயற்கைப் பேரழிவுகள் மற்றும் பல்வேறு விலங்குகளின் நடவடிக்கைகள்

எதிர்கால முன்னோக்கு

நிதியம் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகரமாக முறியடித்து, மத்திய கலாசார நிதியத்தின் நோக்கங்களை அடைவதற்கான முயற்சிகளை வலுப்படுத்துவதன் மூலம் நிதியத்தின் எதிர்கால செயற்பாடுகளைத் திட்டமிடுவது பிரதான செயற்பாடாகும். அதன்படி,

- அநுராதபுரம், பொலன்னறுவை புனித பூமி மற்றும் சீகிரியா உலகப் பாரம்பரிய நினைவுச்சின்னங்களை அண்மித்த பகுதிகளில் அமைந்துள்ள தொல்பொருள் நினைவுச்சின்னங்களின் தொடர்ச்சியான பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு.
- மத்திய கலாசார நிதியத்தின் நாடளாவிய கருத்திட்டங்களினூடாக தொடர்ந்தும் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளைத் தொடர்தல்.
- தொல்பொருளியல் அகழ்வாராய்ச்சிகள் மற்றும் ஆராய்ச்சிப் பணிகள் மூலம் தகவல்களைப் புதுப்பித்தல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் வழங்கல்.
- இலங்கை முழுவதும் பரவலாகக் காணப்படும் பௌத்த, இந்து, இஸ்லாமிய மற்றும் கத்தோலிக்க மத வழிபாட்டுத் தலங்களின் அபிவிருத்தி மற்றும் பாதுகாத்தல்.
- தரமான கலைப்படைப்புகளுக்கு பங்களித்த கலைஞர்களின் கலைப்படைப்புகளை மதிப்பிடுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நிறுவுதல்.
- இலங்கையிலும் வெளிநாடுகளிலும் சமய மற்றும் கலாசார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நிறுவுதல்.
- விற்பனைக்கான மாதிரிகளைத் தயாரிப் செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் புத்தக வெளியீடுகளை அச்சிடுதல் மற்றும் விற்பனை செய்தல்.

2.4 எதிர்காலத்தில் நிதியத்தின்ன் செயற்திறனை மேம்படுத்த குறுகிய மற்றும் நடுத்தர கால நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1. தொல்பொருளியல் தலங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி சமூகத்திற்கு அறிவூட்டுதல்

பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் பங்களிப்புடன் தொல்பொருள் இடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பது தொடர்பான பல்வேறு செயற்பாடுகள் மற்றும் செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல், பாடசாலை மாணவர்களின் தொல்பொருள் தொடர்பான அறிவினை விருத்தி செய்யும் நோக்கில் பாடசாலைகளில் பல்வேறு செயலமர்வுகள் மற்றும் விரிவுரைகள் நடத்துதல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு கண்காட்சி மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை அதிகரித்தல், தொல்பொருள் இடங்கள் பற்றிய தவறான தகவல்கள் பரவுவதைத் தடுக்க வழிகாட்டிகளுக்கு சரியான அறிவு மற்றும் தகவல்களை வழங்குவதற்கு பல்வேறு விரிவுரைகள், செயலமர்வுகள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்ளல், தொல்பொருள் தளங்களைப் பற்றிய சரியான தகவல்களைக் கொண்ட பல்வேறு மொழிகளிலான துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு விநியோகித்தல், மிகவும் சுவாரஸ்யமான முறையில் தொல்பொருள் பற்றிய தகவல்களை வழங்க இணையத்தைப் பயன்படுத்துதல், கண்காட்சிகளை நடாத்துதல்.

2. புதிய தொல்பொருள் இடங்களை அடையாளங் காண கள ஆய்வு மற்றும் ஆராய்ச்சிக் கருத்திட்டங்களை நடத்துதல்

3. மத்திய கலாசார நிதியத்தின் ஊழியர்களால் மிகவும் பயனுள்ள சேவையைப் பெறுவதற்காக ஊழியர்களை ஈடுபடுத்தி ஆண்டு முழுவதும் பல்வேறு செயலமர்வுகள் மற்றும் செயற்பாடுகளை செயற்படுத்துதல்.

4. ஊழியர் நலனை மேம்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளை செயற்படுத்துதல்

5. தொல்பொருள் இடங்களுக்கு வருகை தரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு சுகாதார மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

6. கருத்திட்ட அலுவலகங்களில் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்.

7. தொல்பொருள் இடங்கள் தொடர்பான பல்வேறு தீங்கு விளைவிக்கும் அழிவுகள் மற்றும் தொல்பொருள்கள் மற்றும் பொக்கிஷங்கள் திருடப்படுவதைத் தடுக்க, ஏற்கனவே உள்ள சட்டங்களை அதே வழியில் செயற்படுத்தி புதிய சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

8. தொல்பொருளியல் தளங்களின் அகழ்வாராய்ச்சி மற்றும் பாதுகாப்புச் செயற்பாடுகள் மேலும் விரிவாக்கப்பட வேண்டும்.

03. வருடத்தின் மொத்த நிதிச் செயலாற்றுகை

03.1 நிதி நிலை பற்றிய கூற்று

மத்திய கலாசார நிதியம்
2016 டிசம்பர் 31 ஆம் திகதி ஆகும் போதான நிதி நிலைக் கூற்றுக்கள்

	குறிப்புகள்	2016 ரூ	2015ரூ (மீள்குறிப்பிடப்பட்ட)
சொத்துக்கள்			
நடைமுறைச் சொத்துக்கள்			
காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்	1	139,070,261	49,124,197
வருமதி	2	147,392,501	71,080,629
கையிருப்புக்கள்	3	77,602,071	80,624,726
முதலீடுகள்		2,903,502,450	1,315,672,997
		3,267,567,283	**1,516,502,549**
நடைமுறையில் உள்ள மூலதனச் செயற்பாடுகள்		**20,541,024**	**8,994,388**
நடைமுறையல்லாத சொத்துக்கள்			
வருமதி	4	171638043	199055377
வெளிநாட்டு நிதியிடப்பட்ட கருத்திட்டங்கள்		676432	676432
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்	5	954780870	965590731
புணிக்கொடை முதலீடுகள்		691102852	654908485
		1,818,198,197	**1,820,231,024**
மொத்த சொத்துக்கள்		**5,106,306,504**	**3,345,727,961**
பொறுப்புக்கள்			
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வருமதிகள் மற்றும் அட்டுறு செலவுகள்	6	140,041,140	76,987,772
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்			
பணிக்கொடைக்கான வழங்கல்	7	678,031,282	658,739,422
விசேடமாக நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள்	8	16,821,196	8,806,885
வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள்	9	4,849,969	4,367,338
மொத்தப் பொறுப்புக்கள்		**839,743,587**	**748,901,417**
நிகர சொத்துக்கள்		**4,266,562,917**	**2,596,826,544**
பங்களிப்புச் செய்த மூலதனங்கள்			
மூலதன ஒதுக்கீடுகள்		429,160,000	430,462,000
சோத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கீடுகள்		251,414	4,751,268
வெளிநாட்டு வள நிதியம்		248,050,137	269,346,213
திரண்ட மிகை/குறைபாடுகள்		3,589,101,366	269,346,213
		4,266,562,917	**2,596,826,544**

3 முதல் 8 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் 13 - 26 வரையான பக்கங்களில் உள்ள குறிப்புக்களும் இந் நிதிக் கூற்றுக்களின் உள்ளார்ந்த பகுதிகளாகும். இந் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் சமர்ப்பணத்திற்கு பணிப்பாளர்கள் சபை பொறுப்பாகும். இந் நிதிக் கூற்றுக்களானவை பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையெழுத்திடப்பட்டுள்ளது.

யூ.ஆர். அரந்தர
நிதிப் பணிப்பாளர்
மத்திய கலாசார நிதியம்

பேராசிரியர். பி. குணவர்தன
பணிப்பாளர் நாயகம்
மத்திய கலாசார நிதியம்

சுனில் ஹெட்டியாரச்சி
செயலாளர்
கல்வி அமைச்சு

பேராசிரியர். எஸ் திசாநயக்க
பணிப்பாளர் நாயகம்
தொல்பொருளியல்
திணைக்களம்

2017 பெப்ரவரி 28 ஆம் திகதி கையெழுத்திடப்பட்டது.

தயாரிக்கப்பட்டது
எம்.ஜி. ஆரியரத்ன
(உதவிக் கணக்காளர்)

மத்திய கலாசார நிதியம்

2016 டிசம்பர் 31 ஆம் திகதி காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள்

செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பெற்ற காசுப் பாய்ச்சல்

	2016	ரூ	2015	ரூ
வருடத்திற்கான மிகை/(குறை)		1,696,834,303		867,115,251
காசு அல்லாத செயற்பாடுகளுக்கான சீராக்கங்கள்				
தேய்மானங்கள்	110,494,226		73,681,337	
மதிப்பிறக்கம்	(27,097,930)			
நிலையான சொத்துக்களின் கையுதிர்த்தலில் இருந்து பெறப்பட்ட வருமானம்			(6,755)	
ஒதுக்கீட்டுக் கணக்குகளுக்கான முன்னைய வருட சீராக்கங்கள் மற்றும் பரிமாற்றங்கள்			(74,633,779)	
பணிக்கொடைக்கான வழங்கல்				
தொழிற்படு மூலதனத்தில் உள்ள பொருட்களில் உள்ள மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டுப் பெறுபேறு	51,209,952	134,606,247	228,479,519	227,520,322
		1,831,440,551		1,094,635,573
தொழிற்படு மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்				
குறுகிய கால வருமதிகளின் அதிகரிப்பு				
கையிருப்புக்கள்	(76,311,868)		(11,735,538)	
புணிக்கொடைக் கொடுப்பனவு	3,022,651		23,709,014	
வருமதிகள் மற்றும் அட்டுறு செலவுகள்	(31,918,092)		(8,769,575)	
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட நிகரப் பணம்	63,053,369)	(42,153,941)	(23,896,578)	(20,692,677)
		1,789,286,610		1,073,942,896
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட காசுப் பாய்ச்சல்				
நீண்ட கால வருமதிகளின் அதிகரிப்பு	27,417,335		13,201,420	
நிலையான சொத்துக்களைக் கொள்ளல்	(99,684,366)		(122,559,100)	
நடைமுறைச் செயற்பாட்டில் உள்ள மூலதனம்	(11,546,636)			
நிலையான சொத்துக்களின் விற்பனை நடவடிக்கை				
முதலீடுகளின் (அதிகரிப்பு)/(குறைவு)	(1,500,000,000)		6,755	
மூலதனமாக்கப்பட்ட வட்டி				
முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட நிகரப் பணம்	(124,023,820)		(971,761,998)	
நிதி நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட காசுப் பாய்ச்சல்				
விசேடமாக நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள்	8,014,311		3,742	
வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள்	482,631		(1,049,300)	
நிதி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட காசு		8,496,942		(1,045,558)
காசு மற்றும் காசுக்கு சமனானவைகளின் நிகரக் காசு அதிகரிப்பு		89,946,065		(8,215,585)
வருட ஆரம்பத்தின் போதான காசு மற்றும் காசுக்கு சமனானவைகள்		49,124,196		57,339,782
வருட இறுதியின் போதான காசு மற்றும் காசுக்கு சமனானவைகள்		139,070,261		49,124,197

2016 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான உரிமையாண்மை மாற்றங்களின் கூற்றுக்கள்

	திரண்ட நிதி	மூலதன ஒதுக்கீடு	மீள்மதிப்பீட்டு ஒதுக்கீடு	வெளிநாட்டு ஒதுக்கீட்டு நிதியம்	திரண்ட மிகைகள்	மொத்தம்
2015/01/01ஆம் திகதியாகும் போதான நிலுவை	**19,944,705**	**16,064,386**	**444,422,000**	**286,249,551**	**1,077,745,952**	**1,844,426,594**
மேலதிக. ஆண்டுக்கான மிகை	-	-	-	-	**867,115,251**	**867,115,251**
மீள்மதிப்பீட்டு மிகை	-	-		-	-	-
வெளிநாட்டு நிதியினை	-	-	-		-	-
மூலதனமாக்குதல் முந்தைய வருட சீராக்கங்கள்	-	-			**(74,633,782)**	**(74,633,782)**
2016/01/01ஆம் திகதியாகும் போதான நிலுவை	**19,944,705**	**16,064,386**	**444,422,000**	**286,249,551**	**1,870,227,421**	**2,636,908,063**
மேலதிக. ஆண்டுக்கான மிகை	-	-	-	-	**1,696,834,303**	**1,696,834,303**
முந்தைய வருட சீராக்கங்கள	**(19,944,705)**	**413,095,614**	**(444,170,586)**	**(38,199,415)**	**22,039,642**	**(67,179,450)**
2016/12/31ஆம் திகதியாகும் போதான நிலுவை	**0**	**429,160,000**	**251,414**	**248,050,136**	**3,589,101,366**	**4,266,562,916**

மத்திய கலாசார நிதியம்
2016 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

	குறிப்பு	2016 ரூ.	2015 ரூ. (மீள்குறிப்பிடப்பட்ட)
வருமானம்			
நுழைவுச்சீட்டு விற்பனைகள்	10	344,925,208	2,751,061,677
மாதிரிகள் விற்பனைகளிலிருந்தான பங்களிப்பு	11	2,608,009	2,923,806
வெளியீட்டு விற்பனைகளிலிருந்தான பங்களிப்பு	12	8,846,068	1,931,050
அச்சிடுதலில் இருந்தான பங்களிப்பு	13	13,155,989	11,299,313
முதலீடுகளில் இருந்தான பங்களிப்பு		233,863,909	95,006,954
தாமதக் கட்டணங்களிலிருந்தான வருமானம்		27,097,930	
ஏனைய வருமானம்	14	26,563,180	16,459,409
மொத்த வருமானம்		**3,758,060,292**	**2,878,682,209**
<u>செலவினம்</u>			
வேதனங்கள், சம்பளங்கள் மற்றும் தொழிலாளர் நலன்கள்	15	1,367,626,547	1,238,315,468
பணிக்கொடை		51,209,952	228,479,520
மதிப்பிறக்கம்		110,494,226	73,681,337
விற்பனை மேம்பாடு மற்றும் பொது மக்கள் உறவுகள்		10,943,554	14,793,399
வழங்கல்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட நுகர்பொருட்கள்	16	166,301,493	158,770,101
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின்	17	62,628,968	75,951,005
செயற்றிறனின்மை	18	74,347,011	47,861,827
ஒப்பந்த சேவைகள்		344,232	176,828
நிதிக் கிரயம்		500,000	500,000
கணக்காய்வுக் கட்டணம்	19	27,261,401	
ஊக்க ஊதியம்	20	189,568,606	173,037,474
ஏனைய செலவுகள்			
மொத்த செலவினம்		**2,061,225,989**	**2,011,566,959**
வருடத்திற்கான மிகை/(குறை)		**1,696,834,303**	**867,115,250**

03.2

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. சீஏஎஸ்/பீ/சீசீஎப்/1/16/34   මබේ අංකය / உமது இல. / Your No.   දිනය / திகதி / Date 2018 பெப்ரவரி 28

பணிப்பாளர் நாயகம்,
மத்திய கலாச்சார நிதியம்

மத்திய கலாச்சார நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1980 இன் 57 ஆம் இலக்க மத்திய கலாச்சார நிதியச் சட்டத்தின் 9(4) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மத்திய கலாச்சார நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1980 இன் 57 ஆம் இலக்க மத்திய கலாச்சார நிதியச் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மத்திய கலாசார நிதியச் சட்டத்தின் 9(4) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை மத்திய கலாச்சார நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்

செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02

மீளாய்வாண்டின் போது முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,600 மில்லியன் தொகை மற்றும் முதலீடுகளை திருப்பி எடுத்தல் ரூபா 100 மில்லியன் தொகை முறையே காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் காசு உள்பாய்ச்சல் என காசுப்பாய்ச்சல்கூற்றில் வெவ்வேறாக காட்டப்பட்டிருந்தது. மேலும், ஆண்டின் போது மூலதனப்படுத்தப்பட்ட முதலீட்டு வட்டி ரூபா 124 மில்லியன் தொகை காசு வெளிப்பாய்ச்சல் என காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07

நடைமுறை அல்லாத சொத்துக்களின் ஆக்கபூர்வமான வாழ்க்கைக் காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாமையால் ரூபா 191.4 மில்லியன் கிரயத்தையுடைய நிலையான சொத்துக்களுக்காக முற்றாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டது. அதன் பிரகாரம், ஏற்பட்டிருந்த மதிப்பீட்டு தவறினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் மாற்றியமைப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், அகற்றுவதற்கென காணப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐயக்கடன் ஒதுக்கம் தொர்பாக நிதியத்தினால் கடைபிடிக்கப்பட்டு வரும் கணக்கீட்டு கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்காததுடன் 05 வருடத்திற்கு மிகையான காலம் முதல் அறவிடப்படாத ரூபா 1,587,362 இற்கான கடன்பட்டோர் மீதிகள் காணப்பட்ட போதிலும் அது தொடர்பாக

மீளாய்வு செய்யப்படாமல் எல்லா வருடங்களிலும் ரூபா 1,964,833 தொகை ஐயக்கடன் என ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நிதியத்தினால் தொள்பொருளியல் இடங்களைப் பார்வையிடுவோர்களுக்காக வழங்குவதற்காக அச்சிடப்பட்டிருந்த அனுமதிப்பத்திரங்களில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 3,424,990 தொகைக்கான அனுமதிப்பத்திர இருப்பினை நிதிக்கூற்றுக்களின் உட்படுத்தியிருக்காமையால் அனுமதிப்பத்திரங்களின் இறுதி இருப்பு மீதி மற்றும் ஆண்டிற்காக இலாபம் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) இருப்பு கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம், 08 செயற்திட்டங்கள் தொடர்பாக காணப்பட்ட சொரூபங்கள், கட்டிடப் பொருட்கள், காகிதாதிகள் மற்றும் வெளியீடுகளின் பெறுமதி ரூபா 13,179,037 தொகை 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இறுதியிருப்பில் உள்ளடங்கியிருக்காமையால் மீளாய்வாண்டிற்கான இறுதியிருப்புக்கள் மற்றும் ஆண்டிற்கான இலாபம் அதே தொகையினால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) ஆண்டின் போது பல்வேறு தரப்பினருக்கு வெகுமதியாக வழங்கியிருந்த ரூபா 1,415,122 தொகை பெறுமதியான சொரூபங்கள் மற்றும் வெளியீடுகள் இருப்புக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக விற்பனவுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தாமையால் ஆண்டிற்கான விற்பனவுகள் அதே தொகையால் மிகையாகவும் ஆண்டிற்கான சொரூபங்களின் இருப்பின் பெறுமதி ரூபா 1,286,258 இனால் மற்றும் வெளியீடுகளின் இருப்பு ரூபா 128,864 தொகை மிகையாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு இருப்பு கணிப்பீடு அறிக்கையின் பிரகாரம் ஜேதவன செயற்திட்டம் தொடர்பாக ரூபா 1,944,837 தொகை பெறுமதியான மிகை இருப்பு தொகையொன்று அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான காரணங்களை தேடி நிதிக்கூற்றுக்களில் சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) நிதியத்தின் நடைமுறைக் கணக்கு ஒன்று தொடர்பாக 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கி இணக்கக் கூற்றில் 2016 ஜூன் முதல் காணப்படும் ரூபா 10,000 இற்கான இனங்காணப்படாத செலவு மீதியொன்று காட்டப்பட்டிருந்ததுடன் அம்மீதி 2017 அக்தோபர் அளவிலும் இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 விளக்கமளிக்காத வித்தியாசங்கள்

2 செயற்திட்டங்கள் தொடர்பாக நிரந்த தொழிலாளர்களுக்கு வழங்கியிருந்த மோட்டார் சைக்கிள்கள் கடன் மீதிக்காக தலைமையலுவலத்தினால் தயாரித்திருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம் மற்றும் செயற்திட்டத்தினால் அனுப்பியிருந்த அறிக்கையின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 270,808 இற்கான இணக்கஞ் செய்யப்படாத வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய இடர்கடன் ரூபா 287,083 தொகையும், 03 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய வீடமைப்புக் கடன் ரூபா 766,048 தொகையும், 55 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய விழா முற்பணம் ரூபா 267,525 தொகையும், 11 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய விஷேட முற்பணம் ரூபா 28,991 தொகையுமாக 1 வருடத்திற்கும் 5 வருடங்களுக்குமிடையே கால வீச்சில் அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட கடன் மீதிகளை பிணையாளர்களிடம், ஆதனங்களின் மூலம் அல்லது சட்ட செயற்பாடுகளின் மூலம் அறவீடு செய்வதற்காக இதுவரை நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. மேலும், 05 வருடங்களை விட மிகையான விழா முற்பணங்கள் ரூபா 1,049,260 தொகையும், விஷேட முற்பணங்கள் ரூபா 76,499 தொகை அறவீடு செய்யப்படாமல் காணப்பட்டதுடன் அக்கடன் மீதிகளும் ஒரு வருடத்தில் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட போதிலும் அவ்வாறு செய்யாமைக்கான காரணம் விளக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பலவின கடன்பட்டோர் மீதியில் கலாச்சார அலுவல்கள் அமைச்சில் இருந்து 4 வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 672,577 இற்கான மீதியொன்று காணப்பட்டது.

(இ) நடைமுறை அல்லாத பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள விஷேட நிதியம் மற்றும் வெளிநாட்டு நிதியம் செயற்திட்டங்கள் தொடர்பாக முறையே ரூபா 8,806,885 உம் மற்றும் 4,376,549 இற்கான மீதிகள் 2012 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்களுடன் தொடர்பு	இணக்கமின்மைகள்
(அ) 1980 இன் 57 ஆம் இலக்க மத்திய கலாச்சார நிதியச் சட்டம்	
i. 4 (இ) ஆம் பிரிவு	நிதிக்கூற்றுக்களின் ஏனைய கலாச்சார செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 79,074,872 தொகை பன்சலைகள், பெரஹராக்கள், விஹாரைகள் மற்றும் மத விழாக்களுக்காக வழங்கியிருந்த போதிலும் இந்த நன்கொடைகள் தொடர்பாக மேற்கூறிய பிரிவின் பிரகாரம் நிருவாகசபையின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. மேலும் மேற்கூறிய பிரிவுக்கு முரணாக நிருவாக சபையின் அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் போது பல்வேறு தரப்பினருக்கு முறையே ரூபா 1,286,258 தொகை மற்றும் ரூபா 128,864 தொகை பெறுமதியான சொரூபங்கள் மற்றும் பிரசுரங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தன.
ii. 4(ஊ) ஆம் பிரிவு	மேற்கூறிய பிரிவின் பிரகாரம் நிதியத்திற்குச் சொந்தமாக பணத்தை முதலீடு செய்வதற்காக நிருவாக சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும் மீளாய்வாண்டின் போது நிலையான வைப்புக்களில் முதலீடு செய்திருந்த ரூபா 1,600 மில்லியன் தொகை தொடர்பாக நிருவாக சபையின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை.

(ஆ) 1940 இன் 9 ஆம் இலக்க தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் 21(1) ஆம் பிரிவு

மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 21(1) ஆம் பிரிவின் பிரதான தொல்பொருளியல் ஆணையாளரிடம் பெற்றிருந்த அங்கீகாரம் ஒன்று இன்றி அல்லது 20 ஆம் பிரிவின் பிரகாரம் ஏற்பட்டுத்திய உடன்படிக்கை யொன்று இன்றி அல்லது தொல்பொருளியல் பாதுகாப்பு நினைவு சின்னங்களில் எதுவித திருத்த வேலை ஒன்று, புனர்நிர்மாணம் ஒன்று, மாற்றமொன்று மேற்கொள்ளல் அல்லது மேலதிக நிர்மாண வேலையொன்று மேற்கொள்வதற்கு முடியாதெனினும், 2008 ஜூன் 06 திகதிய 1553 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானி பாதுகாக்கப்பட்ட தூபங்கள் என வெளியிடப்பட்ட சித்தம் கல்லென ரஜமஹா விகாரைக்கு சொந்தமான பூமியின் தர்ம மண்டபம் மற்றும் பழைமை வாய்ந்த தேவாலயத்தின் புனர்நிர்மாண அலுவல்களுக்காக நிதியத்தினால் ரூபா 16,258,246 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) இலங்கை சனநாயக சோசலிச குடியசரின் நிதிப்பிரமாணக் கோவை

(i) நிதிப்பிரமாணங்கள் 102,103,104 மற்றும் 105

❖ 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பண்டங்கள் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மொனறாகலை செயற்திட்டத்திற்கு உரிய மண் வெட்டிகள், பெருஞ் சுத்தியல்கள் போன்ற உபகரணங்கள் மற்றும் தேவையான 09 வகையைச் சேர்ந்த 19 விடயங்களும் பட்டலீய சொரூபங்கள் தயாரிக்கும் பாடசாலைக்கு சொந்தமான 3132

சதுர அடி பித்தளைத் தகரம் இருப்பொன்றிற்கான பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் விசாரனை மேற்கொள்ளப்பட்டு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களை இனங்காணல் 2017 நவம்பர் 30 திகதி வரை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

❖ தம்புள்ள வெளியீடுகள் களஞ்சியத்தில் ரூபா 499,368 தொகை பெறுமதியான வெளியீடுகள் தொக்கு ஒன்று பற்றாக்குறை ஒன்று ஏற்பட்டு 5 வருடங்களை விட மிகையான காலமொன்று கழிந்திருந்த போதும் அது தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பொறுப்பு சொல்ல வேண்டியவர்களை [redacted]

		மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, நிதியத்திற்கு சொந்தமான தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் காணப்பட்ட ரூபா 1,155,763,937 தொகை பெறுமதியுடைய சொத்துக்களை பௌதீக ரீதியாக உளமையை மெய்ப்பிப்பதற்கு இயலாத நிலைமை ஒன்று காணப்பட்டது.
(உ)	2002 நவம்பர் 28 திகதிய ஐஏஐ/2002/02 இலக்க திறைசேறி சுற்றறிக்கை	தலைமை அலுவலகத்தில் மற்றும் பிராந்திய அலுவலங்களில் காணப்பட்ட ரூபா 56,002,545 தொகை பெறுமதியான கணனிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையாக சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.
(ஊ)	2015 ஜுலை 10 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை	அபயகிரி செயற்திட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு காணப்பட்ட பயன்படுத்த முடியாத 04 டிரக்டர்கள், 02 மோட்டார் சைக்கிள்கள், ஒரு முச்சர வண்டி மற்றும் ஒரு நீர் பவுசர் என்பன தொடர்பான மேற்கூறிய சுற்றறிக்கையின் பிரகாரம் அகற்றுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3 நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 1,696,834,303 இற்கான மிகையொன்றினை காட்டியதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 867,115,250 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதி விளைவுகள் ரூபா 829,719,053 இனால் அதாவது 95.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் நுழைவுச் சீட்டு விற்பனவு வருமானம் ரூபா 694,863,531 இனால், வெளியீடுகள் விற்பனவு வருமானம் ரூபா 6,915,018 இனால், முதலீட்டு வருமானம் ரூபா 138,856,955 இனால் ஏனைய வருமானங்கள் ரூபா 10,103,771 இனால் மற்றும் பிற்போடப்பட்ட வருமானம் ரூபா 27,097,930 இனால் அதிகரித்திருத்தல் மேற்கூறிய வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்துள்ளது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிவிளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆண்டின் போது ரூபா 227,294,733 தொகைக்கான மிகை இடையறாமல் வளர்ச்சியடைந்திருந்தது. ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வினை கவனத்தில் கொள்ளப்பட்ட பின்னர் 2012 ஆண்டின் போது ரூபா 891,233,340 தொகையால் காணப்பட்ட பங்களிப்பு இடையறாது வளர்ச்சியடைந்து 2016 ஆண்டின் போது ரூபா 3,034,217,986 தொகையாகியிருந்தது.

4 செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

1980 இன் 57 ஆம் இலக்க மத்திய கலாச்சார நிதியச் சட்டத்தின் பிரகாரம் கலாச்சார முக்கோணத்தில் காணப்படும் கலாச்சார தூபிகள் மற்றும் வேறு ஒரு பிரதேசத்தில் காணப்படும் கலாச்சார தூபிகளை அபிவிருத்தி செய்தல், ஜேதவன தாகபை திட்டத்தில் மற்றும் வேறு திட்டங்களின் அனைத்து செலவுகளையும் தீர்த்தல். இலங்கையில் அல்லது அதற்கு வெளியே மத விடயங்களை மேம்படுத்தல், மதத்தை உயர்வடையச் செய்தல் அல்லது மதம் சார்ந்த இடங்களை பேணல், கலாச்சார மற்றும் மதம் சார் பரப்புகளில் சேவையாற்றியுள்ள நபர்களுக்கு மானியங்களை வழங்குதல், கலை விடயங்களுக்காக உதவிகள் வழங்குதல் மற்றும் பொதுமக்களுக்கு நலன்களை வழங்கும் ஏனைய மதம்சார் அல்லது கலாச்சார விடயங்களுக்காக நிதியங்களை ஈடுபடுத்தல் என்பன பிரதான குறிக்கோள்களாகும். இந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுற்றுலா சபை இணையத்தளத்தில் இருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் பிரகாரம் 2013 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை இலங்கைக்கு வந்துள்ள உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கை மற்றும் நிதியத்தின் ஏடுகளின் பிரகாரம், நிதியத்தினால் விற்பனை செய்திருந்த உல்லாசப் பிரயாணிகள் நுழைவுச் சீட்டுக்களின் எண்ணிக்கையின் இடையே ஆன பகுப்பாய்வு ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

ஆண்டு	இலங்கை வந்துள்ள உல்லாச பிரயாணிகளின் எண்ணிக்கை	நிதியத்தினால் விற்பனவு செய்திருந்த உல்லாசப் பிரயாணிகளுக்கான நுழைவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை	விற்பனை செய்திருந்த நுழைவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை உல்லாசப் பிரயாணி களுக்கு ஒப்பாக சதவீதமொன்றாக	நுழைவுச் சீட்டு வருமானம்
				ரூபா
2013	1,274,593	504,699*	39*	1,748,439,894
2014	1,527,153	627,136*	41	2,200,143,813
2015	1,798,380	722,676*	40	2,751,061,677
2016	2,050,832	903,755*	45	3,445,925,208

* ஒரு உல்லாச பிரயாணியினால் ஒரு தொல்பொருளியல் நிலையம் மாத்திரம் பார்வையிட்டதாக அனுமானித்து கணக்கிடல் மேற்கொள்ளப்பட்டது)

மேற்கூறிய தகவல்களின் பிரகாரம், 2013,2014,2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது இலங்கைக்கு வந்திருந்த உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கைக்கு ஒப்பாக நிதியத்தினால் விற்பனை செய்திருக்க நுழைவுச் சீட்டுக்களின் எண்ணிக்கை முறையே 39 சதவீதம், 41 சதவீதம், 40 சதவீதம் மற்றும் 45 சதவீதமாக காணப்பட்டது. அதன் பிரகாரம் பழமை வாய்ந்த கலாச்சார இடிபாடுகள் உடைய இடங்களை பார்வையிடல் மற்றும் மத விவகாரங்களின் மேம்பாட்டுக்காக உல்லாச பிரயாணிகளை ஈர்ப்பதற்காக விற்பனை மேம்பாட்டு நடைமுறை ஒன்றினை அமுல் நடத்துவதன் ஊடாக தொடர்ந்தும் வருமானத்தை அதிகரிக்க செய்வதற்கு இயலுமை ஒன்று காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதியத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த வேலைத்திட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்குத் திட்டமிட்டிருந்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 92,657,086 இற்கான அகழ்தல் மற்றும் பாதுகாத்தல் செயற்திட்டங்களுக்கான 22 வேலைத்தளங்கள் மற்றும் செயற்பாடுகள் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வேலைத்திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருக்காத 03 செயற்திட்டங்களுக்கான 04 வேலைத்தளங்கள் மற்றும் செயற்பாடுகளுக்காக ரூபா 3,976,597 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) 2016 ஆண்டிற்கான முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ஆண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 51 வேலைத்தளங்கள் மற்றும் செயற்பாடுகளில் 21 இற்காக வேலைத்திட்டத்தின் பிரகாரம் மிகை மதிப்பீட்டின் மூலம் பண ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்து அதில் அடங்கியிருந்த 13 வேலைத்தளங்கள் மற்றும் செயற்பாடுகளுக்காக மிகை மதிப்பீட்டின் பிரகாரம் வேலை அலகுகள் திட்டமிடப்பட்டிருந்தன.

4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) கொழும்பு தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள வளவின் சட்டரீதியான உரிமையை நிதியத்திற்கு உரித்தாக்குவதற்கு 2017 அக்தோபர் 31 திகதி வரை இயலாதுள்ளது.

(ஆ) கல்வி அமைச்சின் மேற்பார்வையின் கீழ் காணப்பட்ட அபேகம நிறுவனத்தில் மேற்பார்வை விடயங்கள் மத்திய கலாச்சார நிதியத்திற்கு சாட்டுவதற்காக இருதரப்பினரினாலும் கையொப்பமிடப்பட்ட 2016 ஜுன் 16 ஆம் திகதிய ED/10/NH/03/02/01/07 இலக்கங் கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் 08 ஆம் பந்தியின் பிரகாரம் உடனடியாகச் செயற்படும் விதமாக அபேகம நிறுவனத்தின் அனைத்து கட்டிடங்கள் மற்றும் பண்டங்களை முறைசார் விதமாக கல்வி அமைச்சில் இருந்து ஒப்புக்கொள்வதற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனினும் நிதியத்தினால் 2017 அக்தோபர் 31 திகதி வரை அவ்வாறு செய்திருக்கவில்லை.

(இ) 2014 நவம்பர் 12 திகதிய கூடிய பொது முயற்சி பாராளுமன்ற தெரிவுக்குழுவினால் எடுக்கப்பட்டிருந்த 09 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அதற்கான திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளும் படியும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் பணிப்பாளர் (நிதி), பணிப்பாளர்(நிருவாகம்), நுழைவுச் சீட்டு விற்பனையாளர், உதவிப் பணிப்பாளர்(நிதி), பிரதான பரிசோதனை உத்தியோகத்தர், சட்ட உத்தியோகத்தர்கள் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாமல் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

(ஈ) மிஹிந்தலை ரஜமஹா விஹாரையின் பிக்குமார் மடம் மற்றும் தர்ம மண்டபம் நிர்மானிப்பதற்காக 2016 மே 11 ஆம் திகதி 2863 ஆம் இலக்க உறுதிச் சீட்டின் மூலம் ரூபா 15 மில்லியன் மூலம் தொல்பொருளியல் திணைக்களத்திற்கு செலுத்தியிருந்த போதிலும் கொடுப்பனவு காசேட்டில் கொடுப்பனவை பெறுபவர் அநுராதபுர மாவட்ட செயலாளர் என குறிப்பிடப்பட்டிருந்தது.

(உ) நிதியத்தினால் விற்பனவு செய்யப்பட்டிருந்த நுழைவுச் சீட்டுக்களுக்காக 2015 திசெம்பர் 09 திகதி வாடிக்கையாளர் ஒருவரிடம் கிடைத்திருந்த ரூபா 231,000 இற்கான காசோலை ஒன்று மதிப்பளிக்கப்படாதிருந்ததுடன் 2017 அக்தோபர் 30 திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) 2014 ஆகஸ்ட் 13 திகதி ரூபா 5,000,000 தொகை ஹாதிகமுவ குருகொட விகாரையின் சமய போதனா மண்டபம் நிர்மாணிப்பதற்காக கிராம அபிவிருத்தி சங்கமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த சமய போதனை மண்டபத்திற்கான நிர்மாண வேலைகள் 2017 அக்தோபர் 31 திகதி வரையும் பூர்த்திசெய்திருக்கவில்லை.

(எ) 2012 ஆண்டின் போது ரூபா 4.2 மில்லியன் தொகைக்கு பெறுமதி மதிப்பீடு செய்திருந்த நிதியத்தின் ஆதனம் ஒன்றாகிய கண்டியில் உள்ள பிரீம்ரோஸ் காணி 2013 ஆண்டு முதல் மகரகம சாசன ஊழியர் சங்கம் என கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு பிக்குகள் பயிற்சி வழங்கும் நிலையம் என நடாத்தப்பட்டு வருகின்ற போதிலும் அந்த ஆதனங்களை நிதியத்திற்கு உரித்தாக்குவதற்காக முடியாதுள்ளது.

(ஏ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இருப்பு கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அபயகிரிய செயற்திட்டத்தின் மூலம் சந்நஹிரு சாய, பொதுவில் கடற்கரை மஹா விஹாரை, சிரி சம்போதி யோகாஷிர தியான நிலையம், மஹமெவுனா தியான ஆச்சிரமத்திற்கு 2011 – 2014 காலப் பகுதியில் தற்காலிகமாக வழங்கியிருந்த 3105 G1 இரும்புக் குழாய்கள், 4150 கப்லின்ஸ் (Cufflinks) மற்றும் பண்டங்கள் எடுத்துச் செல்லும் மின் தூக்கி ஒன்று என்பவற்றை திருப்பிப் பெறுவதற்காக நிதியத்திற்கு இயலாதுள்ளது.

(ஐ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 19,944,705 தொகையான திரண்ட நிதியத்தில் உள்ளடங்கியுள்ள, 1983 ஆண்டு முதல் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்படும் ரூபா 66,390 தொகைக்கான இனங்காணப்படாத மீதி

ஒன்று ஏற்படுத்துவற்கான காரணத்தை கண்டு பிடித்து அதனை தீர்ப்பதற்கு பதிலாக திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

4.3 செயற்பாட்டு தொழில்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சொரூபங்கள் உற்பத்தி செய்தல், வெளியீடுகள் மற்றும் அச்சிடுதல் ஆகிய பிரிவுகளில் உற்பத்தி கிரயத்தை கணிக்கும் போது மறை கிரயத்தை கவனம் செலுத்தாமையால் சொரூபங்கள் உற்பத்தியில் உற்பத்திக் கிரயம் சரியான முறையில் இனங்காணாமல் விற்பனை விலை தீர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான தயாரிக்கப்பட்டிருந்த வேலைத் திட்டத்தில் 10 செயற்திட்டங்களில் அடங்கியுள்ள 21 செயற்பாடுகளின் மதிப்பீட்டுக் கிரயம் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் உள்ளவாறான கிரயத்தில் 20 சதவீதம் முதல் 186 சதவீத வீச்சில் முரண்கள் காணப்பட்டது.

4.4 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 பெப்ரவரி 02 திகதிய 11/0169/555/004 இலக்கம் கொண்ட அமைச்சரவை பத்திரத்தில் பிரகாரம் நிதியத்தினால் உழைக்கப்படும் நுழைவுச் சீட்டுக் கட்டணம் வருமானத்தில் 25 சதவீதம் தொல்பொருள் விஞ்ஞான நிலையங்களை பராமரிப்பதற்காக தொல்பொருள் முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பிற்கு வழங்கப்பட வேண்டும். அதன் பிரகாரம் 2016 ஆண்டின் நிதியத்தின் வருமானம் ஆகிய ரூபா 3,445,925,208 இனால் 25 சதவீதமென ரூபா 861,481,302 தொகை அந்த நம்பிக்கை பொறுப்பிற்கு வழங்கப்பட வேண்டுமெனினும் ரூபா 104,490,691 தொகை மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதியத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஒன்றாகிய உதவிப் பணிப்பாளர்(சட்டம்) பதவிக்காக ஒப்பந் அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டு, ஒப்பந்த காலத்தை நீடித்து 2016 ஆகஸ்ட் 01 திகதி முதல் 2017 ஜூலை 30 திகதி வரை மாதத்திற்கு ரூபா 72,916 வீதம் ரூபா 874,992 தொகை படியாக செலுத்தப்பட்டிருந்தது. நிதியத்தில் அனைத்து சட்ட விடயங்களுக்கான கடமைகளை செயற்படுத்தல் மற்றும் நீதிமன்ற விடயங்களில் நிதியத்தின்

சார்பில் சட்டத்தரணி ஒருவராக நீதிமன்றத்தில் ஆஜராகுதல். இந்த பதவிக்கு சாட்டப்பட்டுள்ள கருமங்களாக இருந்தன. எனினும் 03 சந்தர்ப்பங்களில் வெளி சட்டத்தரணிகளிடம் பெற்றிருந்த சேவைக்காக நிதியத்தினால் மீளாய்வாண்டின் போது ரூபா 1,457,425 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2015 மே 15 திகதிய 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள் 3.3 ஆம் பிரிவின் பிரகாரம் உத்தியோகபூர்வ வாகனம் ஒன்றிற்கு உரித்துள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு அந்த உத்தியோகபூர்வ வாகனத்தை பயன்படுத்துதல் அல்லது மாதாந்த ரூபா 30,000 தொகை மற்றும் பதவிக்கு உரித்தான மாதாந்த எரிபொருள் படியினை பெற்றுக்கொள்ள முடியும். 2016 அக்தோபர் 27 திகதி 1/2015(i) இலக்க பொது முயற்சிச் சுற்றறிக்கையில் 2016 நவம்பர் 01 திகதி முதல் செயற்படும் விதத்தில் அப்படியினை ரூபா 50,000 வரை அதிகரித்திருந்த போதிலும் நிதியத்தினால் பதில் கடமையாற்றும் பணிப்பாளர்(நிதி) க்கு 2016 ஜனவரி 01 திகதி முதல் ஆகஸ்ட் 31 வரை ரூபா 50,000 போக்குவரத்துப் படி வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நிதியத்தினால் 08 மாதங்களுக்கான ரூபா 160,000 இற்கான போக்குவரத்துப் படி ஒன்று பதில் கடமையாற்றும் பணிப்பாளர்(நிதி) க்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2016 ஜூலை 06 முதல் 08 வரையான காலப்பகுதியில் கண்டிப் பிரதேசத்தில் தனியார் ஹோட்டல் ஒன்றில் நடாத்தப்பட்ட கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கும் செயலமர்வு ஒன்றிற்காக நிதியத்தின் நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத என்ற வகையில் 86 நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் உத்தியோத்தர்கள் மற்றும் ஊழியர்கள் பங்குபற்றி அதற்காக ரூபா 1,430,200 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு பங்குபற்றல் படியாக ரூபா 53,500 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக சட்ட ஏற்பாடுகள் விளக்கப்படவில்லை. அவ்வாறான செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தும் போது 2015 செப்தெம்பர் 25 ஆம் திகதிய SP/SB/07/15 இலக்கம் கொண்ட சனாதிபதி சுற்றறிக்கையில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகள் மீது கவனம் செலுத்தியிருக்கவில்லை.

4.5 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கெடபெருவ விகாரையில் இளைப்பாரும் மண்டபம் நிர்மாணிக்கும் ஒப்பந்த வேலை 2015 மே 21 திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும் 2015 ஜுலை 07 ஆம் திகதியே பணிப்பாளர் நாயகம் மற்றும் ஒப்பந்தக்காரரிடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட 568 நாட்களில் வேலைகளை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 ஜுன் 13 திகதியளவில் 73 சதவீதமான வேலை அளவே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. வழங்கியிருந்த முற்பணத் தொகையில் 11 சதவீதம் பெறுமதி கூட்டியவரி ஆகிய ரூபா 861,871 தொகையும் அடங்கியிருந்த போதிலும் முற்பணத்தை மீண்டும் அறவீடு செய்யும் போது அத்தொகையினை அறவீடு செய்திருக்காமையால் மேற்கூறிய ஒப்பந்த வேலையின் மூலம் நிதியத்திற்கு ரூபா 861,871 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) ஆலோசனையாளர்கள் தெரிவு செய்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்தல் இலங்கை பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 3:1 மற்றும் 3:2 பிரிவுகளின் பிரகாரம் ஆலோசனை நிறுவனங்கள் அல்லது தனிப்பட்ட ஆலோசனையாளர்கள் தெரிவு செய்யும் போது ஆலோசனையாளர்களின் தொழில்நுட்பம் சார் மற்றும் நிதிப் பிரேரணைகளை இணக்கஞ் செய்தலை அடிப்படையாக வைத்து போட்டி அடிப்படையிலான பெறுகைகள் நடைமுறை கடைபிடிக்கவேண்டும். எனினும், அந்த பிரிவுகளுக்கு முரணாக நிதியத்தினால் தொல்பொருளியல் ஆலோசகர், கட்டடக்கலை ஆலோசகர் மற்றும் நிலச் சரிதவியல் சார் ஆலோசனை சேவை பெற்றுக்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,973,692 தொகை செலவிடப்பட்டிருந்தது.

4.6 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கிய நிதியத்தின் வளங்கள்

நிதியத்திற்கு சொந்தமான ஹந்தானையில் அமைந்துள்ள ரூபா 4 மில்லியன் பெறுமதியான 02 கட்டிடங்கள் 2012 ஆண்டு முதல் கட்டிடத் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் அந்த கட்டிடங்களை நிதியத்திற்கு உரித்தாக்குவதற்காக முடியாதிருந்தது.

4.7 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடவடிக்கை முறையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் பணிப்பாளர் நாயகம் பதவிக்காக நியமனம் வழங்கும் அதிகாரியினால் தீர்மானிக்கும் விதமாக பகிரங்க அறிவித்தல் வெளியிடுவதன் மூலம் விண்ணப்பம் அழைக்கப்பட்டு பின்னர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் உள்வாரி அல்லது வெளிவாரி விண்ணப்பதாரிகளிடம் இருந்து ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், அந்த செயற்பாடுகளை கடைபிடிக்காமல் வரிசை அமைச்சின் செயலாளரினால் 02 வருட காலப்பகுதிக்காக பணிப்பாளர் நாயக பதவிக்காக 2015 மார்ச் 19 திகதி ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

(ஆ) நிதியத்தின் பணிப்பாளர்(நிதி) பதவிக்காக 2012 ஆண்டு முதல் நிரந்தர நியமனம் ஒன்று வழங்கியிருக்காததுடன் அப்பதவிக்காக 2016 ஆகஸ்ட் மாதத்தில் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு 2016 ஆகஸ்ட் 15 திகதி முதல் 2016 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 341,210 இற்கான சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதியத்தின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடவடிக்கை முறையின் 4.3.2.1 உப பந்தியின் பிரகாரம் பணிப்பாளர்(நிதி) பதவிக்காக வெளிவாரி அடிப்படையாகச் சேர்க்கப்படும் போது கல்வித் தகைமைகளான பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றிருந்த கணக்கீடு / நிதி முகாமைத்துவம் தொடர்பான பட்டம் ஒன்றுடன் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக பட்டப்பின்படிப்பு அல்லது இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அல்லது பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் அல்லது சான்றிதழ் பெற்ற கணக்காளர்களின் நிறுவனத்தை சார்ந்த அங்கத்துவத்தை பெற்றிருக்க வேண்டுமென காட்டப்பட்டுள்ளது. எனினும், அப் பதவிக்கான ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த உத்தியோகத்தர் கணக்கியல் டிப்லோமா மற்றும் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இறுதி 1 பரீட்சை மாத்திரம் சித்தியடைந்த ஒருவராக இருந்தார்.

(ii) நிதியத்தின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடவடிக்கை முறையின் 4.4 உப பந்தியின் பிரகாரம் பணிப்பாளர் (நிதி) பதவிக்கான பொதுவான தகைமைகள் 30 வருடத்தில் குறையாத 50

வருடங்களை மிகையாக்காது இருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர் 70 வருடங்களை மிகைத்த ஒருவராக இருந்தார்.

(இ) முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் கலாச்சார மற்றும் கலை விவகார அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பிய 2011 ஜுலை 21 ஆம் திகதிய DMS/E/1/54/9/241 கொண்ட கடிதத்தின் 03 பந்தியின் பிரகாரம் எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு முன்னர் தற்போதைய ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையை திருத்த வேண்டும் என அறிவித்திருந்த போதிலும் 2017 அக்தோபர் 31 திகதி வரையும் அந்த நடவடிக்கை முறையை திருத்தியிருக்கவில்லை.

(ஈ) நிதியத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அடங்கியிருக்காத நூதனசாலைப் பணிப்பாளர் பதவிக்காக அரசாங்க சேவையில் இருந்து ஓய்வு பெற்றிருந்த உத்தியோகத்தர் ஒருவர் 2015 மே 05 திகதி ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு நியமனம் செய்யப்பட்டு வருடாந்தம் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்தது. அவ் உத்தியோகத்தருக்கு மாதாந்தம் ரூபா 38,500 வீதம் 2016 ஆண்டின் போது ரூபா 462,000 செலுத்தப்பட்டிருந்தது.

(உ) நிதியத்தின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடவடிக்கை முறையின் 4.6.2 உப பந்தியின் பிரகாரம் நிருவாக உத்தியோகத்தர் பதவிக்கு உள்ளக அடிப்படையில் சேர்க்கும் போது சேவை அனுபவம், கல்வித் தகைமைகள், விஷேட செயற்பாடுகள் மற்றும் செயலாற்றுகை என்பனவற்றினை அடிப்படையாக வைத்து புள்ளிகள் வழங்கல் மேற்கொள்ளப்பட வேண்டும். அங்கு விண்ணப்பதாரர்களுக்கான கல்வித் தகைமைகள் என்ற தேர்வு முறையின் கீழ் க.பொ.த(உயர்தர) பரீட்சை அல்லது அதனை விடக்கூடிய கல்வித் தகைமைகள் காணப்பட வேண்டுமென குறிப்பிட்டிருந்த போதிலும் கா.பொ.த(சாதாரண தர) பரீட்சை சித்தியடைந்த மற்றும் குறைந்த சேவை அனுபவத்தை கொண்ட நபர் ஒருவருக்கு கூடிய புள்ளிகள் வழங்கப்பட்டு நிருவாக உத்தியோகத்தர் பதவிக்காக 2016 ஜனவரி 01 திகதி பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தது.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 செயல் நடவடிக்கை திட்டம்

2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்கம் பொது நிதியச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நீண்ட கால தூரநோக்குகளுடன் குறிப்பிட்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோளை நிறைவேற்றி கொள்வதனை இலக்காகக் கொண்ட செயற்பாடுகளை உள்ளடக்கிய வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், நிதியத்தினால் மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருக்காததுடன் அகழ்தல் மற்றும் பாதுகாத்தல் செயற்திட்டங்களுக்காக மாத்திரம் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

5.2 பெறுகைகள் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆண்டிற்கான தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைகள் திட்டத்திற்காக வருடம் தொடங்குவதற்கு முன்னர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமெனினும் 2016 நவம்பர் 25 திகதியே அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

(ஆ) பெறுகைகள் திட்டத்தில் உள்ளடங்கியிருக்காத ரூபா 16,328,430 கிரயத்தையுடைய வாகனங்கள் மற்றும் ரூபா 2,970,200 தொகைக்கான கணனிகள் மற்றும் துனைக்கருவிகள் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) ஆலோசகர்கள் தெரிவு செய்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்தல் பெறுகைகள் வழிகாட்டல் கோவையில் 5.2.1(அ) ஆம் பிரிவின் பிரகாரம் பாதுகாப்பு ஆலோசனை சேவைகள் பெற்றுக் கொள்வதற்காக கட்டணங்கள் செலுத்தல் தொடர்பான தகவல்கள் நிதியத்தின் பெறுகைகள் திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்காக நிதியத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைகள் திட்டத்தில் பிராந்திய அலுவலகங்களுக்கான பெறுகைகள் பெற்றுக்கொள்ளும் பண்டங்கள், வேலைகள் மற்றும் சேவைகள் உள்ளடங்கியிருக்கவில்லை.

5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2003 ஜூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.5 பிரிவின் பிரகாரம் நிதி ஆண்டு தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் அந்த நிதியாண்டிற்கான பாதீடு, நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அதனது பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டுமெனினும், 2016 ஆண்டிற்கான பாதீடு நிருவாக சபையினால் 2016 நவம்பர் 25 ஆம் திகதியே அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ii) அந்தப் பாதீட்டில் பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகள் 21 சதவீதம் முதல் 203 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5.4 வருடாந்த அறிக்கை சபையில் சமர்பித்தல்

2003 ஜூன் 02 திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் 2013, 2014 மற்றும் 2015 ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் 2017 அக்தோபர் 30 திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்பித்திருக்கவில்லை.

5.5 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு பந்தியுடன் தொடர்பு மற்றும் ஆண்டு	அவதானிப்புகள்
(அ) 2012 – 4.5 அ, ஆ, இ	பொலன்னுறுவை புனித பூமியில் உள்ளக நுழை பாதையில் 1 கிலோமீற்றர் அபிவிருத்தி செய்யும் வேலைக்காக உரிய நியமத்தின் படி அல்லாத கொங்கிரீட் அச்சுக் கற்கள் பயன்படுத்தி ரூபா 22,099,917 தொகை செலுத்தியிருந்தல், அளவை பத்திரத்தின் பிரகாரம் நிறைவேற்றப்படாத

வேலைகளுக்காக ரூபா 4,660,998 தொகை செலுத்தியிருத்தல் மற்றும் A.B.C அடுக்கு 40 சதவீதம் மற்றும் கற்தூள் கலவை 50 வீதம் குறைவாக பயன்படுத்தியிருந்தமையால் பாதை சமமான தன்மையாக காணப்படாமை ஆகிய குறைபாடுகள் தொடர்பாக 2017 நவம்பர் 30 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ)	2013 – 4.4(அ)(ii)	பொலன்னறுவை புனித பூமியில் வெளிச் செல்லும் வாயிலில் இருந்து உட்பகுதியை நோக்கிச் செல்லும் பாதையின் 01 கிலோமீற்றர் தூரத்திற்கு கொங்கிரீட் அச்சுக் கற்கள் பரப்பி அபிவிருத்தி செய்யும் ஒப்பந்த வேலை வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொண்ட போது உரிய நியமத்தின் படி அல்லாத கொங்கிரீட் அச்சுக் கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக தரப் பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு முன்னர் பகுதி கொடுப்பனவாக ரூபா 16,992,545 தொகை செலுத்தப்பட்டிருந்தது.
(இ)	2015 – 4.8(அ)	பட்டலிய சொரூபங்கள் தயாரிக்கும் பாடசாலையின் நிருவாகக் கட்டிடம் நிர்மாணிக்கும் ஒப்பந்த வேலை தனியார் கம்பனி ஒன்றிற்கு 2014 செப்தெம்பர் 11 திகதி ரூபா 46.4 மில்லியன் தொகைக்கு வழங்கப்பட்டிருந்தது. 2015 மே 11 ஆம் திகதி ஒப்பந்த வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 அக்தோபர் 31 திகதி வரை நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.
(ஈ)	2015 – 4.4(அ)(iii)	ஊழியர் காப்புறுதி மேவகையை பெற்றுக் கொள்வதற்காக தனியார் காப்புறுதி கம்பனி ஒன்றுடன் பிழையான பெயர் பட்டியல் ஒன்று சமர்பித்து 50 ஊழியர்களின் பெயரகளை மிகையாக உட்படுத்தி அதற்காக ரூபா 475,000 செலுத்தியிருந்ததுடன் குறிப்பிட்ட போலி ஆவணங்களைத் தயாரித்த உத்தியோகத்தர்களிடம் அப்பணத்தை அறவீடு செய்வதற்காக 2017 அக்தோபர் 31 திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

	முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள்	அவதானிப்புக்கள்
(அ)	கணக்கீடு	சொரூபங்கள், வெளியீடுகள் மற்றும் அச்சு ஆகிய பிரிவுகளின் உற்பத்திக் கணக்கு தயாரித்து சரியான முறையில் உற்பத்தி கிரயத்தை இனங்கண்டிருக்காமை.
(ஆ)	பதவியணியின் நிருவாகம்	(i) வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்காமை மற்றும் நீண்ட காலம் முதல் சில பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்களின் சேவையில் ஈடுபடுத்தல். (ii) ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையை திருத்தி அமைக்காமை.
(இ)	பெறுகைகள்	(i) தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைத் திட்டத்திற்காக நிருவாக சபையின் அங்கீகாரத்தை பெறுவதற்கு தாமதித்தல். (ii) பெறுகைகள் திட்டம், பாதீடு மற்றும் உடன் நிகழ்வாக தயாரித்திருக்காமை.
(ஈ)	பாதீட்டுக் கட்டுப்பாடு	பாதீட்டுக்காக நிருவாக சபையின் அங்கீகாரத்தை பெறுவதற்கு தாமதித்தல் மற்றும் கணிசமான அளவு முரண்கள் காணப்பட்டமை.
(உ)	கடன்பட்டோர் கட்டுப்பாடு	(i) நீண்ட காலமாக காணப்படும் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்காமை.

	(ii)	ஐயக் கடன் ஒதுக்கத்திற்காக கணக்கீட்டு கொள்கை ஒன்று காணப்படாமை.
(ஊ) இருப்புக் கட்டுப்பாடு	(i)	இருப்புக் கணிப்பீட்டு அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்களிடையே வித்தியாசங்கள் காணப்பட்டமை.
	(ii)	நுழைவுச் சீட்டு இருப்புக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தெளிவாக காட்டப்பட்டிருக்காமை.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச். எம். காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

03.3 நிதிக் கூற்றுக்கள் பற்றிய கணக்காய்வு அறிக்கை தொடர்பான விடயங்களை முன்வைத்தல்.

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை (2016) (வரைபு) தொடர்பான காரண விளக்கம் -

2017 டிசம்பர் 08

31.12.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கான மத்திய கலாச்சார நிதியத்தின் முடிவுக் கணக்குகள் தொடர்பான உங்களின் CAS/B/CCF/1/16/34 இலக்கம் கொண்ட வரைவு அறிக்கை சம்பந்தமான கணக்காய்வு விசாரணைகள் தொடர்பான காரண விளக்கம்

2.2 நிதிக் கூற்றுகள் தொடர்பான கருத்துகள் வழங்கல்

2.2.1 இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள்

2.2.1. (அ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 01

இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரிவு இல. 53 இற்கிணங்க, நிதிக் கூற்றுகளின் குறிப்பு இல. 05 இல் கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கடந்த காலப் பகுதியுடன் ஒப்பிடப்பட்ட தகவல்கள் 2016 நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்ளும் அதே வேளை, எதிர்கால நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும் போது பிழை இன்றிக் காட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.2.1. (ஆ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 02

31.12.2016 இல் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றில் நிலையான வைப்பிற்காக முதலீடு செய்யப்பட்ட நிதியில் மீள எடுக்கப்பட்ட தொகை கழிக்கப்பட்டு தேறிய நன்மை காட்டப்பட்டுள்ளது. மேலும், ஒதுக்கப்பட்ட வட்டியானது காசு வெளிப் பாய்ச்சல் மற்றும் காசு உட் பாய்ச்சலாகக் கருதப்பட்டு காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப் பட்டுள்ளது.

இந் நிலைமை கணக்காய்வு விசாரணைகளில் காட்டப் பட்டதைப் போன்ற வடிவத்தில் சீர் செய்யப் பட்டு எதிர்கால காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும் போது ஏற்படும் கால தாமதங்களைத் தவிர்த்துக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.2.1. (இ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 07

2.2.1. (இ) i. நிதியத்திற்கு சொந்தமான ஹந்தானைப் பிரதேசத்திலுள்ள கட்டிடங்கள் தொடர்பான குறிப்பு நிதிக் கூற்றுகளில் குறிப்பு இல. 2.1.10 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.2.1. (இ) ii. நிலையான சொத்துகளின் வினைத்திறனான ஆயுட்காலம் பிழை இன்றி மதிப்பிடப்படாமை மற்றும் எச்சப் பெறுமதி பிழை இன்றி மதிப்பிடப்படாமை காரணமாக அந் நிலையான சொத்துகள் முழுமையாக தேய்மானத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. எனினும் இந் நிலையான சொத்துகளின் பெரும்பாலானவையான மோட்டார் வாகனம் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு பாவனைக்கு எடுக்கப்படும் நடவடிக்கையில் உள்ளது. இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 03 இற்கு இணங்க, மதிப்பிடப்பட்ட வழுப் பெறுமதி கவனத்தில் கொள்ளப்பட்டு எதிர்வரும் நிதி ஆண்டில் சீர் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.2.1. (இ) iii. பிரதான அலுவலகம் அமைந்துள்ள காணியின் சட்டபூர்வ உரிமை தொடர்பான குறிப்புகள் குறிப்பு இல. 2.1.10 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.2.1. (இ) iv. நிதியத்தின் சொத்தான கண்டியில் உள்ள பிரிம்ரோஸ் காணியின் உரிமை தீர்க்கப் படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.2.2 கணக்கீட்டு கொள்கைகள்

அறவிட முடியாக் கடன் ஒதுக்கம் தொடர்பாக நிதியத்தால் கைக்கொள்ளப் படும் கொள்கைகள் நிதிக் கூற்றுகளில் குறிப்பு இல. 2.3 இன் கீழ் காட்டப் பட்டுள்ளது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.2.3 கணக்காய்வு குறைபாடுகள்

2.2.3. (அ) 2012 வருடத்தின் கடன்பட்டோர் மீளாய்வு செய்யப் பட்டு அறவிட முடியாக் கடனாக ஒதுக்கம் செய்யப்பட்ட நிதியின் ஒரு பங்காக இதுவரை காணப் பட்டதுடன் அதற்குப் பிந்திய வருடங்களில் கடன் பட்டோர் மீளாய்வு செய்யப் படும் போது அவ்வாறான அறவிட முடியாக் கடனாக ஒதுக்கம் செய்யப்படுவதற்கான பிரிவு அடையாளம் காணப்பட முடியாமல் இருப்பதனால் அவ்வாறு ஒதுக்கம் செய்யப் பட்ட நிதி இதுவரை காணப்படுவதுடன், மீளாய்வு செய்யப் படும் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கம் அல்ல என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.2.3. (ஆ) தொல்லியல் இடங்களைப் பார்வையிடுதல் தொடர்பாக நிதியத்தால் வெளியிடப்பட்ட நுழைவுச் சீட்டுகளின் எஞ்சிய தொகை, வருட இறுதியில் இருப்புத் தொகையுடன் சேர்க்கப்பட வேண்டி இருந்தாலும், நிதியம் இதுவரை எந்த நிதி ஆண்டிலும் எஞ்சிய தொகையைக் காட்டியதில்லை. இது கணக்கீட்டுக் குறைபாடாக ஏற்றுக் கொள்ளப் படுவதுடன், எதிர்வரும் கணக்கீட்டு வருடத்தில் இத் தவறு சீர் செய்யப் படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.2.3. (இ) இரட்டைப் பதிவு முறைக்கு இணங்க ஆரம்பப் பதிவுப் புத்தகங்களில் (நாளேடு மற்றும் காசேடு) பதிவு செய்யப் படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் பேரேட்டில் பிரதி செய்யப்படும். அதற்கு இணங்க 31.12.2016 திகதியில் ரூ. 150,000,000/= பெறுமதியான நிலையான வைப்பு ஆரம்பிப்பது தொடர்பாக கொள்ளுப்பிட்டி இலங்கை வங்கியின் முகாமையாளரின் பெயருக்கு எழுதப்பட்ட காசோலையானது நிலையான வைப்புக் கணக்குக்குப் பிரதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு பிரதி செய்யப்படும் போது, குறித்த காசோலை வங்கியால் கொடுப்பனவு செய்யப் பட்டுள்ளதா இல்லையா என்பது இரட்டைப் பதிவு முறையில் பொதுவாக கருத்தில் கொள்ளப் படுவதில்லை என்பதால் அவ்வாறு பதிவு செய்யப் பட்டுள்ளது. வங்கியினால் கொடுப்பனவு செய்யப் படாத காசோலை வங்கி இணக்கக் கூற்றில் வெளிப்படுத்தப் பட்டுள்ளது என்பதுடன் இந்த நிலையான வைப்பு தொடர்பாக எழுதப்பட்ட காசோலை மீளாய்வு செய்யப் படும் நிதி வருடத்தின் பின்னர் பணமாக மாற்றம் அடைந்ததுடன் அது வங்கி இணக்கக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

உங்கள் கணக்காய்வு விசாரணைகளில் ‘‘நிலையான வைப்பு ரூ. 150 மில்லியனுக்கும் அதிகமாக இருந்தாலும் காசு மீதி அப் பெறுமதியை விடக் குறைவாக நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ளது’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த நிலையான வைப்பு 02.01.2017 திகதியில் வைப்புச் சான்றிதழை வழங்கியுள்ளதுடன் அன்றைய தினம் வரை நிறுத்தி வைக்கப்பட்ட / மார்க்க கணக்கில் இத் தொகை காட்டப்பட்டுள்ளது என்பதுடன் காசுப் புத்தகத்தின் மீதியுடன் பொருத்துவது எவ்வாறு என்பது பிரச்சனைக்கு உரியது.

2.2.3. (இ) கீழ்க் குறிப்பிடப்படும் செயற்றிட்டங்களுக்குப் பொருத்தமான இருப்பு ஆய்வு அறிக்கைக்கு இணங்க உண்மையான இறுதி இருப்புடன் உள்ளடக்கப்படாது காணப்படும் இருப்புப் பெறுமதி பின்வருமாறு அமையும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

	செயற்றிட்டம்	இருப்பு விபரம்	கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப் பட்ட பெறுமதி	கணக்கீடு செய்யப்பட வேண்டிய பெறுமதி (செலவுக்கு)	கணக்கீடு செய்யப்பட்டுள்ள பெறுமதி (செலவுக்கு)	குறைவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ள பெறுமதி (செலவுக்கு)
1	காலி	மாதிரி உற்பத்தி	390,345/-	260,230/-	260,230/-	-
2	கண்டி	மாதிரி உற்பத்தி	651,520/-	413,013/-	413,013/-	-
3	அலகான	மாதிரி உற்பத்தி	646,395/-	430,930/-	-	430,930/-
4 5 6	ரம்பா	கட்டிடப் பொருட்கள் காகிதாதி வெளியீடுகள்	9,131,190/- 208,933/- 46,400/-	913,190/- 208,933/- 46,400/-	- - -	913,190/- 208,933/- 46,400/-
7 8	மொனராகலை	கட்டிடப் பொருட்கள் காகிதாதி	7,395/- 168,617/-	7,395/- 168,617/-	- -	7,395/- 168,617/-
9 10	சிகிரியா	மாதிரி உற்பத்தி சுவர் ஓவியம்	668,921/- 53,500/-	445,947/- 35,667/-	- -	445,947/- 35,667/-
11 12 13	யாழ்ப்பாணம்	வெளியீடுகள் மாதிரி உற்பத்தி காகிதாதி	497,915/- 615,550/- 54,571/-	497,915/- 407,700/- 54,571/-	- - -	497,915/- 407,700/- 554,571/-
14	தம்புள்ளை	மாதிரி உற்பத்தி	41,795/-	27,863/-	27,863/-	-
மொத்தம்			**13,179,037/-**	**3,918,372/-**	**701,107/-**	**3,717,265/-**

மேற்குறிப்பிட்ட இல. 1, 2 மற்றும் 14 ஆகிய விபரங்கள் பிழை இன்றி செலவுப் பெறுமதிக்கு இருப்பில் உள்ளடக்கப் பட்டிருப்பதுடன், இல. 4 இல் குறிப்பிடப்பட்ட தொகை தொகுப்பு ஆக்கப்படும் போது பெறுமதியானது பிழையாக 9,131,190/- எனக் குறிப்பிடப் பட்டுள்ளதுடன், உண்மையான பெறுமதி ரூ. 913,190/- ஆகும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதற்கு இணங்க, கணக்காய்வு விசாரணையில் ரூ. 13,179,037/- அளவான இருப்புப் பெறுமதிக்கு உள்ளடக்கப் படவில்லை எனக் குறிப்பிடப் பட்டுள்ளதுடன், மேற்குறிப்பிட்ட அட்டவணைக்கு இணங்க, உண்மையான இருப்புப் பெறுமதிக்கு உள்ளடக்கப்படாத அளவு ரூ. 3,717,265/- ஆகும்.

2.2.3. (ஈ) வாடகை வருமானக் கணக்கில் பற்று இடப்பட்ட, கணக்காய்வு விசாரணையில் ரூ. 16,000/- எனக் குறிப்பிடப்பட்ட தொகையானது உண்மையாக அபே கம வளாகத்தின் வாடகை வருமானம் என்பதுடன், அது பிழை இன்றி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வாடகை வருமானம் அந்தக் கணக்கில் குறிப்பிடப்படும் போது விபரம் என்ற வகையில் கவனயீனமாக விலைமனு வைப்பு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.2.3. (உ) வருடத்தினுள் வெவ்வேறு பிரிவினருக்கு வழங்கப்பட்ட மாதிரிகளின் நன்கொடை மற்றும் வெளியீடுகளின் நன்கொடை பிழை இன்றி கணக்கில் எடுக்கப்பட்டுள்ளது.

திணைக்கள / பிரிவு கணக்குகள் தயாரிக்கப்படும் போது மாதிரிப் பிரிவு மற்றும் வெளியீட்டுப் பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி அப் பிரிவுகளின் வருமானமாகவும் அவ் உற்பத்திகள் பிரதான அலுவலகத்தால் நன்கொடைகளாக வழங்கப்பட்டிருப்பதுடன், அவை பிரதான அலுவலகத்தின் செலவுகளாகவும் காட்டப்பட்டுள்ளன. இவை நிதியத்தின் முழுமையான இறுதி நிதிப் பெறுபேற்றில் எந்தத் தாக்கத்தையும் செலுத்தாததுடன், பெயரளவிலான பதிவாகவே மட்டும் இருப்பதுடன், இலாப அதிகரிப்பிலோ இருப்புப் பெறுமதி அதிகரிப்பிலோ பங்களிப்புச் செலுத்தது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.2.3. (ஊ) கெடபரு ரஜமஹா விகாரையின் தர்ம சாலை நிர்மாணத்தின் போது முற்பணமாகக் கொடுக்கப்பட்ட பணம் ரூ. 4,889,050/- அல்ல என்பதுடன் அது ரூ. 7,835,192/- ஆகும். ரூ. 4,889,050/24 வழங்கப்பட்டிருப்பது இறுதிப் பற்றுச்சீட்டுக்காக ஆகும். அக் கொடுப்பனவு ***இரண்டு முறை கொடுப்பனவு செய்யப்படவில்லை*** என்பதுடன் பிழை இன்றி கணக்கில் எடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இது தொடர்பாக பின்வரும் விபரங்களை உங்கள் கவனத்திற்காக முன்வைக்கின்றேன்.

பூர்த்தி செய்யப்பட்ட முழு வேலை அளவு	= 30,522,369.95
கழிக்கப்பட்டது: நிறுத்திவைத்தல் தொகை 10% / 5%	= 2,082,987.90
	= 28,439,382.05
சேர்க்கப்பட்டது: வற் வரி 11% / 15%	= 3,359,160.90
செலுத்தப்பட வேண்டிய மொத்தத் தொகை	= 31,798,542.95

இந்த செலுத்தப்பட வேண்டிய தொகையில் ஏனைய கலாச்சார நடவடிக்கைகள் கணக்குக்கு பின்வருமாறு பின்வரும் சந்தர்ப்பங்களில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2016.01.12	5,312,397.66
2016.04.06	6,038,897.50
2016.07.05	2,884,423.43
2016.10.06	4,738,482.11
2016.12.26	4,889,050.24
	23,863,250.95

மேற்கொள்ளப்பட்ட வேலை அளவுக்குப் பொருத்தமான செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ. 31,798,542.95 ஆக இருந்தாலும் இடைக்காலப் பற்றுச்சீட்டுக்களுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு ஏனைய கலாச்சார நடவடிக்கைகள் கணக்குக்கு மாற்றப்பட்டுள்ள தொகை ரூ. 23,863,250.95 மட்டுமே என்பதுடன், ஆரம்ப முற்பணமாகக் கொடுக்கப்பட்ட ரூ. 7,835,192/- தொகையானது முற்பணக் கணக்கில் வரவு வைக்கப்படாமல் ஏனைய கலாச்சார நடவடிக்கைகள் கணக்குக்கு வரவு வைக்கப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறே செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் தர்ம சாலை நிர்மாணத்திற்காக செலவழிக்கப்பட்ட மொத்தத் தொகையும் ஏனைய கலாச்சார நடவடிக்கைகள் கணக்கில் பிரதிபலிப்பதுடன், இரண்டு முறை கணக்கில் காட்டப்படவில்லை என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.2.3. (எ) ஜேதவன செயற்றிட்டத்திற்குரிய 31.12.2016 திகதியில் ரூ. 1,944,837.20 மேலதிக இருப்பாக இருப்புக் கணக்கெடுப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பது உபயோகிக்கப்படாமல் களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள கட்டிடப் பொருட்கள் ஆகும். இருப்புப் புத்தகங்களின் மீதிக்கு அமைய மேலதிக இருப்புகள் அல்ல. இருப்புக் கணக்கெடுப்பு சபை அவ்வாறு ஒரு குறிப்பிட்ட காலம் முழுவதும் உபயோகிக்காது குவித்து வைக்கப்பட்டுள்ள பொருட்களுக்கென வேறான அறிக்கை ஒன்றை கணக்கெடுப்பு அறிக்கையில் ‘‘மேலதிக இருப்புத் தொகை’’ என இணைத்துள்ளது.

இவ்வாறு உபயோகிக்கப்படாது களஞ்சியத்தில் குவித்து வைக்கப்பட்டுள்ள கட்டிடப் பொருட்கள் தொடர்பாக தேடிப் பார்த்த போது தெரிய வந்ததாவது, திருத்த வேலைக்காக பொருட்கள் கோரப்பட்டு இருந்தாலும் அத் திருத்த நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படாமை காரணமாகவே இவ்வாறு பொருட்கள் களஞ்சியத்தில் குவித்து வைக்கப்பட்டுள்ளன என்பதாகும்.

தற்போது இவ்வாறு குவித்து வைக்கப் பட்டுள்ள கட்டிடப் பொருட்களில் சில அபே கம போன்ற வேறு செயற்றிட்டத்திற்காக வழங்கப்பட்டு உபயோகிக்கப்பட்டு இருப்பதாகவும் மிகுதிப் பொருட்கள் அவ்வாறே வேறு செயற்றிட்டங்களுக்கு அல்லது தேவைக்கு ஏற்ப உபயோகிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.2.3. (ஏ) நிதியத்தின் 1630470 என்ற இலக்கம் கொண்ட வங்கிக் கணக்கிற்கு 2016 ஜூன் 28ம் திகதி ரூ. 10,000 நிதியத்தின் செயற்றிட்டம் ஒன்றின் மூலமாகவோ வேறு மூன்றாம் தரப்பு ஒன்றின் மூலமாகவோ வரவு வைக்கப்பட்டுள்ளது. இத் தொகை தொடர்பாக தேடிப் பார்த்து அடையாளம் காணப்பட்டு சீர் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.2.3. (ஐ) 09.12.2015ம் திகதி வாடிக்கையாளர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரூ. 231,000/- பெறுமதியான இரண்டு காசோலைகள் மறுக்கப்பட்டிருந்தன. இவ்வாறு மறுக்கப்பட்ட காசோலைகள் இரண்டும் மாற்றப்படாத காசோலைகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தமையைச் சீர் செய்து மறுக்கப்பட்ட காசோலைகளாக அறிவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.2.4 விளக்கம் அளிக்கப்படாத மாற்றங்கள்

நிதியத்தினால் நிரந்தர ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள் கடன் தொடர்பாக தலைமை அலுவலகத்தால் தயாரிக்கப்பட்ட இணக்கக் கூற்று மீதி மற்றும் செயற்றிட்டத்தால் அனுப்பப்பட்ட இணக்கக் கூற்று மீதிக்கும் இடையில் வேறுபாடு காணப்படுவதை ஏற்றுக் கொள்கின்றேன். அடுத்த நிதி ஆண்டுகளில் சரியான கடன் இணக்கக் கூற்று அறிக்கையைத்

தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.2.5 தொங்கல் கணக்கு

1979ம் ஆண்டு முதல் 2006ம் ஆண்டு வரை வெளிநாட்டு நிதி மூலங்களிலிருந்து கிடைக்கப் பெற்ற சொத்துகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் செலவு முழுமையான நிதியத்தின் பெயரிலுள்ள கணக்கு ஒன்றில் வரவு வைக்கப் பட்டுள்ளது. எனினும், 2006ம் ஆண்டு முதல் அவ்வாறு கிடைக்கப் பெறும் மூலதன வழங்கல்கள் வரவு வைக்கப் பட்டது வெளிநாட்டு வளங்கள் நிதியக் கணக்கிலாகும். இவ்வாறு வெளிநாட்டு மூலதன வழங்கல்கள் தொடர்பாக இரண்டு கணக்குகளில் குறிப்பிடப்பட்ட விடயங்களைச் சரி செய்து நிதியத்தின் திரட்டல் கணக்கில் காணப்பட்ட ரூ. 19,944,704/58 பணத்தை வெளிநாட்டு வளங்கள் நிதியக் கணக்கிற்கு மாற்றப்பட்டது. இந்தப் பெறுமதியில் 1983ம் ஆண்டு நிதியத்தின் திரட்டல் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்ட ரூ. 66,390/- பெறுமதியான தொகை தொடர்பான தகவல்களைத் தேடிக் கொள்ள முடியாமல் போனமை மற்றும் திரட்டல் கணக்கில் உள்ளடக்கப்பட்ட ஏனைய பெறுமதிகள் அனைத்தும் வெளிநாட்டு வழங்கல்கள் என்ற படியால் இந்த இனம் காணப்படாத அளவில் குறைவான ரூ. 66,390/- பணமும் வெளிநாட்டு வழங்கலாகக் கருதப்பட்டு கணக்கீடு செய்யப் பட்டது (இணைப்பு 1).

2.3 போதுமான அளவு அதிகாரம் கொண்ட அதிகாரியால் உறுதிப் படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2.3 (அ) நிதிக் கூற்றுகளில் ஏனைய கலாச்சார செயற்பாடுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 79,074,872/- தொகையால் மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான செலவுகள் நிதியத்தின் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப் பட்டவையாகும். அச் செயற்பாட்டுத் திட்டத்திற்காக நிர்வாக சபையின் அனுமதி பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. மேலும், கொள்வனவுச் செயற்பாட்டைப் பின்பற்றி நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட கட்டுமான செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளாகும் (உதா: கெடபரு ரஜமஹா விகாரையின் தர்ம சாலை அமைத்தல் / ரிதி விகாரையின் பக்கச் சுவர்கள் அமைத்தல் போன்றவை).

அவ்வாறு இல்லாத ஏனைய விகாரைகள், பெரஹராக்கள் மற்றும் சமய விழாக்கள் போன்றவற்றிற்கு நன்கொடையாக வழங்கப்பட்ட நிதி தொடர்பாக நிர்வாக சபையின் அனுமதியானது நிர்வாக சபையின் 200 ஆவது கூட்டத்தில் பெற்றுக் கொள்ளப் பட்டது. தங்களின் தயவான கவனத்திற்காக அந் நிர்வாக சபையின் பத்திரத்தின் பிரதி ஒன்றை இத்துடன் இணைக்கின்றேன் (இணைப்பு 2).

2.3 (ஆ) 1980ம் ஆண்டு 57ம் இலக்க மத்திய கலாச்சார நிதியச் சட்டத்திற்கு அமைய (4ஈ) நிதியத்திற்கு உரிய நிதி முதலீடுகள் நிர்வாக சபையின் விருப்பத்திற்கு அமைய மேற்கொள்ளப்பட முடியும். காலாண்டு அடிப்படையில் மற்றும் வருமானம் மற்றும் செலவு அறிக்கைகளை முன்வைத்து அனுமதியைப் பெற்றுக் கொண்டுள்ளமையாலும், இறுதிக் கணக்குகள் கணக்காய்வு தொடர்பாக முன்வைக்கப் படுவதற்கு அனுமதியைப் பெற்றுக் கொண்டுள்ளமையாலும், குறித்த முதலீடுகள் அக் கூற்றுகளில் குறிப்பிடப் பட்டுள்ளமையாலும் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளுக்கான அனுமதி பெற்றுக் கொள்ளப் பட்டதாக மறைமுகமாகக் கருதப்படும். எவ்வாறாயினும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் தொடர்பான பொது அனுமதி நிர்வாக சபையின் 204 ஆவது கூட்டத்தில் பெற்றுக் கொள்ளப் பட்டது. தங்களின் தயவான கவனத்திற்காக அந் நிர்வாக சபையின் பத்திரத்தின் பிரதி ஒன்றை இத்துடன் இணைக்கின்றேன் (இணைப்பு 3).

2.3 (இ) 1980ம் ஆண்டு 57ம் இலக்க மத்திய கலாச்சார நிதியச் சட்டத்தின் 4இ பிரிவுக்கு அமைய மீளாய்வுக்கு உட்படும் வருடத்தில் வெவ்வேறு பிரிவினருக்கு நன்கொடையாக

வழங்கப்பட்ட ரூ. 1,286,258.00 பெறுமதியான மாதிரிகள் தொடர்பாக நிர்வாக சபையின் 203 ஆவது கூட்டத்தில் அனுமதி பெற்றுக் கொள்ளப் பட்டது. அவ் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிர்வாக சபைப் பத்திரத்தின் பிரதி ஒன்றை இத்துடன் இணைக்கின்றேன் (இணைப்பு 4).

2.3 (இ) சித்தம்கல்லென ரஜமஹா விகாரைக்குச் சொந்தமான நிலத்தில் தர்ம சாலையைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தொல்பொருள் ஆணையாளரால் வழங்கப்பட்ட அனுமதியின் பிரதி ஒன்று இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது (இணைப்பு 5).

இபெரணி தேவாலயத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்காக முன்வைக்கப் பட்டுள்ள மற்றும் அனுமதி வழங்கப்பட்ட நிர்வாக சபைப் பத்திரத்தின் பிரதி ஒன்றும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது (இணைப்பு 6). தொல்பொருள் பணிப்பாளர் நாயகமும் நிர்வாக சபை அங்கத்தவர் என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.4 கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கணக்குகள்

2.4 (அ) நீண்டகாலமாக அறவிடப்பட வேண்டிய விழா முற்பணம் மற்றும் விசேட முற்பணங்களின் மீதி தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் செயற்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. இக் கடன் மீதிகளில் அறவிடக் கூடிய கடன் மீதிகள் காணப்படின் அவற்றை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதுடன் அறவிட முடியாத கடன் மீதிகளை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் செயற்குழுவின் பரிந்துரைக்கு அமைய நிர்வாக சபைக்கு முன் வைத்து கணக்குகளில் இருந்து பதிவு அழிப்பு மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.4 (ஆ) பல்வேறு கடன்பட்டோர் மீதிகளில் கலாச்சார விடயங்களுக்கான அமைச்சிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ. 672,577/- தொகைக்கான தீர்வு காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.4 (இ) செலுத்தப்பட வேண்டிய கடன் கொடுத்தோர் மீதியில் உள்ளடங்கியுள்ள ரூ. 25,605,575/- தொகையானது 2013ம் ஆண்டிலிருந்து காணப்படுகின்றது. பொலன்னறுவை புனித நகரில் அமைக்கப்பட்ட வெளியக நுழைவுப் பாதையின் நிர்மாண நடவடிக்கைகளில் ஏற்பட்ட குறைபாடுகள் அவதானிக்கப் பட்டிருந்தமையால் அத் தொகையை நிறுத்தி கடன் கொடுத்தோர் மீதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப் பாதையின் நிர்மாணம் தொடர்பான தர அறிக்கை ஒன்று இதுவரை முன்வைக்கப் படவில்லை என்பதனையும் தர நிலை அறிக்கை பெற்றுக் கொள்ளப் பட்டபின் கொடுப்பனவு மேற்கொள்ளப் படும் என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.5 சட்ட விதிகள், ஒழுங்கு முறைகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு ஏற்ப அமையாமை

2.5 (அ) i மொனராகலை செயற்றிட்டத்தில் காணாமல் போய் இருந்த இருப்புப் பொருட்கள் மற்றும் பட்டலிய மாதிரிப் பாடசாலையில் இருந்து காணாமல் போனதாக அறிவிக்கப்பட்ட 3132 வர்க்க அங்குலம் பித்தளைத் தகடு தொடர்பாக நி.ஒ 102 மற்றும் 103 இற்கு இணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.5 (அ) ii தம்புள்ளை வெளியீடுகள் களஞ்சியத்தில் ரூ. 499,368/- பெறுமதியான வெளியீடுகள் காணாமல் போன காலத்தில் கடமையாற்றிய களஞ்சியப் பொறுப்பாளர் தற்கொலை செய்து கொண்டுள்ளார். அதனால் அந்த வெளியீடுகள் இருப்பை கணக்கு

அறிக்கைகளிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.5 (அ) iii நிதியத்தின் மூலம் ஆரம்பிக்கப் பட்டுள்ள 25 நடைமுறைக் கணக்குகள் தொடர்பாக பணிப்பாளர் சபை அனுமதி பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. நிதியத்தின் நிதி முகாமைத்துவத்தை இலகு படுத்துவதற்காக ஒவ்வொரு செயற்றிட்டத்திற்கும் இவ்வாறாக நடைமுறைக் கணக்குகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதுடன் இவற்றுள் அபயகிரி, ஜேத்தவன, பொலன்னறுவை, சிகிரியா, கண்டி, தம்புள்ளை செயற்றிட்டங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் நடைமுறைக் கணக்குகள் நிதியம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து பேணப்பட்டு வருகின்றது. நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பின்னர் வேறு பிரதேசங்களிலும் அலுவலகங்களை நடாத்திச் செல்வதற்கான தேவை ஏற்பட்டமையால் இவ்வாறு 25 அளவிலான நடைமுறைக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வாறு ஆரம்பிக்கப் பட்டுள்ள நடைமுறைக் கணக்குகள் தொடர்பான திறைசேரியின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கான ஆவணங்கள் முன்வைக்கப் பட்டுள்ளன.

2.5 (ஆ) தற்போது நிதியத்திடம் உள்ள அனைத்து நிலையான சொத்துகள் தொடர்பான பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. முறையற்றுக் காணப்பட்ட நிலையான சொத்துகளின் பட்டியல் 2015ம் ஆண்டிலேயே முழுமையாகத் தயாரிக்கப்பட்டுள்ளது எனினும் அவற்றில் குறியீட்டு இலக்கம் மட்டும் குறிப்பிடப்படவில்லை. தலைமை அலுவலகம் மற்றும் செயற்றிட்டங்களில் காணப்படும் நிலையான சொத்துகளின் குறியீட்டு இலக்கம் தற்போது இடப் பட்டுள்ளமையால் அக் குறியீட்டு இலக்கங்களை நிலையான சொத்துகளின் பட்டியலில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நிலையான சொத்துகளின் பட்டியலில் அதிக பெறுமதியைக் கொண்ட, அதாவது மொத்த நிலையான சொத்துகளில் 50% பெறுமதியான கட்டிடங்களில் கட்டிடங்களின் பெயர்கள் (அத்தபத்து கட்டிடம், சிகிரியா அருங்காட்சியகம், தலைமை அலுவலகம் என) குறிப்பிடப் பட்டுள்ளமையால் கட்டிடங்களை இலகுவாக இனம் காண முடியும். நிலையான சொத்துகளில் அடுத்த படியாக கூடிய பெறுமதியைக் கொண்ட, அதாவது மொத்த நிலையான சொத்துகளில் 21% பெறுமதியான மோட்டார் வாகனங்களின் பதிவு இலக்கங்கள் நிலையான சொத்துகளின் பட்டியலில் குறிப்பிடப் பட்டுள்ளமையால் அவற்றினையும் இலகுவாக இனம் காண முடியும்.

சொத்துகள் அடங்கியுள்ள இடங்கள் நிலையான சொத்துகளின் பட்டியலில் திணைக்களப் பிரிவுகளின் கீழும் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.5 (இ) 2002 நவம்பர் 28ம் திகதி வெளியிடப்பட்ட ஐ.ஏ.ஐ 2002/02 இலக்கத்தைக் கொண்ட திறைசேரி சுற்று நிருபத்திற்கு அமைய வெளிப்படுத்தப்பட வேண்டிய மேலதிக தகவல்களை உள்ளடக்கி தற்போது தயாரிக்கப்பட்டுள்ள கணினி மற்றும் அச்சு இயந்திரங்கள் தொடர்பான நிலையான சொத்துகளின் பட்டியலில் திருத்தங்கள் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

03 நிதி ஆய்வு

3.1 கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிப் பெறுபேறுகள், அதாவது வருடாந்த மேலதிகம் மற்றும் தேய்மானங்கள் தொடர்பாக உடன்படுகின்றேன்.

04 செயற்பாட்டு ஆய்வு

4.1 செயற்றிறன்

4.1 (ஆ) i

வருடம்	இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை	நிதியத்தால் விற்பனை செய்யப்பட்ட சுற்றுலா நுழைவுச் சீட்டுகளின் எண்ணிக்கை	விற்பனை செய்யப்பட்ட நுழைவுச் சீட்டுகளின் எண்ணிக்கை சுற்றுலாப் பயணிகளின் சதவீதமாக	நுழைவுச் சீட்டு விற்பனை வருமானம்	இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு %	நிதியத்தால் விற்பனை செய்யப்பட்ட சுற்றுலா நுழைவுச் சீட்டுகளின் எண்ணிக்கை அதிகரிப்பு %	நுழைவுச் சீட்டு விற்பனை வருமான அதிகரிப்பு %
2013	1,274,593	504,699	39*	1,748,439,894			
2014	1,527,153	627,136	41	2,200,143,813	20	24	26
2015	1,798,380	722,676	40	2,751,061,677	18	15	25
2016	2,050,832	905,755	45	3,445,925,208	14	25	25

கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் மற்றும் மேற்குறிப்பிட்ட அட்டவணைக்கு இணங்க, இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை முன்னைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் 2014, 2015 மற்றும் 2016ம் ஆண்டுகளில் முறையே 20%, 18% மற்றும் 14% என அதிகரித்து இருந்தாலும் நிதியத்தால் விற்பனை செய்யப்பட்ட சுற்றுலா நுழைவுச் சீட்டுகளின் எண்ணிக்கை முறையே 24%, 15% மற்றும் 25% இனால் அதிகரித்து உள்ளது. நுழைவுச் சீட்டு விற்பனை வருமானம் முறையே 26%, 25% மற்றும் 25% இனால் அதிகரித்து உள்ளது. இதன் மூலம் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் நிதியத்தால் நிர்வாகம் செய்யப்படுகின்ற வரலாற்று இடங்களைப் பார்வை இடுவதற்காக வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு வேகம் அதிகமாக அமைந்து இருப்பது மேற்குறிப்பிட்ட அட்டவணை மூலம் உறுதிப்படுத்தப் படுகின்றது.

4.1 (ஆ) ii வருடத்தினுள் ஆரம்பிப்பதற்குத் திட்டம் இடப்பட்டிருந்த சில வேலைத் தளங்களுக்குப் பதிலாக புதிய வேலைத் தளங்கள் ஆரம்பிக்கப் பட்டமை, பாதுகாப்பு அற்ற இயற்கை நிலைமைகளுக்கு முகம் கொடுத்தமை, போதுமான அளவு தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்ள முடியாமை ஆகியவற்றால் தொல்பொருள் வேலைத் தளங்களுக்கு உரித்தான இடங்களில் வேலை செய்து கொண்டு போகும் போது திட்டங்களை மாற்ற வேண்டி ஏற்பட்டமை, நிதி ஒதுக்கீடுகளில் ஏற்பட்ட தாமதங்கள் போன்ற காரணங்களால் சில வேலைத் தளங்களை வருடத்தினுள் ஆரம்பிக்க முடியவில்லை.

4.1 (ஆ) iii சந்தர்ப்பங்களுக்கு அமைவாக மேற்கொள்ள வேண்டிய அகழ்வு மற்றும் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் திட்டம் இடப்படாது இருந்தாலும் உடனடியாக மேற்கொள்ள வேண்டி இருந்தமையால் திட்டம் இடப்படாது காணப்பட்ட வேலைத் தளங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக நிதி செலவு அழிக்க வேண்டி ஏற்பட்டது.

4.1 (ஆ) iv தொல்பொருள் அகழ்வு மற்றும் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளுக்காக செலவு மதிப்பீடு தயாரித்தல் மிகவும் கடினமான செயற்பாடு ஆகும். எதுவாகினும் மேலோட்டமாகத் தெரியும் நிலைமையை அவதானித்து செலவு மதிப்பீடு தயாரித்தாலும் அச் செயற்பாடுகளைச் செய்து கொண்டு செல்லும் போது எதிர்பார்த்த வேலை அளவை விட வேறு நிலைமைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி இருக்கின்றமையால் இவ்வாறு மேலதிக மதிப்பீடு நிலைமை போன்று குறை மதிப்பீடு நிலைமைக்கும் முகம் கொடுக்க வேண்டி உள்ளது.

4.4 உபயோகம் அற்ற மற்றும் பயன்படுத்தப்படாத சொத்துகள்

4.4 (அ) அபே கம நிறுவனத்தைக் கையளிக்கும் போது கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட ரூ. 8,014,311.00 தொகையானது நிதியத்தின் தலைமை அலுவலகத்தின் நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப் பட்டாலும் அந் நடைமுறைக் கணக்கில் காணப்படுகின்ற மேலதிகத் தொகை அவ்வப்போது நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டுக் கொண்டு வருவதுடன், கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட மேற்குறிப்பிட்ட தொகைக்கான வட்டி வருமானம் கிடைத்து வருவதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

4.4 (ஆ) பாதிகமுவ குருகொட விகாரையின் தர்ம சாலை மண்டபத்தின் கட்டுமான நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்ப்பட்டு இருந்தாலும் அதன் செயற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாப்பஹுவ செயற்றிட்டத்தின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்படும் இச் செயற்பாட்டுக்கு உரிய ஒப்பந்தகாரருக்கு, செய்யப்பட்ட வேலை அளவுக்கு அமைய 2017ம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட பற்றுச் சீட்டுக்கான கொடுப்பனவு மேற்கொள்ளுமாறு நிதியத்தால் பிரதேச செயலகத்திற்கு அறிவிக்கப் பட்டுள்ளது. தற்போது முன்வைக்கப்பட்டுள்ள ஏனைய பற்றுச் சீட்டுகளுக்கான கொடுப்பனவை ஒப்பந்தகாரருக்கு வழங்க முடியுமா என்பது தொடர்பான மதிப்பீடு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்ட வண்ணம் உள்ளது. அத்துடன், செய்யப்பட்ட வேலை அளவுகளுக்கு உரிய அறிக்கைகளின் பிரதிகளை தங்களின் தயவான கவனத்திற்காக இத்துடன் இணைக்கின்றேன் (இணைப்பு 7).

4.4 (இ) அபயகிரி செயற்றிட்டத்தின் பயன்படுத்தப்பட்ட 4 உழவு இயந்திரங்களில் ஒன்றும் முச்சக்கர வண்டி ஒன்றும் தண்ணீர் பவுசர் ஒன்றும் ஏலம் இடப்பட்டுள்ளது. தொழில்நுட்பக் காரணங்களால் ஏலம் இட முடியாது நிலுவையாகக் காணப்படும் 3 உழவு இயந்திரங்களையும் 2 மோட்டார் சைக்கிள்களையும் வெகு விரைவில் ஏலம் இடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

4.5 முகாமைத்துவ செயற்பாடுகள்

4.5 (அ) கல்வி அமைச்சின் மேற்பார்வையின் கீழ் செயற்பட்ட அபே கம நிறுவனத்தின் சகல கட்டிடங்கள் மற்றும் பொருட்கள் கணக்கெடுப்பு குழு ஒன்று நியமிக்கப்பட்டு பௌதிக பரிசோதனையின் பின் நிதியத்தால் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய பொறுப்பு எடுத்துக் கொள்ளப் பட்டதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

4.5 (ஆ) அரசாங்கத்தின் சமூக, பொருளாதார மற்றும் கலாச்சாரக் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்குப் பொருத்தமான செயற்றிறன் மிக்க மற்றும் விடயதான நிபுணத்துவம் கொண்ட நபர்களை நியமிப்பது பொதுவான வழக்கம் ஆகும். தாபன விதிக் கோவையின் 11.4.1 சரத்திற்கு அமைய இவ்வாறு திணைக்களப் பிரதானிகளை நியமிப்பதற்கு அமைச்சரவைக்கு இயலும். அதன் பிரகாரம் நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப் பட்டுள்ளார். இந் நியமனம் தொடர்பான அமைச்சரவை அனுமதி வழங்கப் பட்டுள்ளதுடன், அவ் அனுமதி வழங்கப் படும் போது மேலும் குறிப்பிடப் பட்டிருப்பதாவது, மத்திய கலாச்சார நிதியச் சட்டத்தின் 4வது வாசகத்தின் கீழ் வழங்கப் பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய

நிர்வாக சபைக்கு பணிப்பாளர் நாயகத்தை நியமிப்பதற்கான அதிகாரம் வழங்கப் பட்டிருப்பதாக: (இணைப்பு 8).

மேலும் நிதியத்தின் ஆட்சேர்ப்பு செயன்முறை தற்போது மீளாய்வு செய்யப்பட்டுக் கொண்டிருப்பதுடன், பொருத்தமான நபர் ஒருவரை பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமனம் செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் தற்போது காணப்படும் ஆட்சேர்ப்பு செயன்முறையில் குறிப்பிடப் பட்டுள்ள பகிரங்க அறிவித்தல் வழங்கப் பட்டு விண்ணப்பம் கோருவதன் மூலம் நேர்முகத் தேர்வு நடாத்தப் பட்டு ஆட்சேர்ப்பு செயன்முறையில் மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

4.5 (இ) i மத்திய கலாச்சார நிதியச் சட்டத்தின் 4வது வாசகத்திற்கு அமைய இப் பதவிக்கான உத்தியோகத்தரை ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதற்கு நிர்வாக சபை அனுமதி வழங்கியுள்ளது.

4.5 (இ) ii இவ் ஒப்பந்த அடிப்படையிலான நியமனம் வழங்கப் படும் போது உத்தியோகத்தரின் வயது குறித்து நிர்வாக சபை விசேட கவனம் செலுத்தவில்லை. மேலும் 23.04.2017ம் திகதியில் இருந்து இச் சேவை வழங்குநரின் சேவை நீடிப்பு வழங்கப் படவில்லை.

4.5 (இ) 21.09.2015ம் திகதி இடப்பட்ட 1933/13 இலக்கம் கொண்ட அதி விசேட வர்த்தமானி மூலம் கல்வி அமைச்சின் விடயப் பரப்பிற்குக் கீழ் மத்திய கலாச்சார நிதியத்தை உள் வாங்கி உள்ளதுடன், அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் நிதியத்தின் ஆட்சேர்ப்பு செயன்முறையை மீளாய்வு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

4.5 (ஈ) முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதியைப் பெற்று ஆட்சேர்ப்பு செய்யும் செயன்முறையில் குறைபாடுகள் காணப்படுகின்றமையால், மீண்டும் அதனை மீளாய்வு செய்து கொண்டிருப்பதுடன், நிறுவனத்தின் செயற்பாடுகள் விரிவு படுத்தப் பட்டதுடன், புதிய பதவிகள் உருவாக்கப் படுவதற்கும் தற்போது காணப்படும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகவும் பணிப்பாளர் - நிதி, பணிப்பாளர் - நிர்வாகம் (இரட்டை அடிப்படையில்), நுழைவுச் சீட்டு விற்பனையாளர், உதவிப் பணிப்பாளர் - நிதி, பிரதான பரிசோதக உத்தியோகத்தர் (பதில்), சட்ட உத்தியோகத்தர் போன்ற பதவிகளுக்காக நிர்வாக சபையின் அனுமதியைப் பெற்று ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப் பட்டுள்ளனர்.

4.5 (உ) மத்திய கலாச்சார நிதியத்தின் விடயப் பரப்பு விசாலம் ஆனதுடன் அருங்காட்சியங்களின் மேற்பார்வை நடவடிக்கைகள் தொடர்பாக நிர்வாக சபையின் அனுமதியுடன் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்தல்.

4.5 (எ) நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு நியமனம் வழங்கப் பட்ட உள்ளக அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப் பட்ட உத்தியோகத்தருக்கு 14 வருட சேவை அனுபவம் காணப்படுவதுடன், அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆரம்ப சாஸ்திர பரிசீலனைக்கும் சமூகம் அளித்தவர் என்பதனை மேலதிகமாக அறிவிப்பதுடன், அதன் மூலம் அவர் உயர் தரத்தில் சித்தி அடைந்தவர் என்பது உறுதிப் படுத்தப் படுகின்றது.

4.6 கட்புலனாகும் முறைகேடுகள்

4.6 (அ) i கண்டிப் பிரதேசத்தில் தனியார் ஹோட்டல் ஒன்றில் இடம் பெற்ற இணைத் திட்டம் தயாரிப்பதற்கான செயலமர்விற்கான பங்கு பற்றல் கொடுப்பனவு வழங்கப் பட்டிருப்பது அவ்வாறான செயலமர்வுகள் தொடர்பாக பங்கு பற்றும் உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு வழங்குவது தொடர்பாக பெற்றுக் கொள்ளப் பட்ட நிர்வாக சபையின் அனுமதியின்

படியாகும். அந்த நிர்வாக சபையின் அனுமதியின் பிரதி ஒன்றை தங்களின் தயவான கவனத்திற்காக இத்துடன் இணைக்கின்றேன் (இணைப்பு 9).

4.6 (அ) ii இணைத் திட்டம் தயாரிப்பது தொடர்பாக இடம் பெற்ற செயலமர்வின் பிரதிபலனாக 2017 – 2021 காலப் பகுதிக்கான இணைத் திட்டம் தயாரிக்கப்பட்டது. உயர் மட்ட முகாமைத்துவம் மூலம் அத் திட்டம் மீண்டும் மீண்டும் மீளாய்வுக்கு உட்படுவதன் காரணமாக முன்வைக்கப் படுவதில் தாமதம் காணப்பட்டாலும் அது 30.05.2017 அன்று நிர்வாக சபைப் பத்திரம் இல. D/DD/17 ஊடாக நிர்வாக சபைக்கு முன்வைக்கப் பட்டிருப்பதாக தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

4.6 (அ) iii இவ்வாறான செயலமர்வுகள் எதிர்காலத்தில் ஏற்பாடு செய்யப் படும் போது குறைந்த செலவுடன் உயர்ந்த பிரதிபலனைப் பெற்றுக் கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப் படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

4.6 (ஆ) மிஹிந்தலை ரஜமஹா விகாரை அமைந்துள்ள வளாகம் தொல்பொருள் திணைக்களத்தால் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாலும் எந்த விதமான அகழ்வோ அல்லது பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளோ நிதியத்திற்கு வழங்கப் படாமையாலும் 2016ம் ஆண்டு மே 11ம் திகதி இல. 2863 இடப்பட்ட கொடுப்பனவு வவுச்சர் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை தொல்பொருள் பாரம்பரிய அறக் கட்டளைக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகையாகக் கருதப்பட்டு கணக்கீடு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இப் பணம் தொல்பொருள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் வெளியக நிறுவனம் ஒன்றின் மூலம் மேற்கொள்வதற்கு நியமிக்கப் பட்டிருந்தது என்பதனால் மாவட்டச் செயலாளரின் மேற்பார்வையின் கீழ் அந் நிதியைக் கொடுப்பனவு செய்வதற்காக அநுராதபுரம் மாவட்டச் செயலாளரிடம் அப் பணம் விடுவிக்கப் பட்டிருப்பதால் காசுப் புத்தகத்தில் கொடுப்பனவுப் பெறுநராக அநுராதபுரம் மாவட்டச் செயலாளர் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

4.7 செயற்பாடுகளில் செயற்றிறன் இன்மை

4.7 (அ) மாதிரி உற்பத்திப் பிரிவு மற்றும் அச்சுப் பிரிவின் செலவுகளைக் கணிப்பிடும் போது நேர்ச் செலவுகள் மட்டுமன்றி நேரில் செலவுகளும் உள்ளடக்கப் பட்டுள்ளன. மேந்தலைச் செலவுகளாக நேர்ச் செலவுகளில் சேர்க்கப் பட்டிருப்பதால் நேரில் செலவுகள் விலை நிர்ணயம் செய்யப் படும்போது கருத்தில் கொள்ளப் பட்டுள்ளது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

4.7 (ஆ) தொல்பொருள் அகழ்வு மற்றும் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளுக்காக செலவு மதிப்பீடு தயாரித்தல் மிகவும் கடினமான செயற்பாடு ஆகும். எதுவாகினும் மேலோட்டமாகத் தெரியும் நிலைமையை அவதானித்து செலவு மதிப்பீடு தயாரித்தாலும் அச் செயற்பாடுகளைச் செய்து கொண்டு செல்லும் போது எதிர்பார்த்த வேலை அளவை விட வேறு நிலைமைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி இருக்கின்றமையால் இவ்வாறு மேலதிக மதிப்பீடு நிலைமை போன்று குறை மதிப்பீடு நிலைமைக்கும் முகம் கொடுக்க வேண்டி உள்ளது.

4.8 சர்ச்சைக்கு உரிய கொடுக்கல் வாங்கல்கள்

4.8 (அ) அமைச்சரவைப் பத்திரத்திற்கு இணங்க மத்திய கலாச்சார நிதியத்தினால் ஈட்டிக் கொள்ளப்படும் வருமானத்தில் 25% தொல்பொருள் முகாமைத்துவ அறக்கட்டளைக்கு வழங்கப்பட வேண்டி இருந்தாலும் எம்மால் அந்த அளவை விடக் குறைவான அளவில் பணம் செலுத்தப்பட்ட போது செலுத்தப்பட்ட பணம் திருப்பி அனுப்பப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்படுவதுடன் (இணைப்பு 10) அனுப்பப்பட்ட பணம் முகாமை செய்யப்படும் விதத்தில் காணப்படும் பலவீனங்கள் தொடர்பாகவும் எமக்கு அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளது.

(இணைப்பு 11). அதன் காரணமாகவும் மற்றும் எம்மால் வழங்கப்படுகிள்ற நிதி முறையாக உபயோகிக்கப் படுகின்றதா என்பதை உறுதிப் படுத்துவதற்காகவும் தொல்பொருள் திணைக்களத்தின் உத்தேச வேலைத் தளம் தொடர்பான செலவு மதிப்பீட்டைப் பெற்றுக் கொண்டு அதன் பிரகாரம் பணம் செலுத்தப் பட்டு வருகின்றது. 2017ம் அண்டிற்காக அவ்வாறு வேண்டிக் கொள்ளப்பட்ட பணம் முழுவதும் விடுவிக்கப் பட்டுள்ளது. 2017 டிசம்பர் மாதம் முதல் தொல்பொருள் பாரம்பரிய அறக்கட்டளைக்குச் செலுத்துவதற்குரிய பணத்தைச் செலுத்துவதற்கான வேலைத் திட்டம் ஒன்று தற்போது தயாரிக்கப் பட்டிருப்பதனால் எதிர்காலத்தில் அனைத்து நிதியினையும் வழங்க முடியும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் நிதியத்தின் வருமானத்தில் 25% செலுத்தப்பட வேண்டும் என அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்பட்ட காலத்தில் தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் பேணிப் பாதுகாத்தல் அல்லது பராமரித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்ட வேலைத் தளங்களில் பல தற்போது மத்திய கலாச்சார நிதியத்திடம் கையளிக்கப் பட்டு பேணிப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் நடவடிக்கைகள் நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப் படுவதைத் தாழ்மையுடன் நினைவூட்டுகின்றேன்.

4.8 (ஆ) பதவிக்கு வழங்கப் படுகின்ற கடமைப் பட்டியலில் இவ் உத்தியோகத்தருக்கு அனைத்து விதமான சட்ட நடவடிக்கைகளுக்கு உரிய கடமைகளை செயற்படுத்துவதற்காக மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளின் போது மத்திய கலாச்சார நிதியத்தின் சார்பில் வழக்கறிஞராக நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும் என்பது உதவிப் பணிப்பாளர் - நிதியின் கடமையாக கடமைப் பட்டியலில் குறிப்பிடப் படவில்லை. எனவே, நிர்வாக சபையின் அனுமதிக்கு அமைய வெளியக வழக்கறிஞர் சேவை நிறுவனத்திடமிருந்து சட்ட நடவடிக்கைகள் தொடர்பான வெளியக சட்ட உதவிச் சேவை பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.

4.8 (இ) 01.01.2016 தொடக்கம் 31.08.2016 வரை சேவையாற்றிய பதில் நிதிப் பணிப்பாளர் நிதியத்தினால் நியமிக்கப் பட்டது அரச நிர்வாக சுற்று நிருபத்திற்கு அமைவாக ஆகும். எனினும், அரச வியாபாரச் சுற்று நிருபம் தாமதமாக வெளியிடப் பட்டுள்ளது. அதனால் கொடுப்பனவு செய்யப்பட்ட மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு தொடர்பாக தேடிப் பார்த்து மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்ட பணம் ஏதாவது இருப்பின், அதனை மீள அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

4.9 வேறு வெளியகத் தரப்பினருக்கு வழங்கப்பட்ட நிதியத்தின் வளங்கள்

31.12.2016ம் திகதிக்கான இறுதி இருப்புக் கணக்கெடுப்பு அறிக்கையின் பிரகாரம் நிதியத்தின் செயற்றிட்டங்கள் மூலம் பல்வேறு தர்ம நிறுவனங்கள் மற்றும் வெளியகத் தரப்பினருக்கு வழங்கப் பட்டு இருந்த பொருட்கள் மற்றும் உபகரணங்களை மீளப் பெற்றுக் கொள்வதற்காக நிதியத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். (உரிய கடிதங்கள், ஆவணங்களின் பிரதிகள் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன. இணைப்பு 12). அபயகிரி செயற்றிட்டத்தின் மூலம் வழங்கப் பட்டுள்ள குழாய்கள் மற்றும் இணைப்புகள் (கப்ளிங்) நிதியச் சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குப் பங்களிப்புச் செய்துள்ளதுடன், அக் குழாய்கள், இணைப்புகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டு மேற்கொள்ளப் பட்ட செயற்பாடுகள் தற்போதும் தொடர்ந்த வண்ணம் உள்ளமையால் அக் குழாய்கள், இணைப்புகள் மற்றும் உபகரணங்களை மீளப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை இதுவரை மேற்கொள்ளப் பட முடியாமல் உள்ளமை இணைக்கப் பட்டுள்ள ஆவணங்கள் மூலம் உறுதி ஆகின்றது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

05. கணக்கீட்டு நடவடிக்கைகளின் தன்மை மற்றும் நல்லாட்சி

5.1 செயற்பாட்டுத் திட்டம்

அகழ்வு மற்றும் பேணிப் பாதுகாத்தல் செயற்றிட்டங்கள் போன்று ஏனைய செயற்பாட்டு வேலைகளுக்காவும் செயற்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்குமாறு வழங்கப் பட்ட கணக்காய்வு ஆலோசனையின் பிரகாரம் அது உரிய பிரிவுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.

5.2 வருடாந்த அறிக்கை சான்றுப் படுத்தப்படுதல்

2013 மற்றும் 2014ம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகளை சான்றுப் படுத்துவதற்காக 30.10.2017ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

5.3 வரவு செலவு ஆவணக் கட்டுப்பாடு

2016ம் ஆண்டுக்கான வரவு செலவு அறிக்கைக்கான நிர்வாக சபையின் அனுமதி பெற்றுக் கொள்ளப் பட்டது 2016 பெப்ரவரி மாதத்தில் ஆகும். அதன் பிரகாரம் வரவு செலவு அறிக்கைக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு இரண்டு மாதங்கள் தாமதம் ஆகி இருந்தாலும் அத் தாமதம் தற்போது தவிர்க்கப் பட்டுள்ளது. அதற்கு இணங்க, 2017ம் ஆண்டுக்கான வரவு செலவு அறிக்கைக்கான அனுமதி தாமதம் இன்றி 2016ம் ஆண்டு நவம்பர் மாதம் பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளதுடன், 2018ம் ஆண்டுக்கான வரவு செலவு அறிக்கை தற்போது நிர்வாக சபைக்கு முன் வைக்கப் பட்டுள்ளது.

2016ம் ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட வரவு செலவு அறிக்கையுடன் அவ் ஆண்டுக்கான உண்மையான செலவுகளை ஒப்பிடும் போது வித்தியாசங்கள் உள்ளமையை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

எனவே, எதிர்வரும் காலங்களில் தயாரிக்கப்படும் வரவு செலவு அறிக்கைகளில் வேறுபாடுகளைக் குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதுடன், வரவு செலவுத் திட்டத்தைச் செயற்படுத்தும் போது ஏற்படும் வேறுபாடுகள் தொடர்பாக அந்த வருடத்தினுள் திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டு நிர்வாக சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக முன் வைக்கப் பட்டுள்ளது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

5.4 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பிரிவுகள்

5.4 (அ) பொலன்னறுவை புனித பூமியின் உள்ளகப் பிரவேச வழியினை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் தொடர்பாக தர்மதாச கொன்ஸ்ட்ரக்ஷன் அன்ட் என்டர்பிரைசஸ் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப் பட்ட வேலைகளின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் இதுவரை அறிக்கை முன் வைக்கப் பட்டுள்ளது. அவ் அறிக்கையில் உள்ளடக்கப் பட்டுள்ள பரிந்துரைகளின் படி எதிர்கால செயற்பாடுகள் மற்றும் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றேன் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த செயற்பாட்டிற்காக உரிய ஒப்பந்தகாரர்களிடம் இருந்து ரூ. 1935455 தொகைப் பணம் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது என்பதையும் மேலதிகமாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

5.4 (ஆ) பொலன்னறுவை புனித பூமியின் வெளியேறும் கதவில் இருந்து உள்ளாகக் காணப்படும் பாதையில் 1 கி.மீ அளவு தூரத்தை மேலும் மேம்படுத்தும் செயற்பாட்டிற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் ரூ. 27,500,000 பெறுமதியான ஒப்பந்தத்தை ஏற்படுத்திய பின் அமைச்சின் அனுமதியின் கீழ் ஒப்பந்தத் தொகை (வற் வரி இன்றி) ரூ. 48,575,892.84 வரை அதிகரிக்கப் பட்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மேலும் தற்போது வரை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் செலுத்தப் பட்டுள்ள தொகை ரூ. 29,235,510 அல்ல, அது ரூ. 23,735,533.54 என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இச் செயற்பாடு தொடர்பாக முன் வைக்கப் பட்டுள்ள பற்றுச் சீட்டுகளின் பிரகாரம் ரூ. 25 மில்லியன் அளவான தொகை செலுத்தப் படாது நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. இச் செயற்பாடுகள் தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் படி எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றேன் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இச் செயற்பாடு திடீரென எமக்கு வழங்கப் பட்டமையால் கொள்வனவு செயன்முறையை முறையாகப் பின்பற்ற முடியவில்லை. எனவே, அரச நிறுவனமான வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் அது ஒப்படைக்கப் பட்டு மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

5.4 (இ) பட்டலிய மாதிரிப் பாடசாலையின் நிர்வாகக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான விலைமனு கோரல் வழங்கும் போது ஏற்பட்ட குறைபாடுகள் மற்றும் அக் கட்டுமானம் தொடர்பான அறிக்கையினைப் பெற்றுக் கொள்வதற்காகவும் குழு ஒன்று தற்போது நியமிக்கப்பட்டுள்ளது. அக் குழுவினால், ஒப்பந்த காரரால் மேற்கொள்ளப் பட்ட வேலைகளுக்கு ஏற்ப கொடுப்பனவு மேற்கொள்வதற்கும் எதிர்கால வேலைகளைத் தொடர்வதற்காக மீண்டும் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துமாறும் பரிந்துரைகள் முன் வைக்கப் பட்டுள்ளன. இப் பரிந்துரைகளைக் கவனத்தில் கொண்டு குறித்த செயற்பாடுகளை இயலுமான விரைவில் முடிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

5.4 (இ) ஊழியர் வைத்தியக் காப்புறுதியைப் பெற்றுக் கொள்வதற்காக செலுத்தப்பட்ட பணம் தொடர்பாக தற்போது முறையாக உள்ளக ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்துடன் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு மூலமும் மேலதிக விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளில் அரச நிதிச் சுற்று நிருபத்திற்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

5.5 கொள்வனவு மற்றும் ஒப்பந்தச் செயன்முறை

(அ) கெட்டபருவ விகாரையின் ஓய்வு மண்டபத்தின் கட்டுமான ஒப்பந்தம் தொடர்பாக செலுத்தப்பட்ட முற்பணம் முழுவதும் அறவிடப் பட்டுள்ளது. அவ் அறவீடுகள் தொடர்பான விபரம் பின்வரும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளது.

பற்றுச் சீட்டு இல.	செய்யப்பட்ட வேலை வற் வரி இன்றி (திரட்டப்பட்டது)	முன்னைய கொடுப்பனவுகள் வரி இன்றி (திரட்டப்பட்டது)	நிறுத்தி வைத்தல் 10% / 5% (திரட்டப்பட்டது)	வற் வரி 11% / 15%	அணி திரட்டல் முற்பண மீள் பெறுகை
No. 01	7,092,687.13		709,268.71	702,176.03	1,773,171.78
No. 02	15,155,334.00	6,383,418.42	1,515,533.40	798,202.04	2,015,661.72
No. 03	19,006,400.00	13,639,800.60	1,900,640.00	381,255.53	962,766.50
No. 04	24,751,648.00	17,105,760.00	2,082,987.90	611,919.01	1,436,312.00
No. 05	30,522,369.95	22,668,660.10	2,082,987.90	865,608.29	1,747,280.00
	30,522,369.95	22,668,660.10	2,082,987.90	3,359,160.90	7,935,192.00

5.5 (ஆ) கெட்டபருவ விகாரையின் ஓய்வு மண்டபத்தின் கட்டுமான ஒப்பந்தம் கைச்சாத்து இடுவதற்கான தாமதம் தொழில்நுட்பக் காரணிகளால் ஏற்பட்டு உள்ளமையை நான் ஏற்றுக் கொள்கின்றேன். இவ் ஒப்பந்தத்தால் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப் படும் போது காணப்படுகின்ற இடைக்கால யோசனைகளில் உள்ள மேலதிக வேலைச் செயற்பாடுகளை செயற்படுத்தி முடித்து ஒப்பந்தத்தின் எஞ்சிய வேலைகளை முடிப்பதில் தடை ஏற்பட்டுள்ளது. எனவே, ஒப்பந்த காலம் 31.12.2017ம் திகதி வரை நீடிக்கப் பட்டுள்ளமையை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(இ) நிதியத்தின் நாளாந்த தேவைப்பாடுகளுக்கு அமைய அனைத்து செயற்றிட்டங்கள் தொடர்பாக நாளாந்தம் மேற்கொள்ளப் படுகின்ற அகழ்வு, பேணிப் பாதுகாத்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஆலோசகர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப் பட்டுள்ளனர். நிதியத்தால் ஆட்சேர்ப்புச் செய்யப் பட்ட ஆலோசகர்கள் மூலம் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் போது இலங்கை வழி காட்டல்களின் 5.2.1. (அ) வாசகத்திற்கு இணங்க கொடுப்பனவு தொடர்பான தகவல்கள் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்குவது அவசியம் இல்லை என எண்ணுகின்றேன்.

இலங்கை ஆலோசகர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் வழி காட்டல்கள் கையேட்டின் 5.2.1. (அ) வாசகத்திற்கு இணங்க ஏதேனும் குறித்த செயற்பாட்டிற்கான ஆலோசகர் ஆட்சேர்ப்புச் செய்யப் படுவார் எனின், கொடுப்பனவு தொடர்பான தகவல்களை எதிர்வரும் ஆண்டுகளில் தயாரிக்கப் படுகின்ற கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கும் நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(இ) நிதியத்தின் நாளாந்த தேவைப்பாடுகளுக்கு அமைய அனைத்து செயற்றிட்டங்கள் தொடர்பாக நாளாந்தம் மேற்கொள்ளப் படுகின்ற அகழ்வு, பேணிப் பாதுகாத்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஆலோசகர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப் பட்டுள்ளனர். அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆலோசகர்கள் தொடர்பாக மாதாந்தக் கொடுப்பனவு மேற்கொள்ளப் படுவதனால் கபில தஹநாயக்க அவர்களுக்கும் எஸ்.யூ.தெரணியகல அவர்களுக்கும் முறையே ரூ. 159,975/- மற்றும் 231,155/- கொடுப்பனவாக செலுத்தப் பட்டுள்ளது.

ஏனைய கணக்காய்வு விசாரணைகளில் குறிப்பிடப் பட்ட கொடுப்பனவுகள் அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆலோசகர்கள் மூலம் நாளாந்தக் கடமைகளுக்கு மேலதிகமாக மேற்கொள்ளப் படுகின்ற திட்டம் தயாரித்தல், சான்றுப் பத்திரங்கள் தயாரித்தல் போன்ற செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப் பட்ட கொடுப்பனவுகள் ஆகும்.

5.6 கொள்வனவுத் திட்டம்

5.6 (i) 2016ம் ஆண்டுக்கான கொள்வனவுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது குறைபாடுகள் ஏற்பட்டு உள்ளதையும் அதனை முன் வைப்பதில் தாமதம் ஏற்பட்டு இருப்பதையும் ஏற்றுக் கொள்கின்றேன்.

5.6 (ii) 2016ம் ஆண்டில் கொள்வனவு செய்யப் பட்ட வாகனங்கள் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப் படவில்லை என்றாலும் 2016ம் ஆண்டுக்காகத் தயாரிக்கப் பட்ட வரவு செலவு நிதி ஒதுக்கீட்டு அறிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு இருந்தமையைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

5.6 (ii) உண்மையான பெறுபேறுகளுடன் ஒப்பிடும் போது வேறுபாடுகள் காணப்பட்டாலும் மீளாய்வு செய்யப்படும் ஆண்டு (2016) தொடர்பாக நிதியத்தின் மூலம் தயாரிக்கப் பட்ட கொள்வனவுத் திட்டத்தில் பிரதேச அலுவலகங்கள் தொடர்பாக கொள்வனவு செய்யப் பட்ட

பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகள் உள்ளடக்கப் பட்டு உள்ளது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

6. தொகுதிகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப் பட்டு எம்மிடம் வழங்கப் பட்ட தொகுதிகள் மற்றும் கட்டுப்பாடுகளின் பலவீனங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப் படும் என்பதனையும் கணக்கீட்டுப் பிழைகளைக் குறைத்து எதிர்காலக் கணக்கீட்டு அறிக்கைகள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப் படும் என்பதனையும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்படிக்கு உண்மையுள்ள

பேராசிரியர் பிரியஷாந்த குணவர்த்தன
பணிப்பாளர் நாயகம்,
மத்திய கலாச்சார நிதியம்

04. செயற்றிறன் குறிகாட்டிகள்

மத்திய கலாசார நிதியத்தின் செயற்றிறன் குறிகாட்டிகள்(செயற்பாட்டுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு)

தொ.இ	கருத்திட்டம்	விபரம்	எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டின் சதவீதமாக(%) உண்மை வெளியீடு			
			0 - 25%	26% - 50%	51% - 75%	76% - 100%
01	அபயகிரிய கருத்திட்டம்	அகழ்வாராய்ச்சி			✓	
		பாதுகாப்பு			✓	
02	மகாவிஹாரைக் கருத்திட்டம்	அகழ்வாராய்ச்சி	✓			
		பாதுகாப்பு			✓	
03	ஜேதவனா கருத்திட்டம்	அகழ்வாராய்ச்சி				✓
		பாதுகாப்பு				✓
04	பொலன்னறுவை கருத்திட்டம்	அகழ்வாராய்ச்சி			✓	
		பாதுகாப்பு			✓	
05	சீகிரியா கருத்திட்டம்	அகழ்வாராய்ச்சி			✓	
		பாதுகாப்பு			✓	
06	தம்புள்ளை கருத்திட்டம்	அகழ்வாராய்ச்சி				✓
		பாதுகாப்பு			✓	
07	கண்டி கருத்திட்டம்	அகழ்வாராய்ச்சி			✓	
		பாதுகாப்பு			✓	
08	ரம்பா விஹாரை கருத்திட்டம்	அகழ்வாராய்ச்சி				✓
		பாதுகாப்பு			✓	
09	திஸ்ஸமஹாராம கருத்திட்டம்	அகழ்வாராய்ச்சி			✓	
		பாதுகாப்பு			✓	
10	காலி கருத்திட்டம்	அகழ்வாராய்ச்சி		✓		
		பாதுகாப்பு			✓	
11	மாத்தறை கருத்திட்டம்	அகழ்வாராய்ச்சி		✓		
		பாதுகாப்பு		✓		
12	மொனராகலை கருத்திட்டம்	பாதுகாப்பு		✓		
13	யாப்பஹுவ கருத்திட்டம்	அகழ்வாராய்ச்சி	✓			
		பாதுகாப்பு			✓	
14	தம்பதெனிய கருத்திட்டம்	அகழ்வாராய்ச்சி			✓	
		பாதுகாப்பு		✓		
15	பண்டுவஸ்நுவர கருத்திட்டம்	அகழ்வாராய்ச்சி		✓		
		பாதுகாப்பு			✓	
16	குருநாகல் கருத்திட்டம்	அகழ்வாராய்ச்சி		✓		
		பாதுகாப்பு			✓	
17	யாழ்ப்பாணக் கருத்திட்டம்	அகழ்வாராய்ச்சி		✓		
		பாதுகாப்பு		✓		
18	திருகோணமலை கருத்திட்டம்	பாதுகாப்பு		✓		
19	இரத்தினபுரி கருத்திட்டம்	ஆராய்ச்சி				✓

05. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைப் (SDG) பூர்த்தி செய்வதற்கான செயற்றிறன்.

5.1 அடையாளம் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

நிலைபேறான இலக்கு 04 - அனைவருக்கும் விரிவான மற்றும் சமமான தரமான கல்வியை உறுதி செய்தல் மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகளை மேம்படுத்துதல்

- மத்திய கலாசார நிதியத்தின் கீழ் தொழிற்படும் பிரதான கருத்திட்டங்களுடன் இணைந்த வகையில் அருங்காட்சியம் அமையப்பெற்றுள்ளதோடு அருங்காட்சியகத்திற்கு வருகை தரும் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொல்பொருளியல் ஆய்வாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தகவல் தேடுபவர்களுக்கு கல்வித் தகவல் மற்றும் மாதாந்த விரிவுரைகள்/ கருத்தரங்குகள் என்பன நடத்தப்படல்.
- மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொல்லியல் ஆய்வாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தகவல் ஆய்வாளர்கள் ஆகியோருக்கு உரிய கல்வித் தகவல்களைப் பெறுவதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வெளியீட்டுத் துறையில் உள்ள நூலகத்தின் மூலம் வழங்குதல்.

- பட்டலீய தேசிய மாதிரிப் பாடசாலைக்கு மாணவர்களை இரண்டு வருடக் கால கற்கைக்கு இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பதோடு செய்தித்தாள் விளம்பரங்களை வெளியிடுவதன் மூலம் தத்துவார்த்த மற்றும் நடைமுறை அறிவை வழங்குதல்.

- பாடசாலைகள் மற்றும் பிற வெளி நிறுவனங்களின் வேண்டுகோளின்படி கல்விச் காட்சிகூடங்களை களை நடத்துதல்

- பல்கலைக்கழகங்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக பல்கலைக்கழக மாணவர்களுக்கு அகழ்வாராய்ச்சி மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான 6 மாத பயிற்சி ஒன்றை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

நிலைபேறான இலக்கு 08 - அனைவருக்கும் நீண்ட கால, முழுமையான மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல், முழுமையான மற்றும் உற்பத்தி வேலை வாய்ப்புகள் மற்றும் கௌரவமான வேலை வாய்ப்புகள்

- மத்திய கலாசார நிதியத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களுக்கு அந்தந்த காலகட்டங்களில் பதவி உயர்வு வழங்குவதன் மூலம் பணித் திருப்தியை அதிகரிக்கச் செய்தல்.

- அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட பல்வேறு சுற்றறிக்கைகளுக்கு இணங்க ஊழியர்களின் பணி ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வது.

நிலைபேறான இலக்கு 09 - மீள்தன்மையுடைய உட்கட்டமைப்பை உருவாக்குதல், முழு மற்றும் நிலையான தொழில்மயமாக்கல் மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவித்தல்

- சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் தேவைகள் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், சுற்றுலாத் தலங்களை அதிகப்படுத்துவதற்கும், அனைத்து சுகாதார மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் தினசரி பராமரிப்புகளை மேற்கொள்வது.

- நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அலுவலகப் பணிகள், அகழ்வாராய்ச்சி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றைப் பராமரிக்க தேவையான வசதிகளை வழங்குதல்

நிலைபேறான இலக்கு 14 - நிலையான வளர்ச்சிக்காக கடல்கள், கடல் மற்றும் கடல் வளங்களின் பாதுகாப்பான, நிலையான பயன்பாடு

- இலங்கையில் கடல்சார் தொல்பொருள் அகழ்வாராய்ச்சி, ஆய்வு மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை அறிவியல் அடிப்படையுடன் மேற்கொள்வதற்காக, கடல் தொல்லியல் பிரிவு, ஆய்வகம் மற்றும் அருங்காட்சியகம் ஆகியவையும் தொடங்கப்பட்டு கடல் வளங்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதிலான சாதனைகள் மற்றும் சவால்கள்

புராதன மரபுரிமைகளை எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச் சொல்லும் நோக்கில் தொல்லியல் புராதனச் சின்னங்களைப் பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வு சமூகத்தில் குறைந்து வருதல் மற்றும் அப் பாரம்பரிய இடங்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாக அவற்றை அழிக்க முயற்சிக்கும் சமுதாயம் ஒன்று தோன்றியுள்ளதனால் அம் மரபுரிமைகளைப் பாதுகாப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. நிலைமை இவ்வாறு இருக்க, பொது மக்கள் மற்றும் படிக்கும் மாணவர்களுக்குப் புராதனச் சின்னங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை விளக்கி அதற்காக அவர்களைத் தூண்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு பொது மக்களால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு உரிய அகழ்வாராய்ச்சி, ஆய்வு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும், இந் நிறுவனத்தில் உள்ள வரையறுக்கப்பட்ட மனித வளத்தைப் பயன்படுத்தி ஓலைச் சுவடிகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மற்றும் புதிய தொல்பொருள் தளங்களை அடையாளம் காணுதல், ஆவணப்படுத்துதல், பாதுகாத்தல், பராமரிப்பு மற்றும் பொதுக் கண்காட்சி ஆகியவை ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

06. மனித வள விவரம்

6.1 ஊழியர்களின் எண்ணிக்கை

2016.12.31 ஆம் திகதியாகும் போது மத்திய கலாசார நிதியத் தின் ஊழியர்கள் பின்வருமாறு,

	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	ஊழியர்களின் உண்மையான எண்ணிக்கை	ஊழியர் பற்றாக்குறை	மிகை ஊழியர்களின் எண்ணிக்கை
சிரேஷ்ட	16	06 (02 ஒப்பந்த)	10	-
மூன்றாம் நிலை	46	30 (02 ஒப்பந்த)	16	-
இரண்டாம் நிலை	478	428	50	-
ஆரம்ப	1,130	1,623	-	493

6.2 நிறுவனத்தின் செயற்றிறனுக்காக மனித வளம் பயன்படுத்தப்பட்ட முறை

இந்நிறுவனத்தின் நிர்வாகப் பணிகள் மற்றும் கருத்திட்டப்பணிகளை நடத்துவதற்கு சிரேஷ்ட, மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை ஊழியர்கள் இல்லாததால், பல பிரச்னைகளைச் சந்திக்க வேண்டியிரந்தது. இருப்பினும், தற்போதுள்ள மனித வளத்தை அதிகபட்சமாகப் பயன்படுத்துவதன் மூலம், அவற்றை உள்ளடக்குவதற்குத் தேவையான செயற்பாடுகள் கீழ்நிலை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டதோடு அதன் மூலம், நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

ஆரம்ப PL-1 தரத்தில் அதிக எண்ணிக்கையிலான பணியாளர்களுக்கு அனுமதி பெற முகாமைத்துவ சேவைகள் துறையின் ஒப்புதலைப் பெற தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

6.3 மனித வள அபிவிருத்தி

- அகழ்வாராய்ச்சி, பாதுகாப்பு மற்றும் கல்விச் செயற்பாடுகள் தொடர்பான நிறுவனமாக இருப்பதனால், இயன்றவரையில் அதில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் அறிவைப் புதுப்பிக்க உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளை வழங்குவது அவசியம்.

- நிறுவனதத்தின் சட்ட விதிகள், தாபன விதிக் கோவை, நிதி ஒழுங்குவிதிகள் போன்ற அலுவலக நடைமுறைகளைப் பற்றி ஊழியர்களுக்கு சிறிய அறிவு உள்ளமையினால் அவை தொடர்பான அறிவு மற்றும் பயிற்சி முறையாக வழங்கப்பட வேண்டும்.

- ஊழியர்களின் ஊக்கம் மற்றும் செயற்றிறனை அதிகரிப்பதற்கு நல்ல மனப்பான்மை தொடர்ச்சியாக கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதனால், மனப்பாங்கு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்ந்து செயற்படுத்தப்படல் வேண்டும்.

- பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

  அருங்காட்சியகத்திற்கு வருகை தரும் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொல்பொருளியல் ஆய்வாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தகவல் தேடுபவர்களுக்கு கல்வித் தகவல் மற்றும் மாதாந்த விரிவுரைகள்/ கருத்தரங்குகள் என்பன வருடம் முழுவதும் நடத்தப்பட்டுள்ளன.

- பாடசாலைகள் மற்றும் விஹாரைகளில் ஏற்கனவே உள்ள கல்வி நிகழ்வுகள் மற்றும் கண்காட்சிகளுடன், கோரிக்கைகளுக்கு ஏற்ப கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

07. இணக்கப்பாட்டு அறிக்கை

தொட.இ	பிரயோகிக்க வேண்டிய தேவைப்பாடு	இணக்க நிலை (இணக்குகின்றது /இணங்கவில்லை)	இணங்கவில்லை எனின் அது தொடர்பாக சுருக்கமாக விபரித்தல்	இணக்கமின்மையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக பரிந்துரை செய்யப்படுகின்ற துல்லியமான தீர்மானமெடுக்கும் செயன்முறைகள்
1	பின்வரும் நிதிக் கூற்றுக்கள்/கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன			
1.1	வருடாந்த நிதிக் கூற்றுக்கள்	இணங்குகின்றது		
1.2	அரசாங்க உத்தியோகத்தர்களின் முன்பணக் கணக்கு	-		
1.3	வணிகம் மற்றும் உற்பத்தி முன்பணக் கணக்கு(வணிக முன்பணக் கணக்கு	-		
1.4	களஞ்சிய முன்பணக் கணக்கு	-		
1.5	விசேட முன்பணக் கணக்கு	-		
1.6	பிற	-		
2	**பதிவேடுகள் மற்றும் ஆவணங்களைப் பேணல்(நி.ஒ. 445)**			
2.1	அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகளின்படி நிலையான சொத்துப் பதிவேட்டைப் புதுப்பித்தல் மற்றும் பேணல்	இணங்குகின்றது		
2.2	ஊழியர்களின் ஊதியப் பதிவுகள்.: ஊழியர்களின ஊதிய அட்டைகளைப் புதுப்பித்தல் மற்றும் பேணல்	இணங்குகின்றது		
2.3	கணக்காய்வு வினவல் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பேணல்	இணங்குகின்றது		
2.4	உள்ளகக் கணக்காய்வு அறிக்கை ஆவணங்களைப் புதுப்பித்தல் மற்றும் பேணல்	இணங்குகின்றது		
2.5	அனைத்து மாதாந்தக் கணக்குச் சுருக்கங்களையும் (CIGAS) தயாரித்து, உரிய திகதிகளில் திறைசேரிக்கு சமர்ப்பித்தல்	-		
2.6	காசோலை மற்றும் பணக் கட்டளைப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பேணல்	இணங்குகின்றது		
2.7	பொருட்பதிவேட்டைப் புதுப்பித்தல் மற்றும் பேணல்	இணங்குகின்றது		
2.8	கையிருப்புப் பதிவேட்டைப் புதுப்பித்தல் மற்றும் பேணல்	இணங்குகின்றது		
2.9	இழப்புப் பதிவேட்டைப் புதுப்பித்தல் மற்றும் பேணல்			
2.10	வரவுப் பதிவேட்டைப் புதுப்பித்தல் மற்றும் பேணல்	இணங்குகின்றது		
2.11	அடியிதழ்ப் பத்தகப் பதிவேடு (GA-N20) புதுப்பித்தல் மற்றும் பேணல்	-		
3	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான செயற்பாடுகளைக் கையளித்தல்(நி.ஒ 135)**			
3.1	நிதி அதிகாரமுள்ள நிறுவனத்திற்குள் அதிகாரங்களை கையளித்தல்	இணங்குகின்றது		
3.2	நிதி அதிகாரங்களை கையளிப்பது பற்றி நிறுவனத்திற்குள் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.	இணங்குகின்றது		

தொட.இ	பிரயோகிக்க வேண்டிய தேவைப்பாடு	இணக்க நிலை (இணக்குகின்றது /இணங்கவில்லை)	இணங்கவில்லை எனின் அது தொடர்பாக சுருக்கமாக விபரித்தல்	இணக்கமின்மையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக பரிந்துரை செய்யப்படுகின்ற துல்லியமான தீர்மானமெடுக்கும் செயன்முறைகள்
3.3	ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் மூலம் அங்கீகரிக்கப்படும் வகையில் அதிகாரத்தைக் கையளித்தல்	இணங்குகின்றது		
3.4	2014.05.11 ஆம் திகதிய பொதுக் கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 171/2004 இன் படி, அரசாங்க ஊதிய மென்பொருள் பொதியைப் பயன்படுத்தும் போது கணக்காளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படுதல்	-		
4	வருடாந்த திட்டங்களைத் தயாரித்தல்			
4.1	வருடாந்த செயற்பாட்டுத்திட்டங்களைத் தயாரித்தல்	இணக்குகின்றது (வருடாந்தம் மற்றும் காலாண்டு எனும் அடிப்படையில் தயாரிக்கப்படும்)		
4.2	வருடாந்த பெறுகைத்திட்டங்களைத் தயாரித்தல்	இணங்குகின்றது		
4.3	வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்களைத் தயாரித்தல்	இணங்குகின்றது		
4.4	மதிப்பீட்டைத் தயாரித்து தேசிய வரவுசெலவுத் திணைக்களத்திற்கு(NBD) உரிய திகதிக்கு முன்னர் ஒப்படைத்தல்	இணங்குகின்றது		
4.5	வருடாந்த காசுப்பாய்ச்சல் கூற்றை உரிய திகதியில் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தில் ஒப்படைத்தல்	இணங்குகின்றது		
5	கணக்காய்வுக் கேள்விகள்			
5.1	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட உரிய திகதியில் எல்லாக் கணக்காய்வுக் கேள்விகளுக்கும் பதில் வழங்கியிருத்தல்	இணங்கவில்லை	தகவல் சேகரிப்பதில் தாமதம் ஏற்படுவதால், பல சமயங்களில் உரிய திகதிக்குள் பதில்களை சமர்ப்பிக்க முடியவில்லை.	குறித்த திகதியில் பதில்களை சமர்ப்பிக்க தகவல்களைச் சேகரிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
6	உள்ளகக் கணக்காய்வு			
6.1	நி.ஒ. 134(2), ஆண்டின் தொடக்கத்தில் ஆடிட்டர் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்தாலோசித்த பிறகு, உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல்	இணங்குகின்றது		
6.2	ஒவ்வொரு உள்ளகக் கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல	இணங்குகின்றது		

தொட.இ	பிரயோகிக்க வேண்டிய தேவைப்பாடு	இணக்க நிலை (இணக்குகின்றது /இணங்கவில்லை)	இணங்கவில்லை எனின் அது தொடர்பாக சுருக்கமாக விபரித்தல்	இணக்கமின்மையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக பரிந்துரை செய்யப்படுகின்ற துல்லியமான தீர்மானமெடுக்கும் செயன்முறைகள்
6.3	அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளையும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்திருத்தல்.	இணங்குகின்றது		
6.4	நி.ஓ134(4) இன் படி, அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருத்தல்.	இணங்குகின்றது		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்**			
7.1	DMA சுற்றறிக்கை 1-2019 இன் படி, உரிய ஆண்டில் குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் செயற்பட்டுள்ளன்.	இணங்குகின்றது		
8	**சொத்து முகாமைத்துவம்**			
8.1	01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் அத்தியாயம் 07 இன் படி, சொத்துக் கொள்வனவுகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பான கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	இணங்குகின்றது		
8.2	மேற்குறித்த சுற்றறிக்கையின் 13வது அத்தியாயத்தின்படி, மேற்படி சுற்றறிக்கையின் விதிகளை ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான தொடர்பு அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு, அவ் அதிகாரி பற்றிய தகவல்கள் கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.	இணங்குகின்றது		
8.3	அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 05/2016 இன் படி பொருட்கள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அது தொடர்பான அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணங்குகின்றது		
8.4	வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பில் வெளிப்படுத்தப்பட்ட அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	இணங்குகின்றது		
8.5	நி.ஓ 772 இன் படி, பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களைத் தவறாகப் பயன்படுத்தல்.	இணங்குகின்றது		

தொட.இ	பிரயோகிக்க வேண்டிய தேவைப்பாடு	இணக்க நிலை (இணக்குகின்றது /இணங்கவில்லை)	இணங்கவில்லை எனின் அது தொடர்பாக சுருக்கமாக விபரித்தல்	இணக்கமின்மையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக பரிந்துரை செய்யப்படுகின்ற துல்லியமான தீர்மானமெடுக்கும் செயன்முறைகள்
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	கையிருப்பு வாகனங்களுக்கான அன்றாட போக்குவரத்துக் குறிப்புகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து, அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல்.	இணங்கவில்லை	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
9.2	வாகனங்கள் கையகப்படுத்தப்பட்டு 06 மாதங்களுக்குள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டிருத்தல்.	இணங்கவில்லை		
9.3	வாகனப் பதிவுப் புத்தகங்களைப் புதுப்பித்து பராமரித்தல்	இணங்குகின்றது		
9.4	நி.ஒ. 103, 104, 109 மற்றும் 110 இன் படி ஒவ்வொரு வாகன விபத்து தொடரபாக செயற்படுதல்.			
9.5	2016.12.29 ஆம் திகதியிடப்பட்ட அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 2016/30 இன் பந்தி 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி வாகனங்களின் எரிபொருள் பயன்பாட்டை மறுபரிசீலனை செய்தல்.	இணங்கவில்லை		
9.6	குத்தகைக் காலத்திற்குப் பிறகு, குத்தகைக்கு விடப்பட்ட வாகனப் பதிவு புத்தகங்களின் முழு உரிமையும் கையகப்படுத்திக்கொள்ளல்.	-		
10	**வங்கிக் கணக்கு முகாமைத்துவம்**			
10.1	உரிய திகதியில் வங்கி இணக்கப்பாட்டுக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சான்றுப்படுத்தப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.	இணங்குகின்றது		
10.2	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிலிருந்து அல்லது முந்தைய ஆண்டுகளில் இருந்து செயற்படுத்தப்படாத வங்கிக் கணக்குகளின் தீர்வு.	இணங்குகின்றது		
10.3	வங்கி இணக்கப்பாட்டுக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் சரிசெய்யப்பட்ட நிலுவைகள் ஒரு மாத காலத்திற்குள் தீர்க்கப்பட்டுள்ளன.	இணங்குகின்றது		
11	**ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துதல்**			
11.1	மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளை அவற்றின் எல்லைகளை மீறாத வகையில் செலவுகளைச் செய்தல்	இணங்குகின்றது		
11.2	நி.ஒ. 94(1) இற்கு இணங்க, வழங்கப்பட்ட ஒதுக்கீட்டைப் பயன்படுத்திய பிறகு, ஆண்டின் இறுதியில் எஞ்சியுள்ள ஒதுக்கீட்டின் எல்லை மீறாத வகையில் செலவுகளைச் செய்தல்.	-		

தொட.இ	பிரயோகிக்க வேண்டிய தேவைப்பாடு	இணக்க நிலை (இணக்குகின்றது /இணங்கவில்லை)	இணங்கவில்லை எனின் அது தொடர்பாக சுருக்கமாக விபரித்தல்	இணக்கமின்மையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக பரிந்துரை செய்யப்படுகின்ற துல்லியமான தீர்மானமெடுக்கும் செயன்முறைகள்
12	**அரசாங்க உத்தியோகத்தர்களின் முன்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுடன் இணங்குதல்	-		
12.2	நிலுவையில் உள்ள கடன் தொடர்பாக காலப் பகுப்பாய்வு ஒன்றை மேற்கொண்டிருத்தல்.	-		
12.3	ஒரு வருடத்திற்கு மேலாக நிலுவையில் உள்ள கடன் தொகையைத் தீர்த்தல்	-		
13	**பொதுச் சேமிப்புக் கணக்கு**			
13.1	காலாவதியான சேமிப்புக்கள் தொடர்பாக நி.ஒ 571 இற்கு இணங்க செயற்படுதல்.	-		
13.2	பொது வைப்புத்தொகைக்கான நிர்வாகக் கணக்கைப் புதுப்பித்தல் மற்றும் பேணல்.	-		
14	**முற்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வாண்டின் இறுதியில் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு பணக் குறிப்பேட்டின் நிலவையைப் பரிமாற்றம் செய்தல்.	-		
14.2	நி.ஒ 371 இற்கு இணங்க, வழங்கப்பட்ட இடைக்கால தேவை நிமித்த பணிமுற்பணத்தை அப் பணி நிறைவுபெற்று ஒர மாத காலத்திற்குள் தீரக்கப்பட வேண்டும்.	-		
14.3	நி.ஒ 371 இற்கு இணங்க, அனுமதிக்கப்பட்ட வரம்பை மீறக்கூடாது என்பதற்காக இடைக்கால தேவை நிமித்த பணிமுற்பணத்தை வழங்கப்படல்.	-		
14.4	முற்பணக் கணக்கு மீதியை திறைச்சேரியின் பதிவேட்டுடன் மாதாந்தம் இணங்கச் செய்தல்	-		
15	**வருமானக் கணக்கு**			
15.1	உரிய ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப திரட்டிய வருமானத்தின் மூலம் மீள்செலுத்துதலை மேற்கொள்ளல்.	இணங்குகின்றது		
15.2	திரட்டிய வருமானத்தை சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யாமல் நேரடியாக வருமான கணக்கில் பற்று வைத்தல்.	இணங்குகின்றது		
15.3	நி.ஒ 176 இற்கு இணங்க, நிலுவை வருமான அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருத்தல்	-		
16	**மனிதவள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எல்லைக்குள் ஊழியர்களைப் பேணிச்செல்லல்.	இணங்கவில்லை	அனுமதித்த ஊழியர் எண்ணிக்கையை விட அதிகமான ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	அதிகரித்த ஊழியர்கள் எண்ணிக்கை தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியைப் பெற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

தொட.இ	பிரயோகிக்க வேண்டிய தேவைப்பாடு	இணக்க நிலை (இணக்குகின்றது/ இணங்கவில்லை)	இணங்கவில்லை எனின் அது தொடர்பாக சுருக்கமாக விபரித்தல்	இணக்கமின்மையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக பரிந்துரை செய்யப்படுகின்ற துல்லியமான தீர்மானமெடுக்கும் செயன்முறைகள்
16.2	ஆளணியின் எல்லா உறுப்பினர்களுக்குமான கடமைப் பட்டியலை எழுத்து மூலமாக வழங்கி இருத்தல்.	இணங்குகின்றது		
16.3	2017.09.20 ஆம் திகதிய 04/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் படி, எல்லா அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.	இணங்குகின்றது	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு முன்வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பங்கள் உண்டு.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு முன்வைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
17	**பொதுமக்களுக்கு தகவல் வழங்குதல்**			
17.1	தகவல் அறியும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க, தகவல் உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து தகவல் வழங்கும் ஆவணம் ஒன்றைப் புதுப்பித்து பேணிச் செல்லல்	இணங்குகின்றது		
17.2	நிறுவனத்தைப் பற்றிய தகவல்கள் அதன் இணையதளத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளதோடு இணையதளம் மூலமாகவோ அல்லது மாற்று வழிகள் மூலமாகவோ நிறுவனம் குறித்த பொதுமக்கள் பாராட்டுகள்/குற்றச்சாட்டுகளை முன்வைக்க வசதிப்படுத்தப்பட்டுள்ளது.	இ இணங்குகின்றது		
17.3	தகவல் அறியும் சட்டத்தின் 8 ஆம் மற்றும் 10 ஆம் இலக்க உறுப்புரைகளின் படி, வருடத்திற்கு இரண்டு முறை அல்லது வருடத்திற்கு ஒருமுறை அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.	இணங்கவில்லை	அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.	அறிக்கைகளை சமர்ப்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்
18	**குடிமக்கள் சாசனத்தை நடைமுறைப்படுத்தல்**			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 05/2008 மற்றும் 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் படி, குடிமக்கள்/வாடிக்கையாளர் சாசனம் ஒன்றை உருவாக்கி செயற்படுத்தியிருத்தல்.	இணங்கவில்லை	குடிமக்கள்/வாடிக்கையாளர் சாசனம் ஒன்றை உருவாக்கி செயற்படுத்தவில்லை.	எதிர்காலத்தில் தயாரிக்கப்படவுள்ளது.
18.2	குடிமக்கள்/வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல் ஆகியவற்றை கண்காணிக்க மற்றும் மதிப்பீடு செய்வதற்கான முறைமை ஒன்றை நிறுவனங்கள் உருவாக்குதல்.	இணங்கவில்லை	குடிமக்கள்/வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல் ஆகியவற்றை கண்காணிக்க மற்றும் மதிப்பீடு செய்வதற்கான முறைமை ஒன்றை நிறுவனங்கள் உருவாக்கவில்லை.	எதிர்காலத்தில் தயாரிக்கப்படவுள்ளது.

தொட.இ	பிரயோகிக்க வேண்டிய தேவைப்பாடு	இணக்க நிலை (இணக்குகின்றது/ இணங்கவில்லை)	இணங்கவில்லை எனின் அது தொடர்பாக சுருக்கமாக விபரித்தல்	இணக்கமின்மையை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்காக பரிந்துரை செய்யப்படுகின்ற துல்லியமான தீர்மானமெடுக்கும் செயன்முறைகள்
19	**மனித வளத் திட்டத்தை உருவாக்குதல்**			
19.1	2018.01.24 ஆம் திகதியிடப்பட்ட 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் இணைப்பு 02 மாதிரிப் படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டத்தைத் தயாரித்திருத்தல்.	இணங்கவில்லை	மனித வளத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் தயாரிக்கப்படவுள்ளது.
19.2	மேற்குறித்த மனித வளத் திட்டத்தில் ஆளணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் வருடத்திற்கு 12 மணிநேரத்திற்கு குறையாத பயிற்சி வாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.	இணங்கவில்லை	ஆளணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பயிற்சி வாய்ப்பு ஒன்று மனித வளத் திட்டத்தில் உறுதி செய்யப்படவில்லை.	எதிர்காலத்தில் தயாரிக்கப்படவுள்ளது.
19.3	மேற்குறித்த சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ள மாதிரியை அடிப்படையாகக்கொண்டு அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்றிறன் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.	இணங்கவில்லை	அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்றிறன் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படவில்லை.	எதிர்காலத்தில் தயாரிக்கப்படவுள்ளது.
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்தியின் படி, மனிதவள அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல், திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை விருத்தி செய்தல் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல் தொடர்பான பொறுப்புகளை ஒப்படைத்து சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தல்	இணங்கவில்லை	உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படாது இருந்ததோடு, பயிற்சி மற்றும் பட்டறைகள் தொடர்பான நடவடிக்கைகள் நிருவாகப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.	எதிர்காலத்தில் உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து உரிய நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்து செயற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
20	**கணக்காய்வுப் பந்திகளுக்குப் பதிலளித்தல்**			
20.1	கடந்த வருடங்களில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சரி செய்யப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது		